REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

மலர் 19 | சுன்னுகம், விரோதி வை. ககூ (காந்தி ஆண்டு 80) | 1-5-'49, ஞாயிறு | இதழ் 38

**சினிமாப் பாட்டுப் புத்தகங்கள்**

40 விதமான வெவ்வேறு சினிமாப் படங்களின் பாட்டுப் புத்தகங்களில் வகைக்கு 25 வீதம் 1000 புத்தகங்களை ஒரேமுறையில் வாங்குவோருக்கு ரூபாய் 40/- விலையிட்டுக் கொடுக்கப்படும். ரூபாய் 10/- முற்பணமாக அனுப்பி வி. பி. பி. மூலமும் பெற்றுக்கொள்ளலாம்.

த. தம்பித்துரை
நியூஸ் ஏஜெண்ட்
பத்திரிகைகள் கதைப்புத்தகங்கள் முதலியன விற்பனை செய்வோர்
கச்சேரியடி :: யாழ்ப்பாணம்
கிளை :- பெரியகடை :: யாழ்ப்பாணம்

# பல்லாண்டுத் தொடர்பு

## கூண்டோடு கடத்தலாமா?

**சாம்ராச்சியப் பிரதமர்களின் மகாநாடு முடிவடைந்த பின்னர் இலங்கைப் பிரதமர் சேனநாயகா லண்டனில் விடுத்துள்ள செய்தி சுவையாக இருக்கின்றது.**

**இலங்கைக்கும் இந்தியாவுக்குமுள்ள பழைய தொடர்புகளையும் அவர் ஞாபகமூட்டியிருக்கின்ருர்.**



கடந்த பன்னிரண்டு மாதங்களாக இலங்கை சாம்ராச்சிய நாடுகளுடன் அங்கத்துவம் பூண்டு வந்திருக்கின்றது எனக் கூறிய பிரதமர் ஸ்ரீ சேனநாயகா, இந்தியாவின் தொடர்பைப்பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் கலாசாரம் கடந்த 2,000 வருடகாலமாக இந்தியாவுடன் இணைந்து வந்துள்ளது. இப்போது இலங்கையும் சாம்ராச்சிய நாடுகளுடன் சேர்ந்து நிற்பதால் இரு நாடுகளினதும் அரசியல் தொடர்பானது மீண்டும் வலிமை பெறுவதுடன் பழங்காலத்துப் பண்புகளும் உரம் பெறுகின்றன.

#### தாயின் சுதந்திரம்

இந்நிலையில் இலங்கை ஓரளவுக்குச் சுதந்திரம் பெறுவதற்கு இந்தியாவும் காரணமாக இருந்ததென்பதையும் பிரதமர் சேனநாயகா ஒருபோதும் மறக்கமுடியாது. இந்தியா நடாத்திய சுதந்திரப் போரே, இலங்கைக்கு அரசியற் சுதந்திரத்தைத் துரிதப்படுத்தியதெனக் கூறினால் அது மிகையன்று. சமீபத்தில் இலங்கைக்கு விஜயம் செய்த இந்தியத் தலைவர்களும் இதனை ஞாபகமூட்டியிருந்தனர். இது விஷயம் ஒரு சில சிங்கள அரசியல் வாதிகளுக்குக் கசப்பையூட்டியிருக்கின்றதெனத் தெரிகின்றது. எனவே, சென்ற வியாழக்கிழமை மாலை பிரதிநிதிகள் சபை அங்கத்தினருக்கு ஸ்ரீ கிருபளானி அவர்கள் சொற்பொழிவாற்றியபோது பிரதிநிதிகளிற் பலர் பிரசன்னமாயிருக்கவில்லை. இந்தியத் தலைவர்களின் காரசாரமான வார்த்தைகள் அவர்களின் உள்ளங்களை யெல்லாம் புண்படுத்திவிட்டதெனத் தெரிகின்றது.

மந்திரிமார் மாத்திரம் சுதந்திரத்தை அனுபவித்தாற் போதாது, மக்களும் அதை நன்கு அனுபவிக்க வேண்டுமென ஸ்ரீ கிருபளானி தமது பேச்சிற் குறிப்பிட்டார்.

பிரஜாவுரிமைச் சட்டம் சம்பந்தமாக அவர் கூறியதாவது: இச்சட்டமானது சுரண்டப்பட்டோர்களையே நன்கு ஆக்கிரமிக்கின்றது. ஆனால் சுரண்டுபவர்களை இச்சட்டம் திரும்பியும் பார்ப்பதாயில்லை.

#### ஹற்றன் தீர்மானம்

ஹற்றனில் இலங்கை-இந்தியர்கள் பிரஜா உரிமைச் சட்டத்தைப் பகிஷ்கரிக்க வேண்டுமெனத் தீர்மானித் திருக்கின்றனர்.

இலங்கை — இந்தியச் சிக்கல் எப்பவோமுடிந்தகாரியமெனப் பிரதமர் சேனநாயகா குறிப்பிட்டார். இதுபற்றி தினசரி ஆசிரியர் டி. எஸ். சொக்கலிங்கம் அவர்கள் தெரிவித்ததாவது: இலங்கைப் பிரதமர் எவ்விதமான அபிப்பி

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணம் வைத்தியசாலை

## அலங்கோல நிலைமை

யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையின் சீர்கேடுகளைப்பற்றியும், அங்கு சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்கள் படுத் துறங்குவதற்குப் போதிய இடவசதியில்லாமல் அவஸ்தைப் படுவதைப் பற்றியும் சென்ற சில வருடகாலமாகப் புகார்கிளம்பிவருகின்றது.

சமீபத்தில் வண்ணார்பண்ணையில் நடைபெற்ற ஒரு பகிரங்க கூட்டத்தில், மீண்டும் யாழ்ப்பாணத்து அரசாங்க வைத்தியசாலையின் அலங்கோலங்களை யாழ்ப்பாணம் நகரசபை அங்கத்தவர்களில் ஒருவரான ஸ்ரீ ரீ. எஸ். துரைராஜா அவர்கள் எடுத்துரைத்ததுமன்றி, அன்று தலைமை வகித்த மேயர் சாம். சபாபதி அவர்களையும் இதுவிஷயத்தில் மிகுந்த அக்கறை எடுக்கும்படியும் வேண்டிக்கொண்டார்.

இலங்கையின் முக்கிய நகரங்களில் ஒன்ருக விளங்கும் யாழ்ப்பாணத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலையின் குறைபாடுகள் ஒன்று இரண்டல்ல. முறையாகப் பயிற்சி பெற்ற சத்திர வைத்தியர் ஒருவர், இங்கு மாதக்கணக்காக இல்லை. நோயாளர் மருந்து பெற்றுச் செல்வதற்கென அதிக செலவில் அமைக்கப்பெற்ற கட்டடங்கள் இன்றுவரை திறக்கப்படவில்லை. கண், பல் நோய்களைப் பரிசோதித்துச் சிகிச்சையளிக்கும் நிலையங்களிற் போதியளவு உபகரணங்கள்தானும் இல்லை. மாகாண வைத்தியசாலையொன்று இப்படிச் சீரழிவது வெட்கமான ஒரு விஷயமாகும்.

இவற்றையெல்லாம் சுகாதார மந்திரிக்குத் தெரிவித்து ஆகவேண்டியவற்றைச் செய்யுமாறும் குறித்த பேச்சாளர் மேயர் அவர்களை வேண்டிக்கொண்டார்.

# இது சுவர்க்க பூமி!

## உதவி மந்திரி வீற்றிருந்தார்

### கொழும்பு—நிருபர் கடிதம்—



29-4-49

சிங்களத்தீவு என்று பாரதியாராலும் பாடப் பெற்ற இலங்கையானது, உண்மையாகவே ஒரு சுவர்க்க பூமிதான். ஆனால், இது சிறப்பாக ஒப்பந்தகாரரின் உல்லாச பூமியாகவும் விளங்குகின்றதெனக் காலிப் பிரதிநிதி தஹநாயகா குறிப்பிட்ட பின்னர், 'அடடா! இது என்ன அநியாயம்!' என்று சொல்ல வேண்டியதாயிற்று.

அரசாங்கக் கட்டடவேலைகளை ஒப்பந்தம் பேசிச் செய்து முடிக்கும் 'கொன்ருக்டர்' களைத்தான் தோழர் தஹநாயகா சென்ற புதன்கிழமை பிரதிநிதிகள் சபையில் இழுத்திருந்தார். இலங்கையில், ஒப்பந்தகாரர்கள் பணந் திரட்டுவதுபோல் வேறு எந்த நாட்டிலாவது பணந்தேட முடியாதென அவர் தெரிவித்தபோதுதான், 'இலங்கை ஒப்பந்தகாரரின் சுவர்க்கம்' என அவர் கூறினர். இது உண்மை பொதிந்த வாசகமென்று ஒப்பந்தகாரர்களே ஒப்புக்கொள்ளுவார்கள்.

#### இலாபம் யாருக்கோ

அரசாங்கத் திட்டங்களைத் தனிப்பட்டவர்களிடம் ஒப்படையாது அரசாங்கமே பொறுப்பேற்று நடத்தவேண்டுமென்ற பிரேரணையை ஸ்ரீ ஹெபேட் குணவர்த்தன சபையிற் சமர்ப்பித்தபோதுதான், ஒப்பந்தக்காரரின் உல்லாச வாழ்க்கையின் இரகசியம் அம்பலமாயிற்று.

தொழிலாளர்கள் அனுபவிக்க வேண்டிய இலாபங்களைத்தையும் வேறு யாரோ சிலர் அனுபவித்து வருகின்றனர் எனவும் அவர் சிங்களத்திற் பேசும்போது குறிப்பிட்டார்.

விவசாய மந்திரி டட்லி சேனநாயகா சிற்சில வேளைகளில் வெகு சாமர்த்தியமாகப் பேசி எதிரிகளின் துடுக்கை அடக்கிவைத்துவிடுகின்ருர். கல்லோயாத் திட்டத்தை ஒப்பந்தமாகக் கொடுத்தபோது அங்கத்தினர் ஒருவரும் ஆட்சேபிக்கவில்லையே என அவர் ஆச்சரியத்துடன் பேசினர். நாட்டிலே அனுபவமிக்க நிபுணர்கள் இல்லாத காரணத்தால் ஒப்பந்தகாரரின் தயவை நாடவேண்டியிருக்கின்றதென்பதே அவர் கூறிய சமாதானமாகும். இதனிலும்பார்க்க மந்திரி டட்லி அவர்கள் தமது கட்சிக்கு ருஷியாவையே ஆதாரமாகச் சுட்டிக்காட்டித் தூங்கிக்கிடந்த சபையையும் உற்சாகமூட்டிவைத்தார். சோவியத்து ருஷியாவில் ஒரு அணை கட்டப்பட்டதெனவும், அது இடிந்து விழ்ந்தபோது அமெரிக்கரிடம் ஒப்பந்தத்துக்குக் கொடுத்து அணையைக் கட்டி முடித்தனர் எனவும் விவசாய மந்திரி தெரிவித்திருந்தார். தோழர் கெனமன்கூட இதை மறுக்க முடியவில்லை!

#### அலிஸ்நோனு

'பாஸ்போட்' என்று சொல்லப்படும் கடவுச்சீட்டுப் பிறநாட்டுக்குப் பிரயாணமான அலிஸ்நோனு என்னும் பெண்மணிக்கு இலங்கை அரசாங்கம் வழங்கியிருந்தது. ஆனால் அப் பெண் அவுஸ்திரேலியாவில் இறங்கி அங்குள்ள அற்புதங்களைப் பார்க்க விரும்பியபோது அவர் அவ்வாறு நடந்துகொள்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டதாம். இது விஷயத்தைத் தோழர் தஹநாயகா அரசாங்கத்துக்கு ஞாபகமூட்டினர். அரசாங்கம் இதுபற்றி விசாரணை நடாத்துகின்றதென்ற பதில் அவருக்குக் கிடைத்தது.

#### தவருன செய்தியா?

சில வருடகாலமாக அரசாங்கம் தொகையான பணச் செலவிற் பூமி திருத்திப் பயிர் செய்துவருவது நாடறிந்த கதையாகும். இத் துறையில் எண்ணெய்ச் செலவே யன்றிப் பிள்ளை வளர்ப்பு மருந்துக்கும் கிடையாது. அப்படியிருந்தும் அந்தக் காலத்தில் விவசாய மந்திரியாகப் பதவி வகித்த ஸ்ரீ சேனநாயகா இத் துறையிற் பணத்தை அள்ளித் தெளித்துவந்துளர். அவர் பிரதமராக உயர்ந்த பின்னர் மகனிடம் தமது பழைய தொழிலை ஒப்படைத் திருந்தார். மகன் டட்லி அவர்களும் தகப்பனின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வெட்டி விழுத்துகின்ருர். இந்நிலையிற் சில தினங்களுக்கு முன்னர் இங்குள்ள ஆங்கிலத் தினசரி ஒன்று, அரசாங்கம் விவசாய நிலங்களைத் தனிப்பட்டவர்களிடம் ஒப்படைக்க உத்தேசித்திருக்கின்றதென முற்பக்கத்திற் பிரசுரித்திருந்தது. இப்படிச் செய்வதால் அரசாங்கத்துக்குப் பண மிச்சமும் அதிகப்படுமெனவும் அப் பத்திரிகை கூறியது.

இதைப் படித்தவர்கள் தங்கள் கண்களை நம்பத் தயங்கியதுபோலவே, குருநாக்கல் பிரதிநிதி ஸ்ரீநிசங்கா அவர்களும் தயங்கியிருக்கின்ருர். இல்லாதுபோனல் அவர் அச் செய்தி உண்மைதானு என்று விவசாய மந்திரியை அன்று பிரதிநிதிகள் சபையிற் கேட்டிருக்கமாட்டார். "அதுகதை உண்மைதானே?" என்று அவர் கேட்டபோது, "யார் சொன்னது; அரசாங்கத்துக்கு அந்தயோசனையே இல்லை. பத்திரிகை விளாசிய விஷயம் அத்தனையும் சுத்த அபத்தம்" என விவசாய மந்திரி தமது சக்தி முழுவதையும் பிரயோகித்துப் பதில் அளித்தார்.

#### வீண் பீதி

சென்ற திங்கட்கிழமை மாலை காலிமுக மைதானத்தில் இலங்கை இந்தியர் காங்கிரஸின் சார்பில் இந்தியத் தலைவர்களான, ஸ்ரீமான்கள் கிருபளானி, காமராஜ் நாடார் டி. எஸ். சொக்கலிங்கம் யோஷி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்கள். இலங்கைமீது படையெடுத்து அதைக் கைப்பற்றவேண்டுமென்ற எண்ணம் இந்தியாவுக்குச் சிறிதளவுங் கிடையாதென ஸ்ரீ கிருபளானி கூறியதுமன்றி இலங்கை பயப்படவேண்டியதில்லை யெனவும் குறிப்பிட்டார்.

இதேமாதிரித்தான் ஏனைய தலைவர்களும் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே ஆண்டுக்கணக்காக நிலவிவரும் நல்

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊ..........ர் வதந்தி



● கொண்டோடி ●

- மன்னார் மக்களை மந்திரி ஏமாற்றிவிட்டாராம்.
- மன்னார் மக்கள் மந்திரி பொன்னம்பலத்தை வரவேற்கக் காத்திருந்தனராம்.
- ஆனால் அத்தனை பேரையும் அவர் பேய்க்காட்டி விட்டாராம்.
- மந்திரி தந்தியாவது மன்னாருக் கனுப்பினராம்.
- மந்திரி வந்தாலென்ன, மந்திரியின் தந்தி(ரி) வந்தாலென்னவாம்.
- வந்தவர்கள் வரட்டும், நாம் சும்மா இருப்போம் என்று சிலர் சொல்லுகிறார்களாம்.
- மலாயாவிலிருந்து இலங்கை ரோயல் தொழிலாளர்படையினர் இலங்கைக்குத் திரும்பி வந்துவிட்டனராம்.
- பெரும்பாலோர் விவசாயிகளாகலாமாம்.
- உலகத்தில் மனிதர் படும் பாடு, எடுத்துக் கூறுதற்குக் கஷ்டமாம்.
- மறு உலகத்திற்குப் போக ஒரு சாமியார் இருந்தாராம்.
- இச் சாமியார் 66 நாட்கள் உண்ணுவிரதமிருந்தாராம்.
- கனவிற் கதிர்காமத்தான் தோன்றினாராம்.
- மறு உலகத்துக்குப் போக இன்னும் சிலநாட்கள் இருப்பதாகக் கதிர்காமத்தான் கூறினாராம்.
- ஆகையால் நாராயணம் ராமப்பிள்ளைச்சாமியார் உண்ணுவிரதத்தைவிட்டுவிட்டாராம.
- கதிர்காமத்தையன் திருவருள்களிலு மிதொன்றும்.
- சாராயமும் வெகு பிரபல திருவருட்கள் புரியுமாம்.
- சீதுவை என்ற ஊரில் சாராய வடிநிலையத்தை இலங்கைச் சுதந்திர அரசாங்கம் நிறுவியிருக்கிறதாம்.
- எதிர் பார்த்தபடி கள்ளு அபரிமிதமாகக்கிடைக்குமானல்சாராயமும்பெருகுமாம்.
- வருடம்ஒன்றிற்குமூன்றுலக்ஷம்சாராயங்கிடைக்குமாம்
- யாழ்ப்பாணத்தவர்களும் இதையொட்டிச் சில திட்டங்கள் போடுகிறார்களாம்.
- வருஷமொன்றுக்கு 3 வருடப்பிறப்பு, 5 தீபாவளிப் பெருநாள் முதலிய பண்டிகைகளை ஏற்படுத்தத் தீர்மானித்திருக்கிறார்களாம்.
- இத்தீர்மானத்தை ஏகமனதாக பிரதிநிதிச்சபை ஆதரிக்குமென்றே எதிர் பார்க்கப்படுகிறதாம்.
- கூட்டுப் பிரார்த்தனைகளும் எதிர்பார்த்தபடியே நடைபெற்றனவாம்.
- மகாறை, வெலிக்கடை முதலிய சிறைச்சாலைகளில் மறியற்காரர் இருக்கிறார்களாம்.
- இதிலும் சைவப் பெரியார்களும் இருக்கிறார்களாம்.
- சைவ மறியற்காரரைப் பக்தி சிரத்தையாக்கத்தான் கூட்டுப் பிரார்த்தனை நடக்குமாம்.
- பின்வரும் சப்பவத்தை நோக்கி ஒரு கூட்டுப் பிரார்த்தனை வைத்தாலென்னவாம்.
- சாதாரண வைத்தியர்களுக்கும் மிருக வைத்தியர்களுக்கும் சம்பளததில் வித்தியாசமிருக்கிறதாம்.
- இதனல் மிருக வைத்தியம் படிக்கப்போகும் மாணவர்களுக்கு மிருக வைத்தியம் படிக்க விருப்பமில்லையாம்.
- மிருகங்களுக்குத் தானே இவர்கள் வைத்தியம் செய்கிறார்கள் என்று அரசாங்கம் எண்ணியிருக்கலாமாம்.
- இலங்கையைப் பிரிக்க எண்ணுவது பெரும் மடைத்தனமாம்.
- இப்படியாக ஆச்சார்ய கிருபளானி கூறினாராம்.
- இலங்கை ஒரு தாமரைப்பூ போலவாம்.
- ஆகையால் அதைப் பிரிக்க எண்ணுவதே மிகப் பிழையாம்.
- இதை யாழ்ப்பாணத்துப் பெரியார் கொஞ்சமாவது கவனிக்க வேண்டுமாம்.
- இதையும் சிறிது கவனிக்கும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறதாம்.
- சாம்ராச்சிய பிரதமர்கள் உட்கார்ந்திருக்க இங்கிலாந்திற் படம் பிடித்தார்களாம்.
- அதில் பிரதமர் அட்லி அவர்களின் வளர்ப்பு நாயும் உட்கார்ந்திருந்ததாம்.
- அந்த நாய்க்கு வந்த நடப்பை எண்ணிச் சிலர் மனஸ்தாபப்படுகிறார்களாம.
- மந்திரி சிற்றம்பலத்திற்கும் பெரிய நடப்புநடக்கிறதாம்.
- மன்னாரிலிருந்து வங்காலை 5 மைல் தூரமாம்.
- வங்காலையிலிருந்து டெலிபோன் மூலம் இலங்கை முழுவதும் இப்பொழுது பேசலாமாம்.
- இதை மந்திரி சிற்றம்பலம்தான் திறந்து வைத்தாராம்.


வெளிவந்துவிட்டது — 2-ம் பதிப்பு

# மொழிப் பயிற்சி

[3-ம் புத்தகம்]

முதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி

4-ம், 5-ம் வகுப்புகளுக்கேற்ற இலக்கணப் பகுதிகள் முழுவதும் இந்நூல்மூலம் கற்பிக்கப்பட வசதியுண்டு. பெயராயும் வினையாயும் வருஞ் சொற்கள், ஒரு பொருட் பல சொல், சொற்புணர்ச்சி, எழுவாய், பயனிலை, வேற்றுமை, செய்வினை செயப்பாட்டு வினை, முதலிய வினை வகைகளும், பலவித பயிற்சிகளும் இதில் அடங்கியிருக்கின்றன.

விலை ரூபா 1-00 தபாற்செலவு வேறு

சுன்னுகம் : தனலக்குமி புத்தகசாலை



சிறந்தபலனுக்கு

# C. C. C. புகையிலைப்பசளை

கொழும்பு கொம்மேர்ஷல் கொம்பனியார் இரண்டு விதமான வெவ்வேறு கலவைகள் எங்களால் தயாரிக்கப்பட்டுக் கொடுக்கப்படுகின்றன. ஒன்று சப்புகிற புகையிலைக்கு வேண்டிய மாதிரியிற் பிரத்தியேகமாகக் கலவை செய்யப்படுகிறது. மற்றது சுருட்டுப் புகையிலை அல்லது குடி புகையிலைக்கு வேண்டிய மாதிரியில். இவ்விரு கலவைகளும் தோற்றத்தில் அதிக வித்தியாசமுடையவை. கமக்காரர்கள் தங்கள் தேவைக்கு எழுதும்போது தாங்கள் பசளையிடப்போகும் புகையிலை (மேலேகாட்டிய) எந்த வகையைச் சேர்ந்ததென விபரமாகக் கூறவேண்டும்

C. C. C.

கொழும்பு கொம்மேர்ஷல் கொம்பனி லிமிற்றெட்

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றியவிபரங்களுக்கு உடனே எழுதவும்.

The **Colombo Commercial Company** LIMITED.

INCORPORATED IN GREAT BRITAIN LIABILITY OF MEMBERS Ltd.

(3647)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பரும் வான்மீகியும்

# சுக்கிரீவனின் பரபரப்பு

பம்பைப் பொய்கையின் கரைவழியாக இராமனும் இளையோனும் அவ்விடங்களினழகை அனுபவித்தவண்ணம், இருசிய மலையை நோக்கிச் செல்லுகிறார்கள். சீதையை நினைந்து வாடும் இராமனை இலக்குவன் தேற்றிய வண்ணம் நடக்கிறான்.

அவ்வாறு வந்து கொண்டிருக்கும் அற்புதத் தோற்றத்தவரை வானரத் தலைவனாகிற சுக்கிரீவன் கண்டு பயந்து ஒன்றுஞ் செய்ய மாட்டாது நின்றுவிடுகிறான்:

தௌ ரிச்ய மூகஸ்ய ஸமீபசாரீ
சாந் ததர் சாத்புத தர்சநீயௌ
சாகாம்ருகாணாம் அதிபஸ்தரஸ்வீ
விதத்ரஸே நைவ விசேஷ்ட
சேஷ்டாம்

இச் சுலோகத்தைத் தழுவிக் கம்பர் இவ்வாறு கூறுகிறார்.

எய்தினர் சவரி நெடிது
ஏயமால் வரை யெளிதின்
நொய்தின் ஏறினர், அதனில்
நோன்மை சால் கவியரசு
செய்வதோர்கிலன் இவர்கள்
தெவ்வராம் என வெருவி,
'உய்தும்நாம்' எனவிரைவின்
ஓடினான் மலை முழையின்

'மால்வரை' இங்கு இருசிய மூகம். அங்கு, 'சாகாம்ருகாணாம் அதிபஸ்தரஸ்வீ', வானரத் தலைவனாகிற பலசாலி என்கிறார் சுக்கிரீவனை. இங்கு கம்பர், நோன்மைசால் கவியரசு என்கிறார். சுக்கிரீவன் இவர்களைக் கண்டு பயந்ததை, 'இவர்கள் தெவ்வராமென வெருவி செய்வதோர்கிலன்' என்கிறார் கம்பர். இதையே வான்மீகியும், விதத்ரஸே நைவ விசேஷ்ட சேஷ்டாம்', பயந்து ஒன்றுஞ்செய்யமாட்டாதுநின்றான் எனக் கூறினார்

சுக்கிரீவன் மலைமுழையினுழைந்ததை வான்மீகி சிறிது வேறுபடக் கூறுகிறார்:

'ஜக்முர் கிரிதடாத் தஸ்மாத்
அந்யத் சிகரம் உத்தமம்'

அதாவது, அந்தச் சிகரத்தைவிட்டு வேறோர் உயர்ந்த சிகரத்தை யடைந்தார்கள் என்பது பொருள். இதைக் கம்பரும்,

தாரன் நீலனை மருவு
தாம மாருதியை முதல்
வீர ரோடிரவி சுதன்
மேரு மால்வரையை நிகர்
பார மாமலையின் ஒரு
பாகம் ஓடுதல் புரிய

என விளக்குகிறார்.

இராமனைக் கண்டு, தான் பயந்ததின் காரணத்தைச் சுக்கிரீவன் தனது மந்திரிகளிடம் கூறுகிறான்:

ஏதௌ வநமிதம் தூர்க்கம்
வாலி ப்ரணிஹிதௌ த்ருவம்
சத்மநா சீரவஸநௌ
ப்ரசரந்தௌ இஹாகதௌ'

'இவ்விருவரும் வாலியினால் ஏவப்பட்டு வந்திருக்க வேண்டும். இது நிச்சயம். இவர்களுடைய மரவுரி யாடை வெறும் வேஷம். இவர்கள் ஒற்றுக்காகவே இங்கு வந்திருக்கிறார்கள்.'

கம்பரும் ஏறக்குறைய அவ்வாறே கூறுகிறார்.

'கால மாமதலை! இவர்
காண்மினோ நறுவுடைய
வாலியேவலின் வரவினர்கள்
தாம் வரிசிலையர்
நீலமால் வரையனையர்
நீதியா நினைமின்' என
மூல மோர்கிலன் மறுகி
ஓடினான் முழையதனின்.

இவ்வாறு பயந்த சுக்கிரீவனை அனுமன் தேற்றுகிறான். ஆனால் சுக்கிரீவன் தருந்தகாரணங்களைக்கொண்டு அனுமனை ஆக்ஷேபிக்கிறான்:

தீர்க்கபாஹூ விசாலாக்ஷௌ
சரசாபாஸி தாரிணௌ
கஸ்ய நஸ்யாத் பயம் த்ருஷ்ட்வா
ஹ்யேதௌ ஸுரஸுதோபமௌ'

'தோள் வலிமை பெற்றவர்களாய், பரந்த விழி யுள்ளவ

**கே. எஸ். கே.**

ராய், அம்பு, வில் முதலிய ஆயுதமேந்தியவராய், தேவமைந்தர் போன்ற இவர்களைக் கண்டால், யார்தான் பயப்படமாட்டார்கள்?'

வாலி ப்ரணிஹிதௌ ஏவ
சங்கேஹம் புருஷோத்தமௌ
ராஜாநோ பஹுமித்ராச்ச
விச்வாஸோ நாத்ர ஹிக்ஷம:

'இச் சிறந்த வீரர்கள் வாலியினால் ஏவப்பட்டவர்களாகவே இருக்கவேண்டும் என்று நினைக்கிறேன். அரசர்களுக்குத் துணைவர் பலர். ஒன்றுமில்லையென்று நம்பியிருக்கலாகாது!'

க்ருத்யேஷு வாலீ மேதாவீ
ராஜாநோ பஹுதர்சிநோ
தௌ த்வயா ப்ராக்குதேநேவ
கத்வா ஞேயோ ப்லவங்கம!

'அதிலும் வாலி காரியங்களில் கைதேர்ந்தவன். அதனால் நீ போய் அறிந்து வருவது நல்லது' என்று அனுமனை ஏவுகிறான்.

அவ்வாறு ஏவப்பட்ட அறிவாற் சிறந்த அனுமன்,

ததஸ் ஸ ஸம்பூஜ்ய வசஸ் து தஸ்ய
கபேஸ் ஸுபீதஸ்ய தாஸதஸ்ய
மஹாநுபாவோ ஹநுமாந் யயௌ
ததா
ஸயத்ராமோ அதிபலீ ஸலக்ஷ்மண:

'மிகவும் பயந்தவனும், வலிமை மிகுந்தவனுமான சுக்கிரீவனது வார்த்தையை மெச்சி, இராமனும் இலக்குவனும் இருக்கின்ற இடத்திற்குச் சென்றான்.

அவ்வாறு வரும் அனுமன் தனது உருவத்தை மாற்றிப் பிரமசாரி வேடம் பூண்டு வருகிறான். அதைக் கம்பரும்,

'அஞ்சனைக் கொருசிறுவன்
அஞ்சனக் கிரியனைய
மஞ்சனைக் குறுகி, ஒரு
மாணவப் படிவமொடு,
வெஞ்சினத் தொழிலர், தவ
மெய்யர், கைச் சிலையர், என
நெஞ்சயிர்த்து, அயன்மறைய
நின்று, கற்பினில் நினையும்'

என்று வருணிக்கிறார். இராமலக்ஷ்மணரை யணுகிய அனுமன், மறைவாக நின்றுகொண்டு, 'கொடிய கோபத் தொழிலராகக் காணப்படுகின்றார். ஆனால், தவக்கோலம் பூண்டிருக்கின்றார். வில்லுங் கையுமாக விருக்கிறார்' என்று நெஞ்சயிர்க்கிறான்.

இங்கு வான்மீகிக்கும் கம்பருக்கும் ஒரு வேற்றுமை காணக் கிடக்கின்றது. அனுமன் மனதில் எண்ணியதாகக் கம்பர் கூறியவற்றை வான்மீகி நேரில் வினவியதாகக் கூறுகிறார்.

# கள்ளுண்போர் காட்சி

— யாழ்ப்பாணன் —

நாடெலாம் கள்ளின் நாற்றம் நாற்றிசை சூழும் வேலிக்
கூடெலாம் பிழாக்கள் போத்தல் குடியர்க ளங்கு கூடித்
தேடிய பொருளை யெல்லாம் சிதைத்தவர் குடித்த லாலே
சாடியா யுந்தி விங்கும் சதமுமிக் காட்சி காண்பீர்.

மதுவினைக்குடித்துமாந்தி வழியெலாம்ஆட்டம்போட்டு
எதிர்வரும் மக்க ளோடும் எந்திரம் பலவற் றோடும்
நிதமுமே மோதி நிற்பர் நிலத்தினிற் புரள்வ ரன்னார்
விதவிதக் காட்சி காட்டி வேடிக்கை செய்வர் மன்னோ.

கோயிலிற் குடியர் கூட்டம் குளத்தினிற் குடியர் கூட்டம்
வாயிலிற் குடியர் கூட்டம் வழியெலாம் குடியர் கூட்டம்
நாயெனத் திரியுங் கூட்டம் நரியெனத் திரியுங் கூட்டம்
பேயெனத்திரியுங்கூட்டம் பெருகுதல்நாளுங்காண்பீர்.

கூத்திகள் வீச்சுக் காணும் கம்புகள் பறக்கக் காணும்
உத்தமக்குணங்களெல்லாம் ஊரைவிட்டோடக்காணும்
நித்தியம் சண்டை காணும் நெடும்பகை வளரக்காணும்
அத்தனை கோரக் காட்சி அரியநம் நாட்டிற் காண்பீர்.

மனையவள்நடுக்கங்காணும் மக்களும்நடுக்கங்காணும்
இனமதும்நடுக்கங்காணும் எழிலுடல்நடுக்கங்காணும்
தனமதும் நடுக்கங் காணும் சாத்திரம் நடுக்கங் காணும்
கனிவதும்நடுக்கங்காண மக்கள்கள்ளருந்தல்காண்பீர்.

பிணமெனக்கண்டோரஞ்சப் பேயெனக்கண்டோரஞ்சப்
பணமது மிவரை யஞ்சப் பண்புகள் பாரி லஞ்ச
அணிமிகு மக்க ளஞ்ச அருமனை தாமு மஞ்சக்
குணமது மிவரை யஞ்சக் கோலங்கள் மாறிக் காணும்.

வழக்குகள் வளரக் காணும் வாதுக்கள் வளரக் காணும்
பழிப்புகள்வளரக்காணும் பைந்தொடிவாட்டங்காணும்
செழிப்புகள் சிதறக் காணும் செல்வமும் சிறுகக் காணும்
வழுத்துமெந் தலைவர் கூடி வகுத்தநல் வழக்கத் தாலே!

# ஏட்டுச் சுவடிகள்

## தமிழரின் ஞானச் செல்வம்

**திருவாரூரில் நடைபெற்ற தமிழ்த் திருநாளின்போது வரவேற்புரை நிகழ்த்திய ஸ்ரீ சர்தார் வேதரத்னம் அவர்கள், ஞானச்செல்வமாகிய தமிழ்ச் சுவடிகளை அழியவிடாமல் அச்சிட்டுப் பதிப்பிக்க வேண்டுமென வற்புறுத்தியதுடன், தமிழ் வளர்ச்சிக்கு ஊறுசெய்யும் இரு குறைபாடுகளையும் கண்டித்தார். இனிப் படியுங்கள்:**

புதிய நூல்களை ஆக்குவதோடு நின்று விடுதல் கூடாது. புதையல்கள் மண்ணில் மறைந்து கிடப்பது போற் பழங்கால நூல்கள் பல ஏட்டுச்சுவடிகளில் எழுதப்பட்டபடியே மூலைமுடுக்குகளில் கிடந்து உக்கி மக்கிப் போகின்றன. அவற்றின் அருமை தெரியாது மக்கள் மடிந்து இருக்கின்றனர். அவை ஜீரணமாகக் கூடியகாலம் வந்துவிட்டது. இந் நூல்களுக்கு உயிர் கொடுப்பதில் உடனடியாக நம் தமிழ் மக்களின் கவனம் செல்லாவிடில் நம்முடைய கவனக்குறைவால் இந்தப் பொக்கிஷங்களும், முதல் இடை, கடைச் சங்க நூல்கள், உலக நாகரீகத்திற்கே பிறப்பிடமாகித் திகழ்ந்த லெமூரியா கண்டம் கடல் கோட்பட்டபோது அழிந்தது போல், நமகண்ணுக்குப் புலப்படாமல் மறைந்து மடிந்து போய்விடும். இந்நூல்களைத் தேடிப்பிடிக்க ஒவ்வொரு ஆண்டிலும் ஏட்டுச் சுவடி வாரம் ஒன்று கொண்டாட ஏற்பாடு செய்ய வேண்டும். அங்நாட்களில் நாட்டின் பல்வேறிடங்களிலும் மறைந்து கிடக்கும் சுவடிகளைச் சேகரிக்க வேண்டும். அப்படி சேகரிக்கப் பட்டவைகள் கெடுமுன் அவைகளுக்கு நகல்கள் தயாரிக்கவேண்டும். அவற்றுள் தகுதி வாய்ந்தவற்றை அச்சிட்டு வெளியிடவேண்டும். பல மொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிடத்தக்க தகுதி வாய்ந்த நூல்கள் பல அவற்றில் உண்டு. இத்துறையில் உலகத்திலேயே வேறெங்குமில்லாத பெரிய பொக்கிஷம் எங்கள் தலை நகராகிய தஞ்சையில் உள்ள சரஸ்வதி மகால் ஆகும். இம் மாபெரும் பொக்கிஷத்தைச் சுயநலத்திற்காக அல்லாமல், பிறருக்குப் பயன்படாது புதைத்துவைப்பதற்கும அல்லாமல் எதிர்காலச் சந்ததியாரின் நன்மையையே குறிக்கோளாகக் கொண்டு சேமித்து வைத்த மகா ராஷ்டிர மன்னன் சரபோஜியின் பெருமையை என்னென்று வர்ணிப்பது. சரபோஜியின் உள்ளத்தில் குடிகொண்டிருந்த இந்தக் கலையார்வத்தின் ஒரு சிறு பகுதியாவது நம் மக்கள் உள்ளத்திலும்அரசாங்கத்தினிடத்திலும் குடிகொள்ளுமாயின் இந்த பொக்கிஷம் உலகத்தில் ஒரு ஜோதியாக மிளிரும். சரபோஜியின் ஆத்மாவும் அமைதி பெறும் இந்த நூல் நிலையத்தைப் பற்றிய சிரத்தை சென்னை அரசாங்கத்தாருக்கு வந்து அவற்றில் சிறந்த நூல்களைப் பிரசுரிக்கப் பேருதவி செய்ய முன்வந்தது போற்றத்தக்கது. இதே போன்று பலரிடம் சிதறிக் கிடக்கும் ஏட்டுச் சுவடிகளையும் சேகரித்து அவசியமான வற்றைப் பல பாஷைகளிலும் மொழி பெயர்த்து வெளியிட அரசாங்கம்முன்வரவேண்டும்.

எங்கள் சோழ மண்டலத்தில் தோன்றிய கம்ப நாட்டாழ்வார் தமிழுக்குச் செய்த சேவை அளவிடற்பாலதன்று. அவரியற்றிய கம்ப ராமாயணம் தமிழிலக்கியத்தில் மிக மிகச் சிறந்தது. கவிதையின் பொக்கிஷம். படிப்போருக்கு உயர்ந்த லட்சியங்களை ஊட்டுவதில் இணையற்ற இலக்கியம். துளசிராமாயணம் இதிலிருந்து தோன்றியதே. பொன்னே போல் போற்ற வேண்டிய இந்நூலின் பேரில் படையெடுப்புத் தோன்றியிருப்பது தமிழ் நாட்டின் துர் அதிர்ஷ்டம் என்றே சொல்லவேண்டும். அதிலும் சிறப்பாக இளம் மாணவருள்ளத்தை இதநீ வெதுப்புவதைக்காட்டிலும் கொடிது வேறென்ன இருக்கிறது. இந்த விரும்பத்தகாத பிரசாரம் மறையவேண்டும். இதே போன்று இன்று எழுதப்பெறும் சில ஆபாசமான நூல்களும்—பிரசுரங்களும் — மக்கள் ஒழுக்கத்தைப் பாழ்படுத்தும் நச்சு மரங்களாக முளைக்கின்றன. இம்மரங்கள் வேரோடு கல்லி எறியப்பட வேண்டும். ஜப்பானிய மொழியில் உள்ள நூல்களைப் படிக்குங்கால் அம் மொழியில் இழி சொற்களே இல்லையென்பது புலப்படும். ஒருவர் மற்றவரை கடுமையாகத் தாக்கவேண்டுமெனின் "பேகா" என்னும் ஒரு சொல்லைத்தான் பயன் படுத்துவர். முட்டாள் என்பது இதன் பொருள் ஆகும். அம் மொழியும் அதனைப் பயில்வார் உள்ளமும் எவ்வளவு உயர்ந்தனவாக இருக்கவேண்டும். இன்று நம்மவரில் சிலர் வசைபாடுவதற்கென்றே காப்புக்கட்டி நிற்பது எற்றுக்கு? "சுளிக்கச் சொல்லேல்" எனபதன்றோ தமிழ்ப் பண்பாடு!

# கம்பர் கழகம்

**கம்பர் கழகத்துச் செயலாளர் ஸ்ரீ க. சோமசுந்தரம் எழுதுவதாவது:**

கம்பர் எழுதிய இராமாயணத்தின் பெருமையையும், கவிதைச் சிறப்பையும் எங்கும் பரப்பும் முக்கிய நோக்கத்துடன் இக் கழகம் பணி செய்து வருவதை யாவரும் அறிவார்கள். அரசியல் தொடர்பின்றியும், சாதி சமயப் பூசல்களை விலக்கியும் இக் கழகம் கம்பரின் இலக்கியத்தைப் பரப்புவதையே நோக்கமாகக்கொண்டுள்ளது. வேறு பல இடங்களிலும் கிளைச் சங்கங்கள் நிறுவ ஏற்பாடு செய்யப்பெறும். முன்பே தோன்றியுள்ள கம்பர் கழகங்களும் இதர தமிழ்ச் சங்கங்களும் இக் கழகத்தோடு தம்மை இணைத்துக்கொள்ளலாம். கம்பராமாயணத்தைச் சிரிய முறையிற் பதிப்பிடுதல், மேல் நாட்டு இலக்கிய ஆராய்ச்சி முறையில் ஆராய்ச்சிகள்செய்தல், பிறமொழிகளில் மொழி பெயர்த்தல், தேரழுந்தூரிலும் சென்னையிலும் நினைவுச் சின்னங்கள் அமைத்தல் முதலான பல பணிகளையும் இக் கழகம் செய்யும். கழகம் 16-4-49 தேதியன்று பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதில் பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட அனைவரும் உறுப்பினராகலாம். நன்கொடையாளர்களுக்கு ரூபா 100-ம், ஆயுள் அங்கத்தினருக்கு ரூபா 25-ம். சாதாரண உறுப்பினருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூபா 1-ம் சந்தாவாகும். மேற்கொண்டு விபரங்கள் தெரிந்துகொள்ள, செயலாளர்கள் கம்பர் கழகம் 8, சின்னரெட்டித்தெரு, எழும்பூர், சென்னை—8 என்ற முகவரிக்கு எழுதலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்குத்தபால் • நமது நிருபர்

# கல்லோயா அணைக்கட்டு

கல்லோயா அணைக்கட்டு வேலை நடக்கும் இடத்தைப் பார்க்கப் பலர் ஆவலோடிருக்கிறார்கள். அணையை நோக்கிச் செல்லும் அணைக்கட்டு வேலை முடியாமையால் இது மிகவும் கஷ்டமாயிருந்தது. ஆனால் இப்போது அந்தத் தெருப்பாதை அமைக்கப்பட்டு முடிவெய்திவிட்டது. இனிச் சௌகரியமாக அணைக்கட்டு வேலை நடைபெறும் இடம் வரை பிரயாணஞ்செய்யலாம். விற்பனவு விருத்திப் பகுதியாரும் அம்பாறையில் ஒரு சாப்பாட்டுக் கடையையும் ஏற்படுத்தியுள்ளார்கள். இயந்திரங்கள் தங்கள் முழுவேகத்துடன் காடுகளை வெளியாக்குதல் பூமியை ஒப்பப்படுத்துதல் முதலிய வேலைகளைச் செய்கின்றன. இப்பகுதியில் வரவர அமெரிக்கர்களுடைய தொகையும் அதிகரித்து வருகின்றது. இங்குள்ள கருங்கல்லுடைக்கும் இயந்திரம் ஒன்றுக்கு மணித்தியாலம் ஏறக்குறைய 160 தொன் கல்லை உடைக்குமெனத் தெரிகின்றது. இங்கு யுத்தகாலத்திற் பயிர்செய்ய இப்பகுதி மக்களுக்கு அளிக்கப்பட்ட பூமி திருத்தத் திட்டம் நிறைவேறியதும் அவர்களுக்கே அளிக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தரும்படி விவசாய மந்திரியாரை வேண்டிக்கொள்வதாக ஒரு தீர்மானம் சமீபத்தில் மட்டக்களப்பில் நடைபெற்ற கூட்டுறவு மகாநாட்டில் நிறைவேறியது.

இனி, கூட்டுறவு மகாநாட்டைப்பற்றிக் கவனிப்போம்.

## கூட்டுறவு இயக்கம்

இவ்வாரம் இங்கு இரு மகாநாடுகள் நடைபெற்றன. அவற்றுள் ஒன்று கூட்டுறவு மகாநாடு. அடுத்தது கீழ்மாகாண ஆசிரியர்களின் தேகப்பயிற்சி விடுமுறைக் கழகமாகும்.

விவசாய மந்திரி டட்லி சேனநாயகா அவர்கள் வராமை காரணமாக, உணவு— கூட்டுறவு மந்திரி கௌரவ ரத்னாயகா அவர்கள் கூட்டுறவு மகாநாட்டை திறந்து வைத்தார். அப்போது அவர் தேசிய இயக்கமாகிய கூட்டுறவு இயக்கத்தைக் காப்பாற்றவேண்டியதின் அவசியத்தை வற்புறுத்தினார். அடுத்து மேற்படி மந்திரியின் நிரந்தரக் காரியதரிசி ஜி. டி. சொய்சா அவர்கள் பேசினார்கள். மட்டக்களப்பிலுள்ள நண்டு, தயிர், கூட்டுறவு மூன்றையும் விசேஷமாக நேசிப்பதுதான் தமது மட்டக்களப்பு விஜயத்தின் காரணமென்றும், ஆனால் வரும் வழியில் தாம் முதலிரண்டையும் ருசிபார்த்துவிட்டதாகவும் இனி மிஞ்சியிருப்பது கூட்டுறவுதான் எனவும் அவர் குறிப்பிட்டார். அடுத்ததாகப் பேசிய பதிவுக்காரர் ஸ்ரீ பெர்னாண்டோ அவர்கள் தாம் முதல் இரண்டையும் ருசிபார்க்கவில்லையென்றும் நேரே கூட்டுறவை நாடி வந்ததாகத் தெரிவித்தார். இங்கிலாந்தையும் அமெரிக்காவையும் ஒரு பாஷை பிரிக்கிறது; அதுபோல ஒருபாஷைதான் கூட்டுறவு விஷயத்தில் வடமாகாணத்தையும் கீழ்மாகாணத்தையும் பிரிக்கிறது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். இதனையடுத்துப் பிரேரணைகள் விவாதிக்கப்பட்டன. ஸ்ரீ பெர்னாண்டோவின் மேற்படி அபிப்பிராயத்தைப் பலமாகக் கண்டித்ததோடு அப்படியேதும் தப்பு இருப்பின் மேலுத்தியோகத்தர்களின் தப்பபிப்பிராயமே காரணமென்று சொல்லிவைத்தது. இப்பகுதியில் விளையும் புகையிலையை யாழ்ப்பாணத்து வியாபாரிகள் நியாயமான விலைக்கு வாங்க ஒத்தாசை புரியுமாறு வடபகுதிக் கூட்டுறவு சமாஜத்துக் கௌரவ காரியதரிசி ஏ. அருளம்பலமவர்களை வேண்டிக்கொண்டார். திரு. ஏ. அருளம்பலம், திரு. கே. கேசையா எம். ஏ. ஆகிய இருவரின் விரிவுரைகளும் எல்லாராலும் மனப்பூர்வமாக வரவேற்கப்பட்டன. சென்ற வருடங்களில் நடந்ததுபோன்ற கலவரங்கள் ஏதுவுமின்றி மகாநாடு சிறப்பாக நடைபெற்றது. இது எல்லாவற்றிலும் மிக விசேஷமான செய்தியாகும். ஆகவே கௌரவ ஏ. ரத்னாயகா அவர்களை இது கவர்ந்து விட்டது. அவர் சென்ற முறை பல ஊழல்களை அம்பலப்படுத்திய ஒரு பிரதிநிதியைச் சந்தித்து "மகாநாடு இவ்வளவு 'சாந்தமாக' நடைபெறுவதன் காரணம் என்ன?" என்று கூடக் கேட்டு விட்டார். உடனே "இப்போதைய அதிகாரியின் திறமையான நிர்வாகம்தான்" என்ற பதில் கிடைத்தது.

## தேகப்பயிற்சி

அடுத்தது தேகப்பயிற்சி விடுமுறைக் கழகம். இதனைத் திறந்துவைக்கப் பல பிரமுகர்கள் காத்திருந்தனர். கீழ்மாகாண வித்தியாதிகாரி எஸ். ஜே. குணசேகரம் அவர்கள் திறந்து வைத்தார். அப்போது அவர் நாம் இன்று சுதந்திரம் பெற்று விட்டமையால் தேகப்பயிற்சித் துறையில் விசேஷ ஊக்கங் காட்டவேண்டியது அவசியம். எனக் குறிப்பிட்டதோடு, அவ்வகுப்புகளினால் உண்டாகும் நன்மையை நன்கு பயன்படுத்திக் கொள்ளும்படியும் வேண்டிக்கொண்டார். இப்படியான ஒரு வகுப்பு ஒரே பாடத்துக்காக ஒரு வாரத்துக்கு இதுவரை இங்கு நடைபெற்றதில்லை. அப்படியிருந்தும் வகுப்பிற் சேர்ந்த 80 ஆசிரியர்களும் ஒருவர் கூடத் தவறாமல் வகுப்புகளுக்குப் பிரசன்னமாயிருந்தனர். இவ்வெற்றிக்குப் பெரிதும் காரணமாயிருந்தவர்களைப் பாராட்டியே தீரவேண்டும். தேகப்பயிற்சியுடனில்லாது ஒரு விருந்தையும், கதம்பக் கச்சேரியையும் நடாத்தித் தாங்கள் பெற்ற இன்பத்தை மற்றவர்களுக்கும் பகிர்ந்தளித்தார்கள். பயிற்சிபெற்ற 80 ஆசிரியர்களின் ஒத்துழைப்பும், உற்சாகமும் தான் இவ்வகுப்பின் வெற்றிக்குக் காரணமென நிர்வாகசபை அபிப்பிராயப்படுகிறதாம்.

## கதம்பக்கச்சேரி

நாம் முன் குறிப்பிட்ட இரு மகாநாடுகள் சம்பந்தமாக இரு கதம்பக் கச்சேரிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அவையிரண்டையும் பார்த்தபின் சங்கீத, நடனக்கலைஞர்களின் ஆற்றலை வளர்க்க ஏதாவது நிலையான ஒரு ஸ்தாபனமும் ஏற்படவேண்டுமெனத் தோன்றுகிறது. ஐக்கிய மகாநாட்டினர் ஒழுங்கு செய்த கச்சேரியில் ஸ்ரீ ஜி. யோசேப் என்பவரது குழந்தைகளிருவரின் அபிநயம் அனைவரின் உள்ளத்தையும் கவர்ந்துவிட்டது. செல்வி ச. நாகராசாவின் நடனம் அற்புதமாக அமைந்திருந்தது. இவர் முன்னர் பல சந்தர்ப்பங்களில் மேடைகளில் தோன்றியுள்ளார்.

ஆசிரிய நண்பர்கள் நடாத்திய கதம்பக் கச்சேரியில் **குறவன் குறத்தி** என்ற பகுதியில் நடித்த கே. குமாரசுவாமி, ஸி. சண்முகம் ஆகிய இருவரும் சிகரமாக விளங்கினர். **காதலின் கஷ்டம்** செவிக்குணவளித்தது. நீர்ப்பாய்ச்சல் உத்தியோகத்தராகவும் போடியாராகவும் (நிலச்சுவாந்தார்) நடித்த இருவரும் கிராம வாழ்க்கையை அப்படியே சித்தரித்துக் காட்டினார்கள். சிலர் இப்பயிற்சி வகுப்பிற் பெற்ற அநுபவங்களைச் சேர்த்துப் பாட்டியற்றி அரங்கேற்றிவைத்தனர். **ஸ்ரீ தன கலியாணம்** என்பதும் ஆங்கிலத்தில் அரங்கேற்றப்பட்டது.

## பட்டினசபைகள் மகாநாடு

இம்மகாநாட்டை, மட்டக்களப்பில் நடத்துமாறு முன்னொருமுறை குறித்த மகாநாட்டு நிர்வாகசபை வேண்டிக்கொண்டபோது, நகர மண்டபம் நிறுவிய பின்னர் மட்டக்களப்பில் மகாநாட்டை நடத்துதல் பொருத்தமான தெனப் பேசப்பட்டது. ஆனால் காரியதரிசி மீண்டுமொருமுறை குறித்த வேண்டுகோளைப் புனராலோசனை செய்யும்படி கேட்டுள்ளாராம். இதனைப்பற்றி அங்கத்தினர்களின் முடிவான அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ள முடியாதநிலையிற் பலர் பல இடங்களுக்குஞ் சென்றுவிட்டார்களாம். ஆகவே, அடுத்துவரும் பட்டினசபையின் மாதாந்தக் கூட்ட நிகழ்ச்சிகளில் தான் ஒருமுடிவான தீர்மானம்செய்யப்படுமெனத் தெரிகின்றது?

# ஆசியாவின் பணி

வந்தபின் காப்பவனைவிட வருமுன் காப்பவன் தான் புத்திசாலி. அவனால் எதையும் சாதிக்க வியலும் இன்றைய ஆசியாவில் சாந்தியையும், சமாதானத்தையும் நிலவச் செய்ய இந்தியாவினாலும், இலங்கையினாலும் தான் முடியும்.

## என்ன செய்யவேண்டும்?

தற்போதுள்ள ஐக்கிய நாடுகள் சங்கத்தினிடம், பொதுவாக உலக மக்களுக்கும் குறிப்பாக ஆசிய மக்களுக்கும் நம்பிக்கையில்லை. அதற்குப்பலம் இல்லை என்பதும், வல்லரசுகள் திரைமறைவில் இருந்து கொண்டு அதை ஆட்டி வைக்கின்றனர் என்பதும் நன்கு தெரிகின்றது. ஐக்கிய நாடுகள் சங்கத்தின் பொதுச்சபையில் ருஷியா அடிக்கடி அதிகாரத்தைப் பிரயோகம் செய்கின்றது. இந்த அதிகாரத்தை ஒழிக்கச் சங்கத்துக்குத் தைரியமில்லை. அடுத்தபடி இந்தோனேஷியா விவகாரத்தைக் கவனிப்போம். சபையின் கூட்டங்களை தள்ளி வைத்துக் கொண்டு வந்தார்களே தவிர, இந்தோனேஷியர்களின் சுதந்திரத்தை டச்சுக்காரக் கொள்ளிடமிருந்து காப்பாற்ற வழிவகைகள் தேடவில்லை. கடைசியாகக் காஷ்மீர் அதிலும் முடிவான பலன் கண்டதில்லை. சில தினங்களுக்குமுன்னர் கூட ஐக்கிய நாடுகள் சங்கத்துப் பார்வையாளர் காஷ்மீர் அரசினராலே தாக்கப்பட்ட போது அதைத் தடுக்கக்கூட முடியவில்லை. பாலஸ்தீனில் மத்யஸ்தராக சேவைபுரிந்த காலம் கவுண்ட் பேர்னடொட் அநியாயமாகக் கொலை செய்யப்பட்டாரே? அதனை ஐ. நா. சங்கமா விசாரணை செய்ததா? எனவே ஆசிய மக்களுக்குத் தற்போதுள்ள ஐ. நா. சங்கத்தால் ஓர் வித உதவியும் கிடையாது. ஆசியாவுக்காக ஓர் ஆசியா ஸ்தாபனத்தை நிறுவிக்கொள்ளவேண்டும் இல்லையேல் ஆசியாமக்களைச்சுதந்தர தேச மக்களாகவே அந்தக் கூட்டம்

.... என். ஆர். வி. ...

நினையாது. இந்தோனேஷியா விவாதம் லேக்சக்ஸஸில் நடந்த போது ஆசியாவின் பிரதமர்களும் மற்றும் பல தலைவர்களும் கூடி அறிக்கை விட்டார்களே. அந்த அறிக்கைக்கு இதுவரையிலும் அந்தச் சுயநலக் கட்டம் என்ன பலன் கொடுத்தது?

## வல்லரசுகள் போக்கு?

'இதோ நான் இந்த ஐக்கிய நாட்டுகள் சங்கத்துக்குக் குழி தோண்டி விட்டேன்' என்று கூறும் முறையில் அமெரிக்க ஜனாதிபதி ஹென்றி ட்ரூமன் அட்லாந்திக் உடன்படிக்கையிற் கைச்சாத்திட்டுவிட்டார். 'உனக்கு நான் என்ன குறைவா?' என ருஷிய சர்வாதிகாரி ஸ்டாலின் பொல்ஸ்ஷிவிக் உடன்படிக்கையை காட்டுகிறார். இவர்கள் இருவரும் யுத்தப்பாசறையை நோக்கி அதிக வேகத்திற் செல்வதுடன் நில்லாது அயலிலிருப்பவர்களையும் நயத்தினாலும், பயத்தினாலும், ஆசை காட்டி அழைக்கின்றனர்.

## எப்படி நியாயம்?

ஒன்றுமறியாப் பாமர மக்களின் மீது அணுக்குண்டைப் பிரயோகித்து வெற்றி கண்டோம் எனக் கும்மாளம் அடித்தவர்களும் ஜனநாயகம் பேசுகின்றனர். ஒன்றுமறியாத மக்களை ஏமாற்றி அந்த மக்களை அவர்களது தேச சுதந்[illegible] [illegible] நாட்டை அழித்துத் தமது இடுகொடாக்கிக் கொள்ளுகின்றனர் ஒரு சில மேற்றிசை நாட்டினர். **இந்தப் பாவிகளால் அல்லவா உலகம் பெறுதற் கரிய பகவான் புத்தரையும், கருணைக்கடல்பரமஹம்ஸரையும், உலக பிதா மகாத்மாவையும் பெற்றெடுத்த ஆசியா இரத்தமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கிறாள்.**

## வழி வகுத்தல்

ஆசியாவில் அன்னியர் ஆதிக்கம் இல்லாமற் செய்ய வேண்டும். மத்திய ஸ்தாபனம் ஒன்றினை நிறுவி, நாம் அனைவரும் ஒரே தாயின் மக்கள் என்பதை நிலைநிறுத்த வேண்டும். உலக சமாதானத்தை ஏற்படுத்த ஆசியர்களால் தான் முடியும் என்பதை அப்போதுதான் நாம் நிரூபிக்க முடியும். தற்போது உலகம் செல்லும் போக்கைப் பார்த்தால் எந்த நிமிஷத்திலும் யுத்தப் புயல் கிளம்பலாம். அந்தப் புயலைக் கிளப்புவதற்கு திமிர் பிடித்த அரக்கர்கள் தயாராய் இருக்கிறார்கள். இதில் கண்டிப்பாய் நாம் தனித்திருந்தால் சிக்க வைப்பார்கள். நாம் ஒன்றுபட்டிருந்தால் அவர்கள் நம்மை நெருங்கத் தயங்குவார்கள்.


விபுலாநந்தர்

# முத்தமிழ் மகாநாடு

இரண்டாவது ஆண்டு

விபுலாநந்தர் நினைவு முத்தமிழ் மகாநாடு 14-5-49, 15-5-49 நாட்களில், வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடத்தப்படும். முத்தமிழ், திருக்குறள், சிலப்பதிகாரம், சைவ—இலக்கியம், நால்வர் திருநெறி, இந்துசமயத் திருமுறைப்பயிற்சி என்பன பற்றிய விரிவுரைகள் நிகழும். மாணவர் சங்க உறுப்பினர் சந்தா (ரூ. 5), அன்பர் சந்தா (ரூ. 2), நன்கொடை அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

அமைச்சர், **விபுலாநந்தர் மாணவர் சங்கம்,** 234, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


# Order Nisi

IN THE DISTRICT COURT OF JAFFNA

*Testamentary Jurisdiction* } **No. 940**

In the matter of the Intestate and aspects of the late Kanapathippillai Somasunderam of Urumpirai, Jaffna *Deceased*

Mankalakiriammah widow of Subramaniam of Urumpirai *Petitioner*

*Vs.*

*Minors:*

1. Somasunderam Arunthavanathan of Chavakachcheri
2. Somasunderam Suntharalingam of Urumpirai
3. Somasunderam Rajalingam of Urumpirai
4. Mahaindranee daughter of Somasunderam of Urumpirai
5. Somasunderam Kunanathan of Urumpirai
6. Somasunderam Sathianathan of Urumpirai
7. Karthigesu Sinnapoo of Chavakachcheri and
8. Sabapathy Sinnathurai of Urumpiray *Respondents*

This matter coming on for Disposal before I. W. De Silva Esquire, District Judge, Jaffna. on the 13th day of September, 1948, in the presence of Mr. A. Subramaniam Proctor on the part of the petitioner and the Petition and affidavit of the Petitioner having been read:—

It is ordered that the above-named 7th respondent be appointed Guardian ad Litem over the minors the 1st respondent above named and 8th respondent be appointed the guardian ad litem over the minors the 2nd-6th respondents above named and that letters of Administration to the estate of the abovenamed deceased be issued to the Petitioner as the lawful widow of the said deceased unless the above-named respondents or any other persons appear before this Court on the 18th day of October, 1948. and show sufficient cause to the satisfaction of this Court to the contrary. It is further ordered that the respondents do produce the minors on the said date, 13th September 1948.

(*Sgd.*) **R. R. Selvadurai**
18-10-48 District Judge

Time extended to 9th May 1949
ltd. R. R. S.
D. J. [3670-ii]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

திருவாரூர் வைபவம் — II

# பைந்தமிழ் வளர்கின்றது

சென்ற ஆண்டுத் தமிழ் விழாவின்போது பெரும்பாலும் இலக்கியம்பற்றிய சொற்பொழிவுகளே நிகழ்த்தப்பட்டன. இவ்வாண்டில் **விஞ்ஞானப் பகுதி, பொருளாதாரப் பகுதி** என இரு பிரிவுகள் சேர்க்கப்பட்டன. தமிழைப் பல துறைகளிலும் உபயோகப்படுத்தலாம் என்பதைக் காட்டுவதற்காகவே இவ்விரு பகுதிகளும் இம்முறை அமைக்கப்பெற்றன என்று **ஸ்ரீ அவிநாசிலிங்கம் செட்டியார்** கூறினார். விஞ்ஞானப் பகுதியை ஆரம்பித்துவைத்த டொக்டர் ரி. எஸ். எஸ். இராஜன் இத்துறையில் **சேர் சி. வி. ராமன், சேர் கே. எஸ். கிருஷ்ணன்** ஆற்றிய சேவைகளைப் பாராட்டினர். பரிபாஷைச் சொற்களைப் பற்றிப் பேசும்பொழுது, வழக்கிலுள்ள சொற்களைவிட்டுப் புதுச் சொற்களை ஆக்க முயல்வது கேடு விளைக்கும் என்று கூறினார்.

டொக்டர் கே. எஸ். கிருஷ்ணன் விஞ்ஞானப்பகுதிக்குத் தலைமை தாங்கினர். இவர்கள் இப்பொழுது இந்திய பௌதிக சாஸ்திர ஆராய்ச்சித் தலைவராக விளங்குகின்றார். இவர் தமது தலைமை உரையில் பூமியின் வயது, இராமன் விளைவு முதலிய விஷயங்களைப்பற்றிப்பேசினர். **ஆனல் தமது பேச்சில் ஒரு ஆங்கிலச் சொல்லையேனும் அவர் உபயோகிக்கவில்லை.** இந்தியா இதுகாறும் விஞ்ஞானத்துறையில் அதிகம் முன்னேருததற்குக் காரணம் அரசாங்கத்தாரின் ஆதரவு கிடையாமையே என்றும், இப்பொழுது அவ்வாதரவு கிடைப்பதினல் வளர்ச்சி அதிக விரைவாக ஏற்படும் என்றுங் கூறினர். மேலும் வருங்காலத்தில் விஞ்ஞானம் தாய்மொழிமூலம் கற்பிக்கப்படப் போவதினல், அது அதிகம் வளர்ச்சியடையுமென்றும் கூறினர். அணுவின் சக்தி என்னும் விஷயமாக **திருமதி இ. டி. இராசேஸ்வரி** அம்மையார் பேசியது எல்லோருடைய மனதையும் கவர்ந்தது.

## பொருளாதாரப்பகுதி

பொருளாதாரப்பகுதிக்குத் தலைமை தாங்கிய திரு. ஆர். கே. சண்முகம் செட்டியார் தமிழில் எப்படிப் புதுக் கருத்துக்களை வெளியிடலாமென்பதைத் தமது தலைமையுரை மூலம் காட்டினர். சிலப்பதிகாரத்தைப் புத்துரையுடன் வெளியிட்ட இவர் இப்பொழுது திருக்குறளுக்கு ஒரு புத்துரை காண முயலுகிருர் எனத் தெரிகிறது. தமிழ் அரசாங்க பாஷையாக ஏற்பட்டு அதைப் பல துறைகளிலும் உபயோகப்படுத்தினலொழிய, அது முழுவளர்ச்சியும் அடையமாட்டாது எனக் கூறினர். பணப்பெருக்கத்தினல் ஏற்படும் தீமைகளையும் அதைத் தடுப்பதற்கு வேண்டிய வழிவகைகளையும் விரிவாக விளக்கினர்.

அடுத்தபடியாக, சென்னை அரசாங்கத்தாரின் பொருளாதார நிபுணர் டொக்டர் **நடராஜன்** "சென்னை மாகாணத்துக்கு ஐந்நூறுகோடிரூபாய்த் திட்டம்" என்னும்விஷயமாகப் பேசினர்.

## இலக்கியப்பகுதி

இந்தத் துறையில் தமிழ் நாட்டிலுள்ள பல சிறந்த அறிஞர்கள் கலந்து கொண்டனர். மூன்றரைமணிநேரத்தில் ஏழு பேர் பேசவேண்டியிருந்ததினலும், இடையில் பரிசுகள் வழங்கப்படவேண்டியிருந்ததினலும், இலக்கிய மகாநாடு சிறப்பாக நடைபெற முடியவில்லை. தலைமையுரை டொக்டர் மு. **வரதராசனர்** சொற்பொழிவு. திரு. சேதுப்பிள்ளையின் சொற்பொழிவு நல்ல முறையில் அமைதியாக நடைபெற்றன. அதன் பின்னர் அமைதி நிலவவில்லை. டி. கே. சி. தமது தலைமையுரையில் தமிழ்மொழி பல துறைகளிலும் வளர்ந்து வருவதைக் குறிப்பிட்டனர். டொக்டர் கே. எஸ். கிருஷ்ணன், திரு. சண்முகம்செட்டியார், திருமதி இராசேஸ்வரி அம்மையார் விஞ்ஞான சாஸ்திரம், பொருளாதாரம் முதலிய விஷயங்களைத் தமிழில் எடுத்துக் கூறிய முறையைப் பாராட்டினர். பத்து வருஷங்களுக்கு முன்னர் இப்படிப் பேச முடியுமென்று கூறுவோரை அலட்சியம் செய்தனர். ஆனல் இப்பொழுது அவையெல்லாம் முடியும் என்பதைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தினர் காட்டிவிட்டனர்.

**பேராசிரியர் சேதுப்பிள்ளை** "நன்னிலம்", "பூந்தோட்டம்" முதலிய ஊர்ப் பெயர்களை ஆராய்ந்தமுறை சபையோரை மகிழ்வித்தது.

## இன்னிசை நாடகம்

முற்கூறியபடி தருமபுர திருவாவடுதுறை ஆதீன ஓதுவார்கள் இடைவேளைகளில் தமிழ்மறை ஓதியது இவ்விழாவின் ஒரு சிறப்பான அம்சமாகும். திருவாரூர் சமயகுரவர் நால்வராலும் பாடப்பெற்ற ஸ்தலம் ஆதலால் அங்கு தமிழ்மறை ஓதப்பட்டது பொருத்தமானதே.

ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி உடல் நலம் குறைவு காரணமாக வராதிருந்தது ஒரு பெருங் குறையாகும். இவர்களிடத்துக்கு ஸ்ரீ விஜயராகவன் புதல்விகள் வந்து கச்சேரி செய்தனர். டி. கே. எஸ். சகோதரர்களின் நாடகத்தைப் பார்க்கவந்த கூட்டத்தைச் சமாளிக்க முடியாமல் நிர்வாகிகள் பெருங் கஷ்டம் பட்டனர். ஒரு நேரத்தில் பொலிஸ்படை கூட்டத்தைத் தாக்கவேண்டியும் நேர்ந்தது. மக்கள் விழா நிர்வாகிகளுடன் ஒத்துழைத்திருந்தால் இக்கஷ்டங்கள் நேர்ந்திராது.

## கூட்ட ஒழுங்குகள்

திருவாரூர் தமிழ் விழா நடத்தும் பொறுப்பை ஏற்றவர்களில் **ஸ்ரீ சர்தார் வேதரத்தினம்பிள்ளை** அவர்களும், வடபாதி மங்கலம் **ஸ்ரீ வி. என். தியாகராஜமுதலியார்** அவர்களும விசேஷமாககுறிப்பிடப்படவேண்டியவர்கள். வசதிகள் எல்லாவற்றையும் செய்தவர் தியாகராஜமுதலியாரவர்கள். இவர்களுக்கு ஆயிரம் வேலிக்கு மேற்பட்ட வயலுண்டு. அத்தோடு கல்வியறிவு நிறைந்தவர். எம். ஏ. பட்டமும் பெற்றவர். தமிழ் ஆர்வம் நிறைந்தவர். 4000-கு மேற்பட்ட விருந்தினருக்கு இரண்டு நாள் சிறந்த உணவு கொடுத்தனர். அவர்களுக்கு தங்கவேண்டிய இடவசதிகள் எல்லாம் செய்து கொடுத்தனர். அவர் வீட்டிலேயே ஆயிரத்துக்கு மேற்பட்ட விருந்தினர்க்கு தினமும் உணவளித்தார்.

கூட்டம் நடந்த பந்தல் போடுவதற்கு பத்தாயிரம் ரூபாய் செலவென்று கேள்வி. பந்தல் யாழ்ப்பாணத்தில் விவாககாலங்களில் போடப்படும் வில்லுப் பந்தலையொத்திருந்தது. ஆனல் அப்பந்தலில் ஆறுயிரம் பேர் இருக்கத்தக்க விசாலம் உடைத்தாயிருந்தது. தஞ்சாவூரிலொழிய, தமிழ் நாட்டில் வேறெந்த பாகத்திலும் இப்படிப் பந்தல்போடமுடியாது என்று பலரும் கூறிக்கொண்டனர். இவற்றையெல்லாம் செய்து, 'கல்கி' ஆசிரியர் கூறியது போல், வடபாதி மங்கலம் தியாகராஜ முதலியார் பணம் படைத்த பயனைப் பெற்றுர்.

தருமபுரம், திருவாவடுதுறை ஆதீனத்தார் காட்டிய ஒத்துழைப்பும் பாராட்டத்தக்கது. தருமபுரம் ஆதீனம் இவ்விழாவின் பொருட்டு, ஆதீனப் புலவர் தண்டபாணி தேசிகர் எழுதிய **திருவாரூர்** என்னும் நூலை வெளியிட்டது. திருவாவடுதுறை ஆதீனம் **யாழ்ப்பாணத்து சபாபதி நாவலர்** எழுதிய **சமயம்** என்னும் நூலைவெளியிட்டது.

"வாழிய செந்தமிழ்
வாழ்க நற்றமிழர்"

ச. அம்பிகைபாகன்

---

# டொக்டர் பட்டாபி பேட்டி

## பத்திரிகைகளின் துடிப்பு!

**ஆத்திரகாரனுக்குப்** புத்தி மத்திபம் என்றும், மருண்டவன்கண்ணுக்கு இருண்டதெல்லாம் பிசாசு என்றும் பல சந்தர்ப்பங்களிற் பலர் பேசுவதைக் கேட்டிருக்கின்றோம். ஆனல், சமீபத்தில் இந்தியக் காங்கிரஸ் தலைவர் டொக்டர் பட்டாபி சீதாராமையர் இலங்கை சம்பந்தமாக வெளியிட்ட கருத்தையும், அதன் விளைவாக எழுந்த வேறு பல அபிப்பிராயங்களையும் கவனிக்கும்போது, ஒரு சில அரசியல் வாதிகள் மிகப் பயங்கரமான ஓர் உலகத்திற் சதா சஞ்சரித்து வருகின்றனர், என்றே எண்ணவேண்டியிருக்கின்றது.

## பட்டாபி கருத்து

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே நெருங்கிய உறவு இருக்க வேண்டுமென டொக்டர் பட்டாபி அவர்கள் **சிலோன் டெய்லி நியூஸ்** புதுடில்லி நிருபருக்களித்த பேட்டியிற் கூறி அவர் மேலும் தெரிவித்ததாவது: இந்தியாவையும் இலங்கையையும் ஒரு நாடாகவே நான் கருதிவருகின்றேன். ஒரே அடிப்படையிறுன் இரு நாடுகளினதும் பாதுகாப்பும் அமைந்துள்ளது. இரு நாடுகளும் ஒற்றுமையாக இருந்தால் எவ்வித ஆபத்தையும் சமாளிக்க முடியும். இந்தியாவின் விரோதிகளுடன் இலங்கை நட்புக் கொள்ள முடியாது. பாதுகாப்பு என்றுல் அதனுடன் போக்குவரத்து அயல்நாட்டுறவு என்பனவும் சம்பந்தப்பட்டுள்ளன.

இலங்கையின் நன்மைக்காகவே பாதுகாப்பு, போக்குவரத்து, அயல்நாட்டுறவு என்பன ஒன்றுக நடாத்தப்படல் வேண்டும்.

இவ்வளவுடன் டொக்டர் நிற்காமல், **இலங்கையானது இந்தியாவின் ஒரு மாகாணமாகவும் அமைந்துகொள்ளுவதே உகந்ததெனவும் கூறிவிட்டார்.**

## இலங்கை பணியாது

இவற்றையெல்லாம் முதற் பக்கத்திற் பிரசுரித்த டெய்லி நியூஸ், டொக்டரின் கருத்துப்பற்றி இலங்கைப் பிரதிநிதிகள் சபை முதல்வரும் மந்திரியுமான பண்டாரநாய அவர்கள் தெரிவித்த அபிப்பிராயத்தையும் வெளியிட்டிருந்தது. அவர் கூறியதாவது:

டொக்டர் பட்டாபிஅவர்கள் இலங்கையானது இந்தியாவிலுள்ளமாகாணங்களில்ஒன்றுக அமையவேண்டுமென விரும்புகின்றுர். இலங்கை சிறிய நாடுதான். ஆனல் இலங்கை மக்கள் ஒருபோதும் தங்கள் சுதந்திரத்தைப் பிறரிடங் கொடுக்கமாட்டார்கள். இந்தியாவுக்கும் இலங்கைக்குமுள்ள உறவு, பிரிட்டனுக்கும் அயர்லந்துக்குமுள்ள உறவுபோன்றதாகும். டொக்டர் பட்டாபி அவர்கள் கேட்குமளவுக்கு நாங்கள் இந்தியாவிடம் பணிந்துபோகவேண்டிய அவசியமுமில்லை. அப்படி நடந்துகொள்வது நியாயமுமன்று.........ஆனல் இலங்கை இந்தியாவுடன் ஒத்துழைக்க விரும்புகின்றது.

... இலங்கையன் ...

## சிங்களப் பத்திரிகைகள்

டெயிலி நியூஸ் பத்திரிகை சிங்கள மக்களால், சிங்களின் [illegible] உழைத்து வருவதுடன், இப் பத்திரிகை இன்று அரசாங்க பீடத்திலுள்ள யூ. என். பி. கட்சியினருக்குச் சாதகமாகவும் உழைத்துவருகின்றது. இந்த ஸ்தாபனத்திலிருந்து வெளியாகும் அசலான சிங்களப் பத்திரிகைகளும், ஏன்? தமிழ்ப் பத்திரிகைகளும் இச் சேவைகளையே செம்மையாக நடாத்திவருகின்றன. **சிங்கள முதலாளிகள் நடாத்தும் இத் தமிழ்ப் பத்திரிகைகள், தமிழ்த்தாயின் பெயரைச் சொல்லிக்கொண்டு, முஸ்லீம்களின் உரிமைகளுக்கும் தூபதீபம் காட்டுவதுடன் நில்லாது, தமிழ் மக்களின் உரிமைகளையும் பாதுகாப்பதாகக் கபட நாடகமும் நடிக்கின்றன. இத்தனைக்கும் தமிழ் வாசகர்களைப் பற்றி இப் பத்திரிகைகளுக்கு அக்கறையேயில்லை.** இப்பத்திரிகைகள் எழுதுவனவற்றைப் படிப்பதற்கு இலங்கையில் முஸ்லீம்கள் உளர்.

எனவே, இப்பத்திரிகைகள் ஒருமுகமாக இலங்கை இந்தியாவுடன் இணைந்துகொள்ளுவது ஒருநாளும் நடக்கப்போகின்ற காரியமல்ல என எழுதிவிட்டன.

## முடத் தெங்குகள்

இத்துடன் இப் பத்திரிகைகள் திருப்தி யடையவில்லை. தங்கள் பிரசாரத்துக்கு ஆதாரந் தேடுவதற்காகப் பாகிஸ்தான் நண்பரான ஜனுப் டி. பி. ஜயா, கொம்யூனிஸ்ட் தலைவரான தோழர் கெனமன் போன்றவர்களிடமும் அபிப்பிராயம் பெற்றிருக்கின்றன. கொம்யூனிஸ்ட் அபிப்பிராயங்களை என்றுமே எள்ளி நகையாடும் இச் சிங்களப் பத்திரிகைகள், பட்டாபி விஷயத்தில் மட்டும் தோழர் கெனமன் அவர்களைத் தேடிச்சென்றதை நினைக்கும்போது சிரிக்காமல் இருக்க முடியவில்லை. தோழர் கெனமன் கூறுவதைக் கேளுங்கள்:

"மகத்தான ஒரு யுத்தத்தின் விளைவாக இந்திய முதலாளிகளுக்குத் தலைவீக்கம் அதிகமாகிவிட்டது. ஆகவே, அவர்கள் பிரிட்டனின் ஏகாதிபத்திய வழியைப்பின்பற்றித் தென்கிழக்கு ஆசியாவிலே தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட எண்ணுகின்றனர். இதை அடிப்படையாகக்கொண்டு இந்திய புருஷரான பண்டிதர் நேரு ஒருவருக்கும் நோகாமற் பேசி வருகின்றுர். ஆனல் ஏனைய இந்தியத் தலைவர்கள் இதையே மழுப்பாமற் பேசிவிடுகின்றனர்..."

**முடத் தெங்குகள் போன்ற** கொம்யூனிஸ்டுகளின் அபிப்பிராயங்களை யூ. என். பி. பத்திரிகைகள் மதிப்பாகப் பிரசுரிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதைக் கவனிக்கும்போது, கொம்யூனிஸ்டுகள் பட்டாபி அவர்களுக்குப் பெரிதுங் கடமைப்பட்டவர்களாக வேயிருக்கின்றனர். **நேரிய வழியிற் செல்லாது கோணல் வழியிற்செல்பவர்களான கொம்யூனிஸ்டுகள்போன்ற அரசியல் முடத் தெங்குகளிடம் இச் சிங்களப் பத்திரிகைகள் பிரிட்டன்பற்றியும், காலத்துக்குக் காலம் சில கருத்துக்களைத் தாங்கி வெளிவரும் நாளையும், நாடு ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கின்றது!**

## இந்தியாவின் இதயம்

இத்தனைக்கும் சமீபத்தில் இலங்கை—இந்தியர் மகாநாடு சம்பந்தமாக இலங்கைக்கு விஜயம் செய்த இந்தியத் தலைவர்கள், "ஐயோ, ஏன் இந்தப் பீதி, இலங்கையை இந்தியா ஒருபோதும் அடிமைப்படுத்த விரும்பமாட்டாது. ஆதிபத்திய ஆசையே இந்தியாவுக்கு இல்லை. அடிமைத் தளைகளைத் தகர்த்தெறிய இந்தியா வேறோர் நாட்டை ஒருபோது அடிமையாக்கிக்கொள்ள விரும்பவேமாட்டாது. இலங்கை சுதந்திரம் பெற்ற இந்தியாவைக் கண்டு பயப்பட வேண்டியதேயில்லை" என ஐயந்திரிபறக் கூறியிருக்கின்றனர். அதுவும், இச் சிங்களப் பத்திரிகைகளின்

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழகேசரி

சுன்னாகம், விரோதி, சித். கஅ

— காந்தி ஆண்டு 80 —

## ஆதாரமற்ற பீதி

இலங்கையை இந்தியா ஆக்கிரமித்துத் தம்முள் அடக்கிவிடுமா என்ற அச்சம் என்றும் நீங்காது சிங்களத் தலைவர்கள் மனத்தை வருத்தி வருகின்றது. இந்தப் பீதிக்கு எவ்வித ஆதாரமும் இருப்பதாக நாம் அறியோம். பெரிய நாடாகிய இந்தியா சுதந்திரம் பெற்ற தன் பேருக வன்மைமிக்க வல்லரசாய் வருங்கால் தமது நாடும் அதற்கு அடிபணிய வேண்டியதாகுமோ வென்று மனவிகாரப்படுகின்றனர். அத்துடன் சமீபத்தில் இந்தியக் காங்கிரஸ் தலைவராகிய பட்டாபி சீதாராமையர் அவர்கள் இவ்விரண்டு நாடும் ஒன்றுபடின் பெருநன்மையாகுமென எடுத்துக் காட்டினர். இலங்கை கட்டாயம் சேரவேண்டுமென்று அவர் கூறினாரல்லர். அப்படியாகவும் சிங்களத் தலைவர்கள் மிக்க சீற்றமும் ஆத்திரமுங் கொண்டு துள்ளி எழுகின்றனர். இலங்கை பூரண சுதந்திரம் பெற்ற நாடாக விளங்குமேயன்றி ஒருபோதும் இந்தியாவின் மாகாணங்களில் ஒன்ருக வரப்போவதில்லையென்று உறுதியாகக் கூறுகின்றனர். அங்குமிங்குமோடித் தமக்குச் சாதகமானவரை நாடி அபிப்பிராயங்கள் வெளியிடச் செய்கின்றனர்.

இந்த அற்ப விஷயத்தில் இவ்வளவு அல்லோல கல்லோலம் எதற்கோ? இந்தியா இலங்கையைத் தம்மோடு சேர்த்துக்கொள்ள எதற்காக விரும்பவேண்டும்? அவ்வளவு செல்வம் நிறைந்த நாடா இலங்கை என்று கேட்கின்ருேம். இப்போது இலங்கை இந்தியாவில் தங்கி நிற்கின்றதா அல்லது இந்தியா இலங்கையில் தங்கி நிற்கின்றதா என்பதைப் பொதுவாக யாவரும் அறிவர். பல கஷ்டங்களும் சங்கடங்களும் நிறைந்துள்ள இச்சமயத்தில், இந்தியா இலங்கையையும் சேர்த்து இன்னும் புதிதாகத் துயரைக் கூட்ட ஏன் எண்ணவேண்டுமோ? இலங்கை இந்தியாவுடன் ஒரு காற் சேர்ந்தாலும் இந்தியா எவ்வித நன்மையையும் அடையப்போவதில்லை. அன்றியும் இந்திய அரசியலை நடத்தும் காங்கிரஸ் கட்சியினர் இவ்விஷயத்தை என்ருவது பிரஸ்தாபித்தாரில்லை. விஷயமிவ்வாருகச் சிங்களத் தலைவர்கள் ஏன் இவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்கின்ருரோ நாமறியோம். இலங்கை இந்தியா ஆகிய இருநாடுகளும் சமயம், கல்வி, கலாசாரம், நாகரிகம் முதலிய துறைகளில் மிக நெருங்கிய தொடர்பு பெற்றிருப்பது பற்றி, இருநாடும் ஒன்று சேரவேண்டி ஒருவர் கூறுவது எப்படிப் பிழையாகும்? இலங்கை மக்கள் தமக்குப் பிரியமில்லாவிடின் சேராது இருக்கலாம். அதைக் குறித்து இந்தியாவுக்கு எப்பொழுதாவது வெறுப்பு ஏற்படப் போவதில்லை.

மேலும் இந்தியா பிரிட்டிஷாரின் அடிமைத் திறத்தினின்று நீங்கி அதிக காலமாகவில்லை. பூரண சுதந்திரம் பெற்றவுடன் மற்றைய நாடுகளை அடிமைப்படுத்த முற்படுமா? அன்று. ஆசிய நாடுகள் யாவும் பூரண சுதந்திரமும் சமவுரிமையும் பெற்று விளங்கவேண்டுமென்பதே இந்தியாவின் அடிப்படையான கோட்பாடு. எந்த நாட்டிற்கும் தலைமை வகிக்கத்தானும் இந்தியா விரும்பவில்லையே. இந்தோனேஷியா, பர்மா முதலிய நாடுகள் பூரண சுதந்திரத்தைப் பெறும் விஷயத்தில் இந்தியா எவ்வளவு அபேட்சைகாட்டியுழைக்கின்றதென்பதை உலகம் அறியும். விஷயமிவ்வாருக இந்தியாவின் உயரிய நோக்கத்தையும் கொள்கையையும் இலங்கைத் தலைவர்கள் பிழையாக விளங்குவது எவ்வளவு ஒவ்வாத காரியம்? இந்தியாவிலுள்ள முதலாளி வர்க்கத்தினர்தான் இலங்கையை ஆக்கிரமித்துச் செல்வத்தை ஈட்டப் பார்க்கின்றனரெனப் பீற்றர் கெனமன் அவர்கள் கூறுகின்ருர். இவர்கள் எண்ணத்துக்குப் பண்டிதர் நேருவும் சார்புடையரென்று இவர் கூறுவதை நாம் அங்கிகரிக்கவியலாது. கொம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த கெனமன் அவர்கள் தமக்கு மாருக நிற்போரைத் தூஷிக்க இதுதான் தருணமென எண்ணுகின்ருர் போலும். பண்டிதர் நேருவின் விரிந்த மனப்பான்மையை இவர் நன்கறியாது இடர்ப்படுவது பெரிய துக்கமான விஷயமாகும்.

இப்போது இந்தியாமீது துவேஷங்காட்டும் சிங்கள மக்கள் இன்னுஞ் சில காலம் சென்றபின்தான் உண்மையை அறியும் ஆற்றலையடைவார். இந்தியாவின் நட்பினை நன்கு உறுதிப்படுத்தாதுவிடின் ஒன்றன்பின் ஒன்ருகப் பல சங்கடங்கள் வருங்காலத்தில் வந்தெய்துமென்பது நிச்சயம். பொதுவாக எல்லா விஷயங்கட்கும் இலங்கை இந்தியாவில் தங்கியுளதென்பதை எவர்தான் மறுப்பரோ? மேலும் இலங்கை காலக்கொடுமையாற் போலும் பிரிட்டிஷார் வாலைப் பிடிப்பதில் கண்ணுங் கருத்துமாக நிற்கின்றது. பிரிட்டிஷார் ஆதிக்கமும் நாகரிகமும் இலங்கையில் நிலைபெற்ருலும் காரியமில்லை; இந்தியாவின் தொடர்பு முற்ருக நீங்கவேண்டுமென்ற அழுக்காருன எண்ணம் சிங்களத் தலைவர்களிடையே காணப்படுவது கெட்டகால அறிகுறியென்றே கூறவேண்டும். ஆகவே அவசியமின்றி இந்தியர்மீது இலங்கையரசினர் அவநம்பிக்கை கொள்ள வேண்டியதில்லை. படையெடுத்துவந்து இந்தியா இலங்கையை விழுங்கிவிடுமென்ற அச்சமும் பயமும் நிலைபெற வேண்டியதில்லை. இலங்கை மக்கள் விரும்பாத ஒன்றை இந்திய அரசினர் செய்யத் துணியமாட்டார்கள். எனவே இவ் விஷயமாகக் குரோதங்கள் வாதங்களைக் கிளப்பாது, இலங்கையரசினர் இந்தியருடன் பழமை போல் நட்பினை நிலைநிற்கச் செய்துவருவதே முறையாகும் என்பதை நாம் வலியுறுத்துகின்ருேம்.

## பெரிய வெட்கம்

இலங்கை யரசினரின் பரிபாலனமுறை பலவழியிலும் உயரிய முறையில் நடத்தப்படவில்லையென்பது நீடித்து நிலைத்துவரும் இழுக்காகும். புத்தசமயம் மிகவும் விருத்தியடைந்த நாடாகும். இலங்கையில் மதுபானம் எற்கனவே தடுக்கப்பட்டிருக்க வேண்டும். அதற்குமாருக அரசினர் அதை விருத்திசெய்ய உபாயங்களும் வழிகளும் கையாள்கின்றனர், பெருந்தொகைப் பணம் செலவுசெய்து சாராயம் வடிப்பதற்கு இயந்திரங்கள் தருவிப்பதில் அளவு கடந்து ஊக்கங்காட்டுகின்றனர். இலங்கையில் வாழ்வோருள் பெரும்பான்மையோர் புத்தசமயிகளும் சைவசமயிகளுமாவர். இவர்கள் சமயாசாரத்துக்கு மதுபானம் விலக்குபடியானது. எனவே, சுதந்திரம் பெற்ற இலங்கை யரசினர் முதற் செய்யவேண்டிய நற்காரியம் இம் மதுவினை யொழித்தலன்ருே. அதற்குமாருக அதை விருத்தி செய்ய எத்தனங்கள் செய்வது எவ்வளவு பழிப்புக்கிடமான விஷயம், அயல்நாடாகும் இந்தியாவில் மதுநீக்கம் மிகவும் ஆர்வத்துடன் கையாளப்பட்டுவர, இலங்கையில் மாத்திரம் இக்கொடிய பாவம் ஓங்கி விருத்தியடைவதா? மேலைத் தேசத்தவரின் நாகரிகமும் பழக்கமும் எவ்வளவு இலங்கையில் வேரூன்றி விட்டதென்பது மதுபான விருத்தியிலிருந்து அறியலாம், மந்திரிமார்களும் பிரதிநிதிகளும் பொது நன்மையைக்கருதியாவது உயரிய நோக்குடன் இவ்விஷயத்தில் நடந்து கொள்ளக் கூடாதா? சன்மார்க்கமும் தூயவாழ்வும் நாட்டில் நிலைபெருவிடின் காலகதியில் நம் நாடு மிக்கப் பரிதாபநிலையை அடையுமன்ருே? மதுபானம் விருத்தியடையின் அரசினரின் வருமானமும் அதிகரிக்குந்தான். இப்பணத்துக்காக ஒழுக்கத்தை விலை பேசி விற்பதா? இனியாவது நமது அரசினர் நல்வழியில் அரசியலை நடாத்திச் செல்ல முற்படுவாராக.

## மூலதனம்

இலங்கையில் நடாத்தப்படும் தொழில்கட்கு எற்பட்ட மூலதனம் அந்நியநாடுகளிலிருந்தே பெறப்பட்டதாகும். இப்போது அரசினர் இலங்கைக்கு வெளியே பணம் போகாதிருக்க அநேக சட்டங்களை இயற்றித்தடைகள் உண்டாக்கி விட்டனர். எனவே புற நாட்டுமூலதனம் இப்போது அருகிக்கொண்டே வருகின்றது. இப்போதுள்ள மூலதனம் குறைந்து செல்லின் இலங்கையிற் பல்வேறு தொழில்களை எப்படி நடத்தவியலும் என்பதுதான் கேள்வி. இலங்கைசெல்வம்நிறைந்தநாடாகவிருப்பின் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை. ஆனல் இன்னும் பல்லாண்டுகட்குப் புற நாடுகளின் உதவியுடன்ருன் இலங்கையில் பலவகைப்பட்ட தொழில் விருத்தி கைகூடும் என்பாம். அந்நியர் தமது மூல தனத்தைக் கொண்டுவந்து தொழிலாற்ற இந்திய அரசினர் இடங் கொடுத்துள்ளார். ஆனல் பழைமை போல் தாம் நினைத்தபடி நாட்டினைக் கொள்ளையடித்துச் செல்ல இந்திய அரசினர் இடங் கொடுக்க மாட்டார். இம்முறையாக இலங்கையிலும் இடங் கொடுத்தால் என்ன தீமை வந்துவிடுமோ? இலங்கை சுதந்திரம் பெற்றவுடன் எல்லாத் துறையிலும் முதன்மை அடைவதெப்படி? அந்நியரின் உதவியை முற்ருக உதறித் தள்ளவியலாது. இலங்கையில் தொழில் நடத்தப் போதிய இயந்திரங்கள் இல்லை. அத்துடன் தொழில் வன்மை பெற்ற ஆட்களும் போதியதாயில்லை. இத் தொழில்களை நடத்துதற்கு மூலதனமும் இல்லை. இங்கிலையிற் புறநாட்டு மூலதனம் இலங்கையில் தொழிற் படவிடும் விஷயத்தில் யோசனை வேண்டியதில்லையே. இதனுல் எற்படக் கூடிய நன்மைகள் பல. அநேகர் பல்வேறு தொழில்களைக் கற்க வசதி பெறுவர். நாட்டின் செல்வமும் அதிகரிக்கும். காலவடைவில் வேண்டுமாயின் புற நாட்டினர் நமது செல்வத்தைக் கவருவதைத் தடுக்க வேண்டியதுதான். ஆனல் இப்போது இவ் விஷயத்தில் அவசரப்பட்டுத் தடைகளை அரசினர் உண்டாக்காதிருப்பாராக. இலங்கையிற் புறநாட்டு மூலதனங் கொண்டு தொழில்கள் நடத்தப்படினும் இலங்கை அரசினரின் அனுமதிப்படியே எல்லாஞ்செய்யவேண்டும். முன்னர்ப்போல் நாட்டினைக் கொள்ளையடிக்கவியலாது. மூலதனத்தில் ஒரு பாகம் இலங்கையிற் சேர்க்கப்படவேண்டு மென்றும், தொழிலாளர் இயன்றளவு இலங்கை வாசிகளாக இருக்க வேண்டுமென்றும் அரசினர் நியதி எற்படுத்தலாம். எனவே, இவ் விஷயம் அரசினரால் நன்கு கையாளப்படவேண்டியது அவசியம்.

## பண்டித நேரு

பண்டித நேரு லண்டனை விட்டு ஜினிவாவுக்கு மே 3-ந் தேதி புறப்படுகிருர் என்பது நிச்சயமாகிவிட்டது. அங்கு 2 நாட்கள் தங்கியிருந்துவிட்டு இந்தியாவுக்குப் பிரயாணமாவார்.

## பாதை ஓரத்தில்




மந்திரி ஒருவர் யாதேனும் ஒரு அபிப்பிராயத்தைத் தெரிவித்தால், அது மந்திரி சபையின் ஒருமித்த அபிப்பிராயமெனக் கொள்வதே கட்சி அரசியற் சம்பிரதாயமாகும். ஆகவேதான், மந்திரிமார் தனிப்பட்ட முறையிலே அரசாங்கத்தைப் பாதிக்கக் கூடிய அபிப்பிராயத்தைக் கூறுவதில்லை.

இலங்கையிலும் ஒரு மந்திரி சபை இருக்கின்றது. இதில் உள்ள மந்திரிமார் தங்கள் மனம் போனபடி பல்வேறு கருத்துக்களையும தெரிவித்து வருகின்றனர்.

❖

### எங்கள் பிரதமர்

சீமையிலே சாம்ராச்சிய நாட்டுப் பிரதமர்கள் அனைவரும் கூடிப் பேசுகின்றனர். மேனுட்டுப்பத்திரிகைகள் பல, நேருஜின் புத்திவன்மையைப் பற்றியும் அவருடைய ஒப்பற்ற நிர்வாகத்திறனைப்பற்றியும், உலக அரசியல் அனுபவங்களைப்பற்றியும பத்தி பத்தியாக எழுதித்தள்ளுகின்றன.

இதேபோன்று, எங்கள் பிரதமர் சேனநாயகா அவர்களும் மன்னர் தம்பதிகளுடன் விருந்துண்டார்; இளவரசி ஈன்ற குழந்தையைத் தரிசித்தார்; டப்ளின் நகருக்குச் சென்று சிங்கக்கொடியை ஏற்றினர்; என்ற பல செய்திகளை இங்குள்ள பத்திரிகைகளிற் படிக்கின்ருேம். இதுவும் கௌரவந்தானே?

❖

### பத்திரிகையாளர்

சென்றவாரம் சென்னையிலே தென்னிந்தியப் பத்திரிகையாளர் சம்மேளனத்தின் வருடாந்த மகாநாடு நடைபெற்றது. கல்கி ஆசிரியர் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அனைவரையும வரவேற்றுப் பேசும்போது, மகாநாட்டிலுள்ள ஒவ்வொருவரும் 10000 பேருக்குச் சமமானவர்கள் எனத் தாம் சென்னைப் பிரதமருக்குத் தெரிவித்தாரெனக் கூறி அவர் பின்வருமாறு அதை விளக்கினர்: டில்லியில் தென் இந்தியச் சங்கத்தில் ஸ்ரீ லங்கா சுந்தரம் என்பவர் ஒரு பிரசங்கம செய்வதற்கு ஏற்பாடாகியிருந்தது. ஸ்ரீ லங்கா சுந்தரம சங்கத்துக்குச் சென்றபோது அங்கு 6 பேர்தான் பிரசங்கத்தைக் கேட்க வந்திருந்தனர். ஆனுல் அவர்களில் ஒருவர் அ. பி. நிருபர். மறுநாட் பிரசங்கத்தைப் பல ஆயிரம் பேர் பத்திரிகைகளிற் படித்தனர் ஒரு பத்திரிகைக்காரன் பல ஆயிரம பேருக்குச் சமமானவர் என்பது இப்போது தெரிகின்றதல்லவா? (ஒரே சிரிப்பு)

❖

### ஆசிரியர் மோறேஸ்

டைம்ஸ் ஒவ் சிலோன் என்ற ஆங்கிலப் பத்திரிகை ஆரம்பத்திலிருந்து இலங்கையில் ஆங்கிலேயரால் நடத்தப்பட்டு வந்தது. பின்னர் 1947-ம ஆண்டில் அதன் நிர்வாகம் மாறியதும் பிராங் மோறேஸ் என்ற இந்தியாவின் புதல்வன் ஒருவர் அப் பத்திரிகையின் ஆசிரிய பீடத்தை அலங்கரித்து வந்தார். ஆங்கில ஆசிரியர்களும் மெச்சத்தக்கமுறையில் வெகு அற்புதமாக ஸ்ரீ மோறேஸ் பத்திரிகையை நடாத்தினர்.

பின்னர் இவ்வாண்டு முற்பகுதியில் நிர்வாகத்தில் மாற்றம் உண்டாகவே, அவர் பம்பாய் சென்று மீண்டும் டைம்ஸ் ஒவ் இந்தியா என்ற பத்திரிகையிற் சேர்ந்துகொண்டார். இப்போது இவர் அதன் ஆசிரியப் பதவியை வகித்து வருகின்ருர். ஆங்கிலேயர்களுக்கே உரித்தான ஒரு இடத்தை ஸ்ரீ மோறேஸ் பெற்றிருப்பதைக் கண்டு பத்திரிகைக்காரர்களும் ஆசிய மக்களும் பெருமைகொள்ளாதிருக்க முடியாது.

❖

### பஞ்சாங்கம்!

இவர் டைம்ஸ் ஒவ் சிலோன் பத்திரிகையை விட்டகன்றதும் இப்போது அப்பத்திரிகை மீண்டும் வெள்ளைக்காரரினதும் தோட்டத்துரைமாரினதும் பஞ்சாங்கமாக மாறி வருகின்றது. ஆகவே, இப்போது இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்கத் தமிழிலாவது ஆங்கிலத்திலாவது ஒரு தினசரிதானும் இல்லை. சமீபத்தில் தமிழர்கள் ஒரு தமிழ்த்தினசரியை ஆரம்பித்துள்ளனர். ஆனல், அதுதானும் செம்மையாக் நடைபெறுவதாயில்லை. வகுப்புவாதச் சிங்களரினதும், பாகிஸ்தான் முஸ்லீம்களினதும் பிரசாரத் தினசரிகளைப் படிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இன்று ஏற்பட்டிருக்கின்றது.

## பத்திரிகை ஆசிரியர்

### ஸ்ரீ ஜோர்ஜ் இராசையா

இலங்கைத் தமிழர்களிற் பலர் பிறநாடுகளிற் பத்திரிகை ஆசிரியர்களாகவும் விளங்கி வருகின்றனர். சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஸ்ரீ. ஜோர்ஜ் இராசையா என்ற பத்திரிகை ஆசிரியர் லண்டனிலிருந்து மலாயா செல்லும் வழியிற் கொழும்பிலும் தங்கினருர்.

மலாயாவிலுள்ள மலாயா மெயில் என்ற ஆங்கிலத் தினசரியிற் பதவி யேற்றுள்ள ஸ்ரீ இராசையா அவர்கள் 13 மாத காலம் பிரிட்டனிற் பத்திரிகைத் தொழிற் பயிற்சி பெற்றிருக்கின்ருர். வாரப் பத்திரிகைகள் உட்படத் தினப் பத்திரிகைகளையும் செவ்வனே நடாத்துவதற்காக அவர் பிரிட்டனிலுள்ள பல்வேறு பத்திரிகைக் காரியாலயங்களிலும் கடமை பார்த்திருக்கின்ருர்.

ஆரம்பத்தில் இலங்கையிலுள்ள சிலோன் ஒப்சேவர் என்ற ஆங்கிலத் தினசரியிற் பணியேற்றுப் பத்திரிகைத் துறையிற் புகுந்தார்.

லண்டனிலுள்ள பத்திரிகைக்காரர்களின் சங்கத்தில் இவர் ஒரு அங்கத்தவராக இருப்பதுடன் அநேக பல பத்திரிகை ஆசிரியர்களின் அன்பையும் பெற்றிருக்கின்ருர்.

ஸ்ரீ இராசையா கொழும்புக்கு விஜயம் செய்தபோது அவருடைய உற்ருர் உறவினர் அவரைச் சந்தித்தனர். இவருக்கு இப்போது 40 வயது. இவர் திறையதிகாரி ஸ்ரீ ரீ. பாலச்சந்திரன் அவர்களின் சகோதரனவார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

- இந்தியா -

# கௌரவமான சமவுரிமை

## இந்தியாவுக்கு வெற்றிமாலை

சாம்ராச்சியப் பிரதமர் லண்டனிற் கூடி இந்தியாவின் நிலையை ஒருபடி நிதானப்படுத்திவிட்டனர். சுதந்திரக் குடியரசாக விளங்கவிருக்கும் இந்தியா எப்படி இந்தக் குடியேற்ற நாடுகளுடன் ஒத்துழைக்கப்போகின்றதென யாவரும் விசனப்பட்டனர். இப்போது இந்தியா கௌரவத்துடன் இதில் அங்கத்தவம் பெறப்போகின்றது. இது இந்தியாவுக்குப் பெரிய வெற்றியென்றே கூறவேண்டும். பண்டிதர் நேருவின் எண்ணத்திற்குப் பிரிட்டிஷ் பிரதமர் மேஜர் அட்லியும் மற்றைய பிரதமர்களும் முற்றாக இணங்கிவிட்டனர். இந்தியா குடியரசுபெற்ற நாடாக விளங்கும். பிரிட்டிஷ் அரசரிடம் விசுவாசம் செய்ய வேண்டியதில்லை. சாம்ராச்சிய நாடுகளுக்கிடையில் தொடர்பினை நிலைநாட்டும் ஒரு குறியிலக்காகவே பிரிட்டிஷ் மன்னர் விளங்குவார். மேலும் மற்றைய சாம்ராச்சிய நாடுகள்போல் இந்தியக் குடியரசின் தலைவர் பிரிட்டிஷ் அரசரின் பிரதிநிதியாகார். தமது சொந்த அதிகாரத்தைக்கொண்டு பிரதிநிதிகளையும் தூதர்களையும் ஸ்தானிகர்களையும் நியமிப்பார். எனவே, இந்தியா பூரண சுதந்திரம் பெற்ற குடியரசாக விளங்கி மற்றைய சாம்ராச்சிய நாடுகளுடன் ஒத்துழைக்கும். மேலும் யுத்த காலங்களில் இந்தியா சாம்ராச்சிய நாடுகளுடன் சேர்ந்து நின்று யுத்தஞ் செய்ய வேண்டுமென்ற நியதியும் கிடையாது. வேண்டுமாயின் சேரலாம்; அன்றேல் சேராது விடலாம்.

### இந்தியாவின் தொடர்பு

இந்தியாவின் பிரதமராக விளங்கும் பண்டிதர் நேரு அவர்களின் கொள்கைகளைக் கண்டு அமெரிக்காவிற் சிறிது ஆவேசம் உண்டாகியிருக்கின்றது. அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய நாடுகளுடன் இந்தியா ஏன் நெருங்கிச் சேர்ந்து உழைக்க இயலாதென்று கேட்கின்றனர். இவர்கள் இந்தியாவின் நிலையை இன்னும் நன்றாக அறிந்துகொள்ளவில்லை. இந்தியா ஐரோப்பிய நாடுகட்கிடையில் ஏற்பட்ட பிணக்குகளிற் கலந்துகொள்ள விரும்பவில்லை. வல்லமை படைத்த நடுநிலைமை நாடாகவே இந்தியா விளங்கும். உலக சமாதானத்தை நிலைநாட்டும் விஷயத்தில் மிக உறுதியாக நின்று உழைக்க இந்தியா எப்போதுமே தயாராக இருக்கும். சந்தர்ப்பத்துக்கேற்றபடி நீதியையும் நடுவுநிலைமையையும் மேற்கொண்டு, இந்தியா நடக்குமென்பதிற் சந்தேகமில்லை. ஆனால் இப்போது எந்தக்கட்சியிலும், இந்தியா சேரமாட்டாது. ஆனால் வாக்குவாதங்கள் இருநாடுகள் அல்லது கட்சிகட்கிடையிற்றோன்றின் அதைச் சமாசப்படுத்த 'இந்தியா முயலும். ஆனாற் பிழையாக நடந்துகொள்ளும் நாட்டுக்கெதிராக நடபடிக்கைகள் கையாளப்படுங்கால், இந்தியா துணையாக நின்று வேண்டிய உதவி புரியும். ஆகவே, இந்தியாவின் நடுவுநிலைமையைத் தவறாக விளங்க வேண்டியதில்லை அமெரிக்கா பிரிட்டன் முதலிய நாடுகளுடன் ஒன்றுசேர்ந்து உலக சமாதானத்தை நிலைநாட்ட உறுதியாக உழைக்கும் விஷயத்தில் இந்தியா ஒருபோதும் பின்நிற்கமாட்டாது.

### கடற்படை விருத்தி

பெரிய நாடாகும் இந்தியாவின் விருத்தியும் பெருமையும் கடற்படைப் பெருக்கத்தில் மிகவுந் தங்கியுளது. எனவே, இந்திய அரசினர் இத்துறையில் அளவு கடந்த ஊக்கத்துடன் உழைக்கவேண்டியது அவசியமாகின்றது. எத்தனையோ புதிய வியாபாரக் கப்பல்களையும் யுத்தக் கப்பல்களையும் இந்திய அரசினர் விலைக்குப் பெற்றுள்ளார். இந்தியாவின் உயரிய நிலைக்கு அவை போதியதாயில்லை. இவ்வருடத்தில் புதிதாகப் பல கப்பல்கள் கட்டி முடிக்கத் திட்டமாகவிருக்கின்றது. இப்போது இந்தியாவின் பொறுப்பில் மொத்தம் நான்கு லட்சம் தொன் நிறையுள்ள கப்பல்களேயிருக்கின்றன. அடுத்து ஐந்து வருடத்துள் இருபது லட்சம் தொன் நிறையளவுக்குக் கப்பல்களைக் கட்டி முடிக்கத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. மேலும் கப்பற்றொழிலை நடத்த அரசினர் தனியே முயன்றால்சித்திவகதெய்தாது. அரசினருடன் பொதுமக்களாகவுள்ள தனவந்தர்களும் சேர்ந்து நெருங்கி யுழைக்கவேண்டும். அப்போதுதான் இந்த அவசிய முயற்சி நினைத்தபடி கைகூட இடமுண்டு. இப்போது இரண்டு புதிய வியாபாரக் கப்பல்களை விலைக்கு வாங்கி அரசினர் வியாபாரக் கம்பனியார்க்கு வழங்கியுள்ளார். அத்துடன் பத்துக்கோடி ரூபா முதலுடன் ஒரு கப்பல் கட்டும் தொழிற் சமுதாயம் அமைக்கப்படுகின்றது.

### ஆந்திர மாகாணம்

புதிதாக ஆந்திர மாகாணம் அமைக்கப்பட வேண்டுமென ஆந்திர நாட்டினர் மிகவும் நெருங்கிக் கிளர்ச்சி செய்கின்றனர். இவ்விஷயம் இன்று நேற்று ஆரம்பித்ததன்று. சென்ற இருபது வருடமாக இக்கிளர்ச்சி இருந்து வருகின்றது. மொழி வாரியாக மாகாணங்கள் அமைக்கப் படுவதைப்பற்றி ஓர் விசாரணைச் சபை சமீபத்தில் ஏற்பட்டது யாவரும் அறிந்த விஷயம். இந்த விசாரணைச் சபையினரின் அறிக்கையும் வெளியாகி விட்டது. ஆந்திர மாகாணம் அமைக்க ஒரு தடையுங் கிடையாது. ஆனால் சென்னை நகர் விஷயமாக ஆந்திரரும் தமிழரும் தமக்குள்ளே இணங்கிக் கொள்ள வேண்டியதுதான். இணங்காவிடத்துச் சென்னை நகரைப் புறம்பே விட்டுத் தமக்கு ஒரு மாகாணத்தை ஆந்திரர் அமைக்கவேண்டியதுதான். இதற்கு ஆந்திரர் இணங்குகின்றாரில்லை. சென்னை நகரைத் தமிழர் தமக்கு வேண்டுமென்கின்றனர். அரசினர் இவ்விஷயமாக விசாரணை செய்து முடிவு செய்வதாயின் அதிககாலம் பிடிக்கும். ஆகவே அவசியம் தமக்கோர் மாகாணம் வேண்டின் ஆந்திர வாசிகள் சென்னையில் தாம் வைத்த ஆசையை விட்டுப் புதியவோர் தலைநகரைத் தெரிந்து மாகாணத்தை அமைக்கவேண்டியதுதான். மேலும் சென்னை நகரில் வசிப்போருள் பெரும்பான்மையோர் தமிழர்கள். அந்நிலையில் இந்நகரை ஆந்திரர் மோகிப்பதிற் பயனில்லை.

### தொழிற்சாலைகள்

சுதந்திர இந்தியாவின் தொழில் விருத்தியின் அவசியத்தை புணர்ந்து அரசினர் இவ்விஷயத்தில் ஊக்கமாக நிற்பது போற்றப்படவேண்டிய விஷயம். இந்தியாவின் செல்வம் புறநாடுகட்குச் செல்லாது தடுப்பதற்கு ஒரேயொரு வழியுண்டு. அதாவது ஏற்ற முறையில் விரைந்து இந்தியா தொழில் விருத்தியில் ஊக்கங் காட்டுவதேயாகும். இப்போது ஒரு யந்திரத் தொழிற்சாலையை அமைப்பதற்கு இந்திய அரசினர் ஏற்பாடு செய்துள்ளார். சுவிட்ஸலந்திலுள்ள ஒரு கம்பனியாரே இவ்விஷயத்தில் வேண்டிய உதவி செய்வார்கள். இத்தொழிற்சாலை அடுத்த இரண்டு வருடத்துள் அமைக்கப்படும். இதனை அமைக்கப்படுவதற்குக் கோடி ரூபா செலவாகும். ஆனால் இததொழிற்சாலையிலிருந்து காலகதியில் வருடவீதம் ஏழு அல்லது எட்டுக்கோடி ரூபா வருமானம் வருமாம். இத்துடன் வங்காளத்திற் புகையிரதயந்திரங்களைத் தயார் செய்யும் தொழிற்சாலை யொன்றினை அமைக்கவும் ஏற்பாடாகியிருக்கின்றது. இங்கிருந்து பிரதிவருடமும் ஏறக்குறைய 120 புகையிரத யந்திரங்கள் பூர்த்தி செய்யப்பெற்று வெளியேறுமாம்.

# சர்வமத சமரசம்

## சமயத்தின் உட்பொருள்

பேராசிரியர்
**எஸ். இராதாகிருஷ்ணன்**

விஞ்ஞான சாஸ்திரத்தின் விருத்தியின் பேறாகப் போக்குவரத்து வசதிகள் மிகவும் விரும்பியவாறு விருத்தியடைந்துவிட்டன. உலக மக்கட்கிடையில் ஒற்றுமையும் கைகூடிவருகின்றது. பலவகைத்தான நாகரிகங்களைக் கொண்ட சமயங்கள் கலாசாரங்கள் என்பன ஒன்றோடொன்று நெருங்கி வாழும் சந்தர்ப்பத்தைப் பெற்றுவிட்டன. இவ்விதமாக நாகரிகம் உயர்ச்சியடைந்த இந்தச் சமயத்தில் சமயவாதிகள் நான் பெரிதா நீ பெரிதா என்ற சண்டைக்கு இடம் ஏற்படுவது எங்ஙனம்? இறுமாப்பினைத் தவிர்த்துப் பல்வேறு சமயத்தவரும் உண்மையை இலக்காகக் கொண்டு ஒருவித இணக்கத்துக்கு வருவது இச்சமயத்திற்கு ஏற்றதாகும். சமயங்கட்கிடையில் சண்டையும் வேறுபாடுகளும் இருப்பதைக் கண்டு அநேகர் சமயத்தை முற்றாகப் புறக்கணித்து வாழ ஆரம்பித்துவிட்டனர். இதற்கு உதாரணமாக ருஷிய நாட்டினையும் அதன் கொள்கைகளை ஏற்ற அயல் நாடுகளையும் எடுத்துக் காட்டலாம். சமயத்தைப் புறக்கணிக்காத அமெரிக்கா தேசத்திலும் அநேகர் லோகாயுதர்களாக யந்திரசக்தியில் மாத்திரம் நம்பிக்கை வைத்தவர்களாக வாழ்கின்றனர்.

### சமயமும் வாழ்க்கையும்

சமயத்தை மனிதன் வேண்டாமெனப் புறத்தே விடுவதெப்படி? வாழ்க்கையிலிருந்து சமயத்தைப் பிரித்தெடுப்பதெப்படி? சமயத்தோடொட்டியவாழ்க்கையை நாமெல்லாம் ஓம்பிவரவேண்டும். மிக்க கொந்தளிப்புகளும் கலக்கமும் ஏற்பட்ட இவ்வுலகில் நாம் நிதானந் தவறாது உண்மையை இலக்காகக்கொண்டுசமயத்தை ஆராய்ச்சி முறையில் மேற்கொண்டு வாழவேண்டும். பன்னெடுங் காலமாக இந்தியாவின் அனுபவத்தை நோக்கியும், அதன் சமயப் பண்பாட்டினைப் பரிசீலனை செய்தும் பார்ப்பின் அநேக உண்மைகளை அறியலாம். உலகின் பல்வேறு பாகங்களில் வாழும் மனிதர்கள் தம்மை நன்கு ஆராய்ந்து அறிந்து, மறையோர் கூறுங் குறை நிறைகளைப் பாரபட்சமின்றி நன்னோக்குடன் யோசித்து ஒழுக்கமும் கட்டுப்பாட்டுடனும் கூடிய வாழ்க்கையை மேற்கொண்டாற் பெரிய ஒற்றுமையை உலகில் நாட்டுவது இயலாத காரியமன்று.

### நோக்கம்

சமயத்தின் நோக்கம் யாது? நியாயப்படி, நிஷ்காமியமாக விவேகத்தைக் கொண்டு உண்மையை நாடியறிவதே. இந்தியர்கள் புராதன காலத்திலும் இப்போதும் இம்மையையும் மறுமையையும் இலக்காகக் கொண்டு சமயத்தை மேற்கொண்டுவந்தனர். சஞ்சலமடையும் உலகம் உய்வடைய வேண்டின் அகத்திலும் புறத்திலும் தூய்மையை மேற்கொண்ட வாழ்க்கையை மனிதர் கைக்கொள்ள வேண்டும். மிருகங்களும் மரஞ்செடிகளும் தமது சுற்றாடலுக்கு ஏற்ற முறையில் தம்மை மாற்றிக் கொள்வதுபோல் மனிதனும் தன்னைக் காலத்துக்கும் நிலைக்கும் ஏற்ப மாற்றிக்கொள்ள வேண்டும். உண்மைப் பொருளை அறிவதற்குச் சமயம் எங்கட்கு உதவிபுரியின் நாம் அந்த நித்திய வஸ்துவாகும் பரம்பொருளுடன் கலந்து ஆறுதலடையலாம். விஷயமிவ்வாறாகச் சமயங்கள் ஒன்றோடொன்று முரண்டு மாறுபட வேண்டியதில்லை.

### நடராஜத் திருவுருவம்

மனிதன் மிக ஊன்றி ஆராய்ச்சி செய்து தாமே கண்டுகொள்வதுதான் உண்மை; அதுதான் கடவுள். மனிதனை வருத்தும் துயர்களிலிருந்து விடுவிக்கப் பெற்றுச் சாந்தியடையச் செய்வது சமயம். இதுதான் உண்மையான சமயத்தின் கொள்கையாக வேண்டும். மற்றைய கிரிகைகளெல்லாம்வெளி யுடுப்புகள் போல்வன. நடராஜப் பெருமானின் விக்கிரகம் உலகம் நிலைபெறுதற்கு நடத்தப்படும் பஞ்சகிருத்திய நிலையைக் குறிப்பது. சமயத்தைக் கைவிடாது நம்பிக்கையுடன வாழ்ந்தால் உலகில் எவ்வித சங்கடங்களும் வந்தெய்தக் காரணமில்லை. உலகத்தை என்றும் வருத்திக்கொண்டிருக்கும் சங்கடங்கள் பிணிகள் நீங்கிப்போம். உண்மையான சமய பக்தியால் இறுமாப்பு ஒழிந்து, தாழ்மை உண்டாகி மற்றைய சீவன்களுடன் கருணை வைத்து ஒற்றுமையாகவும் சமாதானமுமாக வாழும் இயல்பு வந்து சேரும்.

## பல்லாண்டுத் தொடர்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராயத்தைத் தெரிவித்தபோதிலும் இந்தியச் சிக்கலை அப்படியே வைத்திருந்தால் அதில், இலங்கை அரசாங்கமும் இந்திய அரசாங்கமும் மீண்டுங் கவனஞ்செலுத்தியே ஆகவேண்டும். இலங்கை அரசாங்கம் காலக் கிரமத்தில் தனது தவறை யுணர்ந்து, இந்தியர்களுக்கு அவர்களது நியாயமான உரிமைகளை உதவத் தாமாகவே முன்வரவுங் கூடும். ஹற்றன் மகாநாட்டுத் தீர்மானம் இந்தியரை எந்த வகையிலும் பாதிக்க மாட்டாது. பிரஜா உரிமைச் சட்டத்தின்படி இந்நாட்டுப் பிரஜைகளாகப் பதிவுசெய்துகொள்ள மறுக்கும் இந்தியத் தொழிலாளரை இலங்கை என்ன செய்ய முடியும்? அவர்களைக் கூண்டோடு நாடு கடத்த முடியாது. பிரஜைகளாகப் பதிவு செய்துகொள்ளவோ, அல்லது இலங்கையை விட்டுப் போகவோ முடியாதென ஒன்பது லட்சம் இந்தியர்கள் சொல்லும்போது அந்த நிலைமையைப் பார்த்துக் கொண்டு இலங்கை அரசாங்கம் சும்மா இருப்பதற்கில்லை. இதில் ஏதாவது ஒரு சமரச முடிவுக்கு இறங்கி வந்தேயாக வேண்டும். அல்லது அவ்வளவு இந்தியர்களையுங் கப்பல் ஏற்றி நடுச் சமுத்திரத்துக்கு அனுப்பி அங்கே வைத்திருக்க வேண்டும். இலங்கையிலுள்ள இந்தியர்களை இந்நாட்டு மக்களாக இந்தியா கருதுவதால், அவர்கள் இந்தியாவுக்கு வரக்கூடாதென இந்திய அரசாங்கம் தடை செய்யலாம்.

ஆகையால் பிரஜைகளாகப் பதிவு செய்துகொள்ள மறுப்போரை இந்தியாவுக்குக் கடத்திவிடலாமென இலங்கை அரசாங்கம் நினைத்துக்கொண்டிருக்கமுடியாது.

இவ்வாறு வெட்டொன்று துண்டிரண்டுமாக ஆசிரியர் சொக்கலிங்கம் அவர்கள் தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கின்றார்.

### ஸ்ரீ சேனநாயகா

லண்டனில் நிற்கும் பிரதமர் சேனநாயகா டப்ளின் நகரத்துக்கும் விஜயம் செய்துள்ளார். அங்குள்ள தலைவர்களைக் கண்டு அவர்களுக்குத் தமது வாழ்த்துக்களைத தெரிவிப்பதற்கே தாம் டப்ளின் செல்லுவதாக ஸ்ரீ சேனநாயகா பத்திரிகை நிருபர்களுக்குத் தெரிவித்தார்.

அநேகமாகப் பிரதமர் சேனநாயகா புதன்கிழமை (4-5-49) இலங்கை வந்து சேரக்கூடும்.

## சீனத்திலே

சீனத்திற் கொம்யூனிஸ்டுகள் மகத்தான வெற்றிபெற்றுவருகின்றனர் என்ற செய்தி கிடைத்த பின்னர், தலைவர் பதவியிலிருந்து விலகிய சியாங் கே ஷேக் மீண்டும் சீனத்து மக்களைத் தட்டியெழுப்பியிருக்கின்றார். சீனத்து மக்கள் உறுதியாகநின்று போராடினால் கொமமியூனிஸ்டுகள் நாட்டின் சுதந்திரத்தை அழிக்கமுடியாதென அவர் எழுச்சிமிக்க அறிக்கையை விடுவித்துள்ளார்.

### ஸ்ரீ கே. மலையாண்டி

சுன்னாகம் தபால் நிலையத்திற் சென்ற 4 வருடகாலம் லிகிதராகக் கடமையாற்றிய ஸ்ரீ கே. மலையாண்டி இம்மாதம் முதலாந் திகதியுடன் யாழ்ப்பாணம் தபால் நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புப் பெண்களின் போக்கு

## ஸ்ரீமதி செனிவிரத்ன நிரபராதி

ஸ்ரீமதி செனிவரத்ன என்றமாது தமது கணவனைக் கொட்டாஞ்சேனையில் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டதும், மறு விசாரணையில் அப்பெண் விடுதலை பெற்றதும் வாசகர்கள் அறிந்த செய்திகளாகும்.

இப் பெண்மணிக்குப் பல்கலைக்கழகத்துமிருக வைத்திய சாஸ்திரப் பேராசிரியரின் மனைவி சிறந்தநண்பராக விளங்குகின்றார் என்பதையறியும்போது பலரும் ஆச்சரியமடையக்கூடும்.

ஸ்ரீமதிசெனிவரத்னவிடுதலை செய்யப்பட்டதும் குறித்த பேராசிரியரின் மனைவி அப் பெண்ணை வாரிஅணைத்து நீதிஸ்தலத்தினின்றும் வெளியே அழைத்துச் சென்றார். குற்றமொன்றும் செய்யாத ஒரு பெண் 17 மாத காலம் சிறை செய்யப்பட்டிருந்தமையைப் பேராசிரியரின் மனைவி பலமாகக் கண்டித்துள்ளார்; பத்திரிகைக்காரர்களுக்கு அவர் மேலுங் கூறியதாவது: ஸ்ரீமதி செனிவரத்ன விசாரணைக்கென நீதிஸ்தலத்துக்குச் செல்லும் போது கொழும்பிலே மிக மோசமான சேரியிலுள்ள காடையர்கள் சீட்டியடித்துக் கேலிசெய்தனர். இது ஒருபுறமிருக்க, ஸ்ரீமதி செனிவரத்னவைப் பற்றிக் கறுவாக்காட்டுப் பகுதியில் வசிக்கும் பெண்பாலார் இல்லாத பொல்லாத கதைகளைப் பரப்பியிருக்கின்றனர். ஸ்ரீமதி செனிவரத்னவின் வழக்குச் சம்பந்தமாக நான் உதவி நிதி திரட்டச் சென்றபோது ஆபாசமான பல வதைகளை அவர்கள் எனக்குச் சொன்னார்கள். ஸ்ரீமதி செனிவரத்னவின் கட்சியைப்பற்றி ஒன்றுமே அறிந்துகொள்ளாமல் அப் பெண்ணைத் தூற்றினர். ஆனால், இதேபெண்கள் இன்று அம்மாது விடுதலையடைந்ததும், "ஐயோ, அவர் ஒரு குற்றமுஞ் செய்யவில்லை" யென உருக்கமாகப் பேசுகின்றனர்.

இப்போது விடுதலைபெற்ற ஸ்ரீமதி செனிவரத்ன தமது வீட்டிற் சந்தோஷமாகக் காலங்கழித்து வருகின்றார். அயலவர்களும் அவர் விடுதலையடைந்ததையிட்டுப் பரவசமடைந்தனராம்.

# பாலயோகி

## ஹரிஜன சிறுவன் சமாதி எய்திய அதிசயம்

கிழக்கு கோதாவரிப் பகுதியைச் சேர்ந்த அமலபுரம் தாலுகாவில் மூமிண்டிவரம் என்னும் கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமம் ஆத்மீக சரித்திரத்தில் தனக்கே சிறப்பான ஓர் இடம் பெற்றிருக்கிறது. அந்தக் கிராமத்தில் 13 வயதுள்ள ஒரு ஹரிஜன சிறுவன் திடீரென யோக நிலையை அடைந்திருக்கிறான்! இந்தச் சம்பவம் 1946 ஜூன் 22-ந் தேதி நடந்தது. அன்று முதல் இன்றுவரை அவன் யோக சமாதி நிலையில் இருக்கிறான். யோகநிலை அடைவதற்கு முன்னால் அவன் மாடு மேய்த்து வந்தானும். இப்போது அவன் ஸ்ரீ பாலயோகி என்று வழங்கப்படுகின்றான்.

சமாதி இருந்தது முதல் இன்றுவரை, அவன் ஆகாரமோ அல்லது நீரோ உட்கொள்ளவில்லை. அவன் புலன்களைக் கட்டுப்படுத்தி இருக்கிறான். ஆகவே அவன் மலஜலம் கழிப்பதில்லை.

அவனுடைய நிறம் கறுப்பிலிருந்து பொன்னிறமாக மாறிவருகிறது. அவனுடைய மேனியில் ஒளி கலைவீசுகிறது! அந்தப் பால யோகியைப் பார்த்துப் போகிறவர்கள் அவனைத் துருவன என்றும், பிரகலாதன் என்றும் ஒப்பிடுகிறார்கள்.

சமாதி அடைந்தபிறகு அவன் கடந்த பெப்ரவரி, மார்ச் மாதங்களில் மட்டுமே, பேசியிருக்கிறான். அவன் பேசியதெல்லாம் ஆத்மார்த்திக விஷயம் பற்றியவையே. அவை புத்தகமாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

> இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

# நாவற்குடா

## கிராம முன்னேற்றச் சங்கம்

அகில இலங்கைக் கிராமமுன்னேற்றச் சங்க வாரத்தைமுன்னிட்டுஷெடியூர்க் கிராம முன்னேற்றச் சங்க விழா சமீபத்திற் கங்காணியார் கோயில் வீதியில் சங்கத் தலைவர் ஈ. இராசையா அவர்களின் தலைமையில் ஆரம்பமாயது. இசை விருந்தின் பின் பொதுக்கூட்டம் தொடங்கியது. காரியதரிசியால் சென்ற கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டது. தலைவர் விழாவின் நோக்கத்தையும் குடிசைக் கைத்தொழிலின் முக்கியத்தையும் பற்றிப் பேசினார்.

பின்வரும் பிரேரணைகள் நிறைவேறின:

1. குடியிருப்பதற்கேற்ற சுவாத்தியமும், தென்னந்தோட்டங்கள் உள்ளதுமான கடற்கரையை அடுத்திருக்கும் பூனொச்சிமுனை என்னும் கிராமத்திற்குப் போக்குவரத்துக்கேற்ற பாதை இல்லாததினால் குடியேற்றம் அருகிவருகின்றது. ஆதலால் உதவி ஸ்தலஸ்தாபன அதிபர் அவர்கள் இக்கிராமத்தை வந்து பார்த்து ஒரு பாதையைத் திறந்துதரும்படி இச்சங்கம் வேண்டுகிறன்து.

2. கிராமப் பெண்கள் தையல் வேலையில் பயிற்சி குறைந்தவர்களாய் இருப்பதனால், ஒரு தையல் ஆசிரியரை அனுப்பிப் பயிற்சியளிக்கும்படி கைத்தொழில் அதிபரை இச்சங்கம் கேட்கின்றது.

3. நாவற்குடா அரசினர் தச்சுத் தொழிற்சாலையில் சமீபத்தில் நடந்த இரட்டைக் கொலைக்குரிய காரணங்களை நன்கு ஆராய்ந்தறிந்து இனிமேலும் இவ்வித சம்பவங்கள் ஏற்படாவண்ணம் ஏற்ற நடவடிக்கைகளை எடுக்குமாறு தொழில் மந்திரியையும் தொழில் அதிபரையும் இச் சங்கம் வேண்டுகின்றது.

4. இங்கு ஆரம்பிக்கப்பட்டிருக்கும் தச்சுத் தொழிற்சாலையில், இக் கிராமத்திலும் அடுத்த கிராமங்களிலும் கிரமதா தொழிலற்ற தச்சர், கூலிவேலை செய்வோர் ஷெடி தொழிற்சாலையை நிர்வகித்து நடத்தக்கூடிய ஆற்றலுடையோர் முதலியோர் இருப்பதனால் கூடியளவு இப்பகுதியிலுள்ளவர்களையே வேலைக்கமர்த்த வேண்டும் எனத் தொழிற்பகுதி அதிகாரியைக் கேட்கின்றது.

# கம்பர் விழா

## பம்பாய்த் தமிழ்ச் சங்கம் மாதுங்கா

சென்ற ஏப்ரல் 23, 24, 25 சனி, ஞாயிறு, திங்கள்—தினங்களில் **கவிச்சக்கரவர்த்தி கம்பர் விழா** தென்னிந்திய பஜனை சமாஜத்தில் நடைபெற்றது. அவ்வமயம் பேராசிரியர் **ஸ்ரீ. அ. ஸ்ரீநிவாஸராகவன்,** (ஆசிரியர் சிந்தனை) விழாவில் கலந்து கொண்டார். இலக்கிய ஆசிரியர்கள் பலர் சிறந்த சொற்பொழிவுகள் ஆற்றினர்.

# அன்னும் சக்கரவர்த்தி

## இரகசிய விஜயம்

அன்னும் சக்கரவர்த்தி போடேய் பிரான்ஸிலிருந்து வியட்னாமுக்குச் செல்லும் வழியில் சென்ற திங்கள் இலங்கைக்கு விஜயம் செய்து கொழும்பில் 13 மணி நேரம் தங்கியிருந்து விட்டு அதே இரவு 11 மணிக்கு விமானத்தில் வியட்னாமுக்குப் பிரயாணமானார். அவர் கட்டுநாயகா விமான நிலயத்தில் வந்திறங்கியது முதல், திரும்பவும் இங்கிருந்து பிரயாணமாகும் வரை, அவருடைய விஜயம் பரமரகசியமாகவே யிருந்தது. அவருடன் சாதாரண உடையணிந்த பிரெஞ்சு இரகசியப் பொலீசாரும் இலங்கை இரகசியப் பொலீசாரும் ஆயுத பாணிகளாய் இருந்தனர்.

சக்கரவர்த்தியை ஸ்தல ஸ்தாபன மந்திரி பண்டாரநாயகா காலிமுக விடுதியிற் சந்தித்துச் சுமார் கால்மணி நேரம் சம்பாஷித்தார். இரு நாடுகளுக்குமிடையில் நல்லுறவு நிலவுமென்று எதிர்பார்ப்பதாக சக்கரவர்த்தியிடம்தெரிவித்துக்கொண்டதாக மந்திரி பண்டாரநாயகா பின்னர் பத்திரிகைக் காரர்களுக்குத் தெரிவித்தார்.

# குடியை நீக்கும் பணி

## அக்கரைப்பற்று முன்மாதிரி

சென்ற மாதம் 21-ந் திகதி மாலை 'புறவெசர்' கே. எஸ். எஸ். சங்கரதாஸ் சான்டோ அவர்கள் தலைமையில் அக்கரைப்பற்று ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயக்கூட்டுப்பிரார்த்தனைச் சபையார் குடிஒழிக்க முயற்சி செய்தனர். சித்திரை வருடப் பிறப்பை முன்னிட்டு குடிப்பவர்களைத் தடுத்தும், குடிக்கும் மக்களுக்கு அன்பாகப் புத்திபுகட்டியும் பணியாற்றினர். இங்கே உத்தரவு பெற்ற கள்ளுக்கடைகள் இல்லை. இருந்தும் களவாகக் கள் இறக்கி ஒருவன் விற்றுவந்துள்ளான். இன்று எங்கெங்கு கள்முட்டிகள் உண்டோ அங்கெல்லாம் சென்று கள் முட்டிகளை இறக்கியும், பாளைகளை வெட்டியும் (கிட்டத்தட்ட இருபது இருக்கும்) ஊர்வலமாக 'சான்டோ' சங்கரதாஸ் கலியுக வீமன்மாதிரி முன்செல்ல ஏனையசபை அங்கத்தவரும் ஊரவர்களும் ஒன்று திரண்டு,

"குடிப்பதைத் தடுப்பதே
கோடிகோடி புண்ணியம்
அடிப்பினும் பொறுத்துநாம்
அன்புகொண்டுவெல்லுவோம்"

என்ற நாமக்கல் கவிஞர் பாடலை மனமாரப் பாடிக்கொண்டு இறை அதிகாரி காரியாலயத் [illegible] வரவேற்பு [illegible] விருந்தது. —கடிதம்

# இலங்கையர் சங்கம்

## மூவார் யோகூர் சமஞ்தானம்

### புது வருடப்பிறப்பு விழா

விரோதிஹூ சித்திரை மீ 1-ந் திகதி புதன்கிழமை பிற்பகல் மூவார் தமிழ்ப்பாடசாலையில் புது வருடப்பிறப்பு விழாக்கொண்டாட்டம் மூவார் இலங்கைச் சங்க ஆதரவின் கீழ் நடைபெற்றது. சமாதானநீதவான் எஸ். பொன்னம்பலம் எம். எஸ். வி. அவர்கள் தலைமை வகித்தார். இந்துக்கள் பலர் தேநீர் விருந்திற் கலந்து கொண்டனர். மாணவ மாணவிகள் பக்க வாத்தியங்களுடன் தோத்திரப் பாக்கள் பாடினர். மாணவி சண்முகவடிவு வைத்திலிங்கமும், மாணவன் கே. வி. பரம்சோதியும் **பெண்களுக்குச் சமஉரிமை** அவசியமா? இல்லையா? என்பதைப்பற்றி முறையே விவாதித்தனர். ஸ்ரீமதி பி. ரீ. கனகேஸ்வரி வயலின் வாசித்தார்.

ஸ்ரீ எஸ். எம். சண்முகம் அவர்கள் தமது சொற்பொழிவில் தமிழ் வித்தியாசாலையின் அத்தியாவசியத்தை எடுத்துக் கூறியதும் தலைவர் அவர்கள் வருடப் பிறப்புத தினத்தின் மகிமையைப் பற்றியும், சித்திரை மீ 1-ந் திகதியை வருட ஆரம்பமாகக் கொண்ட காரணங்களைச் சோதிடவாயிலாக எடுத்தும் சொற்பொழிவாற்றினார். இந்துக்கள் கொள்ளும் புதுவருஷம் ஏனையோர் கொள்ளும் புதுவருடம் போலாகாது வான சாஸ்திரம் பற்றிக் கொள்ளப்படும் என்றும் கூறினார்.

இலங்கைச் சங்கப் புதுவருட விழாக் காரியதரிசி ஸ்ரீமதி வ. திலகவதியம்மாளின் சார்பாக ஸ்ரீமான் குமரையா வடிவேலு அவர்கள் சங்கத்தலைவர் ச. கோ. வைத்திலிங்கம் அவர்களுடைய பேருதவிக்கும் மற்றைய அங்கத்தினர்களுடையஒத்துழைப்பிற்கும் நன்றி கூறினார்.—விமானத்தபால்

# தேகவியோகம்

## ஸ்ரீமதி கனகாம்பாள்

வண்ணார்பண்ணை பிரபல சங்கீத-கதாப்பிரசங்க- நடன வித்துவான் பிரமஸ்ரீ C. S. S. மணி ஐயர் அவர்களின் பிரிய அன்னையாரும், மஹா வித்துவான் பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்களின் பெருமகள் முறையினருமாகும் ஸ்ரீமதி கனகாம்பாள் அம்மையார் அவர்கள் சென்ற 26-4-49 செவ்வாய்க் கிழமை காலை 8 மணியளவில் சிவபதமடைந்தனர். இவருக்கு இரு புத்திரர்களும் இரு புத்திரிகளுமுளர்.

இவரது பிரிவால் துயருறும் மக்களுக்கும் இனபந்துக்களுக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவிக்கின்றேம்.

# திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூஜை

மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலையில் மறவன்புலோ கிராம முன்னேற்றச் சங்கம் சமூக சேவாசங்கம் என்பவற்றின் ஆதரவுடன் மேற்படி சுவாமிகள் குருபூஜை 23-4-49 சனிக்கிழமை மிகச் சிறப்பாக நடைபெற்றது. மேற்படி சங்கங்களின் தலைவர் திரு மு. கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமையிற் பகிரங்கக் கூட்டம் ஆரம்பமாயது. திருநாவுக்கரசு சுவாமிகளைப்பற்றி திரு ஆ. கந்தையா அவர்களும் ஆசிரியர் திரு வே. சிவசுப்பிரமணியம் அவர்களும் திரு. க. கனகசபை அவர்களும் சிறந்த சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். பின்னர் தலைவர் குருபூசையின் சிறப்பைப் பற்றி விளக்கித் தமது நிறைவுரையையும் நிகழ்த்தினர். காரியதரிசி திரு. நா. பொன்னம்பலம் அவர்கள் நாம் கைக்கொண்டொழுக வேண்டிய பல குறிக்கோள்களை எடுத்துவிளக்கித்தமது நன்றியுரையையும் கூறினார். —கடிதம்


## அறிவித்தல்

இத்தாற் சகலருமறிக:

வலிகாமம் வடக்கு, தெல்லிப்பழைக் கோவிற்பற்று, கட்டுவன் இறை, **தம்பையா — செல்லையா பெண் தங்கம்** ஆகிய நான், குறித்த எனது புருஷன் தம்பையா-செல்லையாவுடன் சில மனஸ்தாபங்கள் காரணமாகத் தற்சமயம் பிரிந்திருப்பதால் எனது பேரில் முடிந்த கொள்விலைக் காணிகளின்பேரில், குறித்த செல்லையா தனித்து எத்தகைய சாதனங்கள் முடிப்பினும் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாதென்றும், அவர் செய்யும் பற்று வரவுகளுக்கு யான் பொறுப்பாளியல்ல என்றும் அறிவிக்கின்றேன்.

இங்ஙனம்
(Sgd.) செ. தங்கம்
கட்டுவன்,
தெல்லிப்பழை, 25-4-49
[3658-iii]


# இலங்கைச் சித்த வைத்திய சங்கம்

இலங்கையிலே தற்சமயம் சித்த வைத்தியத்தைத் தகுந்த முறையில் விருத்தி செய்வதற்கும், தகுதி வாய்ந்த பரம்பரை சித்த வைத்தியர்களின் வழித்தோன்றி வைத்தியஞ் செய்துவரும் தகுதிவாய்ந்த சித்த வைத்தியர்களின் கௌரவத்தைப் பாதுகாப்பதற்கு ஆகவேண்டிய வழிவகைகளைக் காலத்துக்குக் காலஞ் செய்வதற்கும், தகுதிவாய்ந்த சித்த வைத்தியர்கள் எவ்வாறு 1941-ம் ஆண்டு 17-ம் இலக்கத்திற் பிரகடனஞ் செய்யப்பட்ட சுதேச வைத்திய சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டுமென்று அரசினருக்கு எடுத்துக் காட்டுவதற்காகவும் ஒரு சங்கத்தை ஸ்தாபிக்கும் நோக்கமாக, சில பிரபல சித்த வைத்தியர்களும், அரசினரால் அங்கீகாரம் பெற்ற சித்தவைத்திய அதிகாரப்பத்திரம் பெற்ற சில சித்த வைத்தியர்களும் சேர்ந்து ஒரு ஆலோசனைக் கூட்டத்தை 23-4-49 பிற்பகல் 5 மணிக்கு யாழ்ப்பாணம் நகர மண்டபத்திற் கூடி இலங்கைச் சித்த வைத்திய சங்கம் என்ற பெயருடன் ஒரு சங்கத்தை நிறுவ வேண்டுமெனத் தீர்மானித்தனர்.

அவ்வாறு ஸ்தாபிக்கப்படும் சங்கத்தில் அங்கத்தவர்களாகச் சேர விருப்பமுள்ள சித்த வைத்தியர்களை முன்னர் கூட்டியே அங்கத்தவர்களாகச் சேர்த்துக் கொள்வதற்காகக் கீழ் வருபவர்கள் கீழ் வரும் சங்கத் தற்காலிக உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்கள்-

**தற்காலிகத்தலைவர்:** வைத்தியர். ச. பொ. அம்பலவாணர், சுதுமலை, மானிப்பாய். **தற்காலிகக் காரியதரிசி:** வைத்தியகலாநிதி ஆ. நடராசா, சுன்னாகம். **தற்காலிகநிர்வாகசபை:** மேற்கூறப்பட்ட தற்காலிகத் தலைவர், காரியதரிசியுடன் வைத்தியர் ஏ. எம். பொன்னையா சமத்தர் எல். ஐ. எம். (சென்னை) ஒட்டகப்புலம், அச்சுவேலி; வைத்தியர் வ. முத்துக்கிருஷ்ணர், சுன்னாகம்; வைத்தியர் பெ. க. இராமலிங்கம், புலோலி, பருத்தித்துறை; வைத்தியர் எஸ். எம். பொன்னையா எல். ஐ. எம். (சென்னை) மாரிசங்கூடல், இளவாலை; வைத்தியர் எஸ். பி. அத்தனுசியார், சில்லாலை, பண்டத்தரிப்பு. சங்கத்துக்கான பிரமாணங்கள் நிறைவேற்றப் பட்டவுடன் சங்க உத்தியோகஸ்தர்கள் முறையாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.

—கடிதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மருமக்களே!**

வணக்கம். சரித்திர சம்பந்தமான கட்டுரைகளைப் பிரசுரிக்கத் தவறிவிட்டேன் என்று நீங்கள் நினைக்கக் கூடாது.

* * *

ஆசியாக்கண்டத்திலே நாகரீகம் படைத்தவர்களுள் சீனரும் பெயர்வாய்ந்தவர்கள். 6000 வருஷங்களுக்கு முன்னர் இவர்கள் சீர்திருத்தம் அடைந்திருந்தனர் என்றால் நீங்கள் நம்பமாட்டீர்கள் தான்! புத்த சமயம் சீனத்திற்குள் புகுந்தபின்னர்தான் இந்தியருடன் இவர்கள் தொடர்பு பூணத் தொடங்கினர்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் புத்த நூல்களைப் படிப்பதற்காக வந்த சீனர்களில் **பாகியன், யுவான்சிங்** முதலியோர் தங்கள் பிரயாணங்களைப் புத்தக ரூபமாக எமக்குத் தந்துள்ளார்கள்.

சீனாவிலே பல நகர் இராச்சியங்கள் இருந்தன. இவ்விராச்சியங்களுக்கு மேலாகத் **தேவகுமாரன்** என்னும் பட்டமுடைய அரசன் ஆண்டுவந்தான். சிறிய இராச்சியங்களெல்லாவற்றையும், **ஷிவான்ரி** என்னும் அரசனே ஒரு ஆட்சிக்குட்படுத்தியவன். இவனே உலக அதிசயமெனக் கருதப்படும் பெரும் மதிலைக் கட்டுவித்தான். இம் மதில் 1800 மைல் நீளமுள்ளது. உயரம் 20 அடியாகும். 100 யாருக்கொன்றாக 40 அடி உயரமுள்ள கோபுரங்கள் காணப்படுகின்றன. சிறை சென்ற கைதிகளைக்கொண்டே இப் பெரிய மதிலைக் கட்டுவித்தான். வெளியிலிருந்து எதிரிகள் சேதம் விளைவிக்காவண்ணமே கி. மு. 200 வருஷமளவில் இது கட்டப்பட்டது எனச் சொல்கிறார்கள்.

சீனரில் நான்கு சாதிகள் உள. முதலாவதாக **மண்டரின்**. இவர்கள் அறிவோர் என்னும் சாதியினர். இரண்டாவது உழவோர். மூன்றாவது கம்மாளர். நான்காவது வியாபாரிகள். எகிப்தியரைப்போலவே சீனரும் சித்திர எழுத்துக்களை உபயோகித்தனர். மூங்கில் கூர்களினால் மூங்கில் தகடுகளில எழுதி வந்தார்கள். ஏதாவது எழுத்துப்பிழை நேர்ந்தால் கத்தியால் சுரண்டியழித்தனர். **பாகியன்** எழுதிய புத்தகம் ஒருவித பட்டுத்துணியாலாக்கிய கடுதாசியில் எழுதப்பட்டதாம்.

* * *

மருமக்களே நானும் எழுதிக்கொண்டுபோனால் உங்கள் கட்டுரைகளுக்கு இடமில்லாமற் போய்விடுமல்லவா. வணக்கம்.

கேசரிமாமா

# நாடக மேடைகள்

**வி. சுப்பிரமணியம் மே.80**

கவிகள் கற்பனையில் நிகரற்றவர்கள். நாம் சாதாரணமாகக் காணுபவற்றை வேறுவிதமாகக் காணுபவர்கள். நாம் காணும் காட்சிகள் கவிகளுக்கு மனோரம்மியமாகக் காட்சி அளிக்கின்றன. ஒரு ஆற்றங்கரைக் காட்சியை கவி எவ்விதம் காணுகின்றார் பாருங்கள்:

"அசைந்தாடும் கிளைகளெல்லாம்
தந்திக் கம்பி
அவைகளைத்தன் மென்விரலால்
மீட்டும் காற்று
இசையுடனே இயங்குமொலி
பறவை கீதம்
இடைசிறுத்த நதிக்கண்ணி
நடனம் செய்ய
விசையுடனே மோதும்கற்கள்
தாளம் போட
விரைந்திடுநல் மீனினத்தின்
சலத ரங்கம்
திசையெங்கும் நோக்கிடினும்
கலைய ரங்கம்
தெவிட்டாத இன்பநிலை
இயற்கை எங்கும்."

வீணாகானங்கள் — தாளங்கள் — இன்னிசைக்கீதங்கள் — ஜலதரங்க வாத்தியங்கள் முதலிய எல்லாவற்றையும், நாட்டியக்காரியையும் — வீணை விற்பன்னர்களையும் — பாடகர்களையும் — தாளக்காரரையும் கவி இயற்கைக் காட்சியில் கண்டு களிக்கிறார்.

இது ஒரு தற்காலக் கவி கண்ட காட்சி.

இற்றைக்கு எத்தனையோ ஆண்டுகளுக்குமுன்னே தமிழ் நாட்டிலே ஒரு புலவன் (கம்பன்) ஒரு பாட்டுப் பாடியிருக்கின்றார். அவர் பாடிய பாடலைச் சிறிது அவதானித்துப் பாருங்கள்:

"தண்டலை மயில்களாடத்
தாமரை விளக்கந் தாங்க
கொண்டல்கள் முழவி னேங்க
குவளைகண் விழித்து நோக்க
தெண்டிரை யெழினி காட்டத்
தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட
மருதம்வீற் றிருக்கும் மாதோ."

நாடக மேடையில் நடனமாடுபவர்களையும் — காட்சியைக் காண வந்திருப்போரையும் கவி எங்களுக்கு இயற்கையிலேயே காட்டுகின்றார். ஒரு பக்கத்தில் பாட்டொலியும் கேட்கிறது. நாடகமேடையில் விளக்குகள் — யாழ்கள் — மத்தளங்கள் — திரைச்சீலைகள் முதலிய எல்லாப் பொருட்களும காணப்படுகின்றன. கவி நாடக மேடையின் உயிரையும் — உடலையும் ஒருங்கே காட்டுகின்றார்.

இவ்விரு கவிகளும் இயற்கையிலிருந்து, நமக்குச் சுட்டிக்காட்டிய இரு நாடகமேடைகளிலும் — நாட்டியங்களிலும் எது சிறந்ததென்பதுதான் தீர்த்தற்கரிய விசாரம்.

# விநாயகர் விடயம்

**ஆ. கணபதிப்பிள்ளை மே.12**

அன்று சனிக்கிழமை. ஈழகேசரிப் பாலர்பகுதிக்குக் கட்டுரைஎழுதவேண்டுமென்று பேனாவை எடுத்தேன். ஆனால் என்ன எழுதவேண்டும் என்பது தெரியவில்லை. சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும். சட்டியில் இல்லாவிட்டால் வருமா? சட்டென்று எல்லாவற்றையும் வைத்துவிட்டுப் புறப்பட்டுப் போனேன். ஓர் பெரிய சந்தி வந்தது. ஓர் பக்கம் வைத்தியசாலை. மறுபக்கம் வித்தியாசாலை. அடுத்த பக்கம் வாசிகசாலை. அப்பால் விடுதிச்சாலை. மறுபக்கம் ஓர் அழகான அரசமரம். உண்மையாக அரசமரம் என்றால் இப்படியல்லவா இருத்தல்வேண்டும். கதிரவனைக்கூட உள் நுழையவிடாத மரம். நானும் மரத்தின்கீழ் அமர்ந்தேன். அரசமரத்தின்முன் ஓர் பிள்ளையார் கோவில். பிள்ளைகளின் விளையாட்டிற் பிசகு வந்தாற் பிள்ளையார்தான் நீதவான். விளையாடிக்கொண் டிருந்தவர்களில் ஒருவன் திடீரென்று, "டேய்! பிள்ளையாரடா, இங்கேபாரடா அரசமரத்தில்" என்றான். உடனே எல்லோரும் எங்கேயடா! என்றவண்ணம் மரத்தை வளைந்து கொண்டனர். எல்லோரும் பார்த்தனர். ஆம், பிள்ளையார்தான். கண் இருக்கிறது; தும்பிக்கை இருக்கிறது; நெற்றிக்கண் இருக்கிறது; எல்லாம் இருக்கிறது என்றார்கள். நானும்தான் பார்த்தேன். பிள்ளையார்தான் என்று நினைத்துக்கொண்டு பார்த்தால் பிள்ளையார்தான் தென்படுவார். சரி, பிள்ளையாரைப் பார்த்தாய்விட்டது. அதைப்பற்றி மற்றவர்களின் அபிப்பிராயத்தையும அறியவேண்டுமல்லவா? ஆகவே சாப்பிட்டதும் ஒவ்வொருநாளும் அரசமரத்துக்குக் கீழேதான் காணலாம் என்னை. போவோர் வருவோர் எல்லாரும் மரத்தடியில் நின்று மண்டையில் 'டக்' என்று குட்டிப் போகின்றார்கள். பாடசாலைக் குழந்தைகள் தினம் அரைமணித்தியாலம் வரை அரசமரத்துப் பிள்ளையாருடன் சம்பாஷித்துவிட்டுத்தான் போவார்கள். இப்படியே பலநாட்கள் கடந்துவிட்டன.

ஆனால் அன்று எதிர்பாராத விதமாக ஓர் கூட்டம் வந்தது. ஆட்களைப் பார்த்ததும் எனக்கு விஷயம் புரிந்துவிட்டது. உடனே காதைத் தீட்டி வைத்துக்கொண்டேன். ஒருவன் "இந்தமொக்குதான் பிள்ளையார்" என்பார்கள் என்றான். ஆனால் என்னவோ, எனக்கு நம்பிக்கை...

உடனே மற்றவர் (பொதுவுடைமை) "'கோயிலாவதேதடா குளங்களாவதேதடா...' என்றதெல்லாம் விசர்க்கூத்து. எல்லாம்பிழைப்பிற்காகத்தான். இந்தப் பிள்ளையார் நாளைக்கு மேடையில்; பின்பு கொட்டிலில்; பின்பு கொஞ்சக்காலத்தால் ஆதிமூலத்தில் ஒருவரும் தெரியாதபடி பாலும் இளநீரும், மோதகமும் தின்பர். இதுதானா கடவுள் பக்தி. கோழி தின்டவர் கொட்டை கழுததிற் கட்டிக்கொண்டு மோ[illegible]" என்று [illegible] தொடங்கிவிட்டார்.

உடனே மற்றவர் (சரித்திரம்) "ஐசே! யூ டோன்ற் நோ ஹிஸ்றறி. ஏனி பீப்பிள் வேஷிப்ட் ட்றீஸ்" என்று ஆங்கிலத்தில் வெளுத்து வாங்கத் தொடங்கிவிட்டார்.

(மர நூல்) "உடனே இதெல்லாம் ஒன்றுமில்லை. மரங்களில் மொக்கு வருவது இயற்கை. இதற்குத்தான் தாவர சாஸ்திரம் படிக்க வேண்டுமென்று பலமுறையும் உங்களுக்குக் கூறியிருக்கின்றேன்" என்றார்.

அடுத்தபடி சயன்ஸ் "நீங்கள் பிசியோலொஜி படிக்கவில்லைப் போலும். அது படித்தாற் கண்ணாடியிற் பார்த்தமாதிரி டப்பென்று எல்லாம் புறப்பட்டுவிடும்" என்று தன் கட்சியைத் தொடங்கி முடித்தார்.

இவைகள் எல்லாவற்றையும் கேட்ட இலக்கியம் சும்மா இருப்பாரா? தொடங்கினாரே வாடைக்காற்றுடன் வரும் மழை மாதிரி. "கடவுள் தூணிலுமிருப்பார் துரும்பிலுமிருப்பார். இரணியனை அழிக்கத் தூணில் நரசிங்க அவதாரமெடுத்தார். அஃதேபோல அரசமரத் தவதாரம் யாரை அழிக்கவோ பிறந்திருக்கிறது. இந்த அவதாரம் ஐயரின் பிழைப்புக்காகவல்ல. ஆண்டிகள் ஆர்ப்பாட்டத்திற்காகவல்ல. ஆடு கோழி அருந்துவதற்காகவல்ல. ஐயன் அவதாரத்திற்காகவென்றால் ஆங்கிலப் பயித்தியகாரரை அடித்துக் கலைக்க. ஆகையால் ஆறியிருங்கள்" என்று தன் கட்சியை அழுத்தமாகக் கூறி முடித்தார்.

இப்படியே எல்லாரும் தம் தம் அபிப்பிராயத்தை அறிவிக்கின்றார்கள். ஆனால் பிள்ளையாரோ அசையாமல் அரசமரத்தில் ஆரோகணித்திருக்கின்றார். வெயிலால் வேகவுமில்லை; மழைபட்டு மடியவுமில்லை. காந்திஜீயைப்போலப் பொறுமையுடன்தான் இருக்கின்றார். போவோர்கள் போற்றிக்கொண்டும், வருவோர்கள் வணங்கிக்கொண்டுந்தான் இருக்கின்றார்கள். விடயம் இல்லை என்ற என் மனமும் விநாயகரைப்பற்றி எழுதிவிட்டது. பேனா உதவியுடன நீங்களும் விடிந்ததும் ஓர் முறை விநாயக தோத்திரம் பண்ணுங்கள். விஷயம் எழுதுவீர்கள்.

# தெரிந்ததா?

1. ஒரு வருடத்தில் எலுமிச்சை எத்தனை முறை காய்க்கிறது?
2. சீட்டாட்டம் எப்போது எங்கே கண்டுபிடிக்கப் பட்டது?
3. சீவகசிந்தாமணி செய்த புலவர் யார்?
4. பரிசுத்த அரசங்கிளை கொண்டு வந்து நடப் பட்ட இடமெது?
5. இடியேறு என்பது என்ன?
6. இலங்கையின் கால சுவாதீனத்திற்கு ஏற்ற உடை யாது?
7. எதிரொலி எழுவதன் காரணம் யாது?

(பதில் 12-ம் பக்கம் பார்க்க)

# என்ன விநோதம்பார்

- இந்தியாவையும் இலங்கையையும் தவிர வேறு எந்தத் தேசத்திலும் விளையாத பழம் என்ன தெரியுமா? தெரியாது ... அது தான் மாம்பழம்.
- எஸ்டோனியா என்னும் தேசத்திலே தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட ஒரு குற்றவாளி தூக்குமரத்தில் ஏற இஷ்டமில்லை என்றால் விஷம் சாப்பிட்டு இறந்துவிடலாம்.
- அமெரிக்காவில் 18,000 சினிமா மடுவங்கள் இருக்கின்றன.
- பிரான்சு தேசத்தில் ஒரு மனிதன் இருக்கிறான். அவனுக்கு வயது 52. ஆனால் அவனின் உயரம் 2 அடி 3½ அங்குலம் தானாம்.
- தென்னாபிரிக்காவில் இருக்கும் ஒரு பிரிவினர் மேடைமீதேறிப் பிரசங்கம் பண்ணும் போது ஒற்றைக் காலில் நின்று தான் பேச வேண்டும். தூக்கியகால் தரையிற் பட்டுவிட்டால் அவரது பிரசங்கம் முடிந்துவிட்டதென்று வந்திருந்தவர்கள் அறிந்து கொள்வார்கள்.

## பிறந்ததின வாழ்த்துக்கள்

[1-5-49—7-5-49]

மே.107. வை. மகேந்திரன்; மே.112. க. நல்லரத்தினம்; மே.114. ஆ. இரகுநாதன்; மே.136. சு. கதிர்காமநாதன்; மே.162. டி. சி. லக்ஷ்மணன்.

மேற்குறித்த எனது மருமக்கள் இன்றுபோல் இன்னும் பல்லாண்டு வாழ்வாராக.

# பதில் சொல்லுவானா?

**சு. கோகிலாதேவி—மே.139.**

ஒரு 'பஸ்' வண்டியில் ஒருவன், தனது வாயில் ஒரு சுருட்டை வைத்தபடி பிரயாணம் செய்து கொண்டிருந்தான். கொழும்பில் ஓடும் சில 'பஸ்' வண்டிகளில் சுருட்டுப் பிடிக்கக்கூடாது என்பது தான் உங்களுக்குத்தெரியுமே.

'பஸ் கொண்டக்டர்' பிரயாணியைப் பார்த்து "இங்கே புகைக்கக் கூடாது என்று தெரிந்து கொண்டும் வாயில் சுருட்டு வைத்திருக்கிறீரே" என்று கேட்டான்.

"நான் புகைக்கவில்லையே" என்றார் பிரயாணி மெதுவாக.

இதைக் கேட்ட 'கொண்டக்ட'ருக்குக் கோபம் பொங்கி வந்தது. "சுருட்டுத்தானே உமது வாயில் இருக்கிறதே. புகை பிடிக்கவில்லை யென்றால் யார்தான் நம்புவார்கள்" என்றான்.

அதற்குப் பிரயாணி "நான் காலில் செருப்பு அணிந்திருக்கிறேன். அப்படியானால் நான் நடக்கிறேன் என்று அர்த்தமாகும்" எனத்திரும்பிக்கேட்டார்.

'கொண்டக்ட'ருக்கு என்ன பதில் சொல்வதென்று புரியவில்லை. ஏனெனில் பிரயாணியின் வாயில் இருந்த சுருட்டு நெருப்புப் பற்றவையாமலே இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நமது வாசிகசாலை

**வ. ரா. மணிமலர்:** வெளியிட்டோர்: வ. ரா. மணிமலர் விழாச் சபையினர் பிரசுரம்: சக்திகாரியாலயம், 115-E, மௌபிரேயிஸ் தெரு இராயப்பேட்டை சென்னை 14. விலை: ரூ. 1-8-0.

தமிழ் எழுத்தாளன் ஒருவன் அறுபது வருஷம் உயிருடன் மரியாதையுடன் வாழ முடியுமென்பதை நிரூபித்துக் காட்டியவர் வ. ரா. என்ற **ராமசாமி ஐயங்கார்** அவர்கள். இந்தக் குதூகலத்திலே மெய்மறந்த தமிழர்கள் பலர் அவருக்கு அறுபது ஆண்டு நிறைவெய்திய தருணத்தில் ஒரு மணிமலர் சிருஷ்டித்துச் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

தமிழ்நாட்டிலே வ. ரா. வின் பேனா ஒரு சூறாவளியின் கதியில் பல மாற்றங்களைக் கொண்டுவந்திருக்கிறது. சமூக வாழ்க்கையிலுஞ் சரி, சுதந்திர இயக்கத்திலுஞ் சரி, தமிழ் இலக்கியத்திலுஞ் சரி, தமிழ் வசனநடையிலுஞ்சரி அவர் தம்முடைய கொள்கைக்கு விரோதமாகப் பாரம்பரை வழக்கமோ, இலக்கணமோ, எது குறுக்கிட்டாலும் அவருக்கு அதைப் பற்றி லட்சியமில்லை—அவற்றைத் தவிடுபொடியாக்கிப் பாதையிற் போட்டுப் பரப்பி அதன்மேல் நடந்து போய்விடுவார்" ஐயங்கார் என்ற ஜாதிப்பெயரைத் துறந்தவர் அவர்; பூணூலை அறுத்தெறிந்த பிராமணன்.

இந்த மேதாவியை அறிந்த பல தமிழ்நாட்டு எழுத்தாளர்கள் அவனை எடைபோட்டு நிறுத்து விமர்சனம் செய்கிறார்கள் இந்த மணிமலரில். தினசரி ஆசிரியராகிய டி. எஸ். சொக்கலிங்கம் அவர்கள் அதி அபூர்வமானமுறையில் வ. ரா. வின் வாழ்க்கையையும், சேவைகளையும் ஆராய்ந்து சொல்லுகிறார். அவரைத் தொடர்ந்து ஸ்ரீமான்கள் கல்கி, கி. வ. ஜகந்நாதன், ந. பிச்சமூர்த்தி, திஜா—எல்லோரும் பிரபலமான தமிழ் எழுத்தாளர்கள்—வ. ரா. வுக்குப் புகழ்மாலை சூட்டியிருக்கிறார்கள். இலங்கையின் சார்பில் இராஜ அரியரத்தினம் அவர்கள் 'சிந்தனைச்செம்மலுக்கு' எங்கள் காணிக்கையைச் செலுத்துகிறார்.

**சுவதந்திர** ஆசிரியராகிய கா. சா. சுப்பராவும், மஞ்சேரிஈஸ்வரனும் ஆங்கிலத்தில் வ. ரா. வை அழகாய் விமர்சனம் செய்திருக்கிறார்கள்.

வெள்ளி முகப்புடன் வ. ரா. வின் படங்களுட்பட அழகாக இம்மலர் வெளியிடப்பட்டிருக்கிறது.

—சி. வை.

●

**இந்திய விவசாயம்:** ஆசிரியர்: சி. குழந்தைசாமி. பிரசுரம்: பூமகள் பதிப்பகம் நாகர்கோவில் தென் திருவிதாங்கூர் விலை: ரூபா 1-0-0.

இந்தியா இயற்கை வளம் நிறைந்த ஒரு நாடு. அப்படியிருந்தும் விவசாயம் இங்கு வளம்பெறுவதாயில்லை. சுதந்திரம் பெற்றுள்ள இந்தியா இனி விவசாயத் துறையில் மிகுந்த ஊக்கமெடுத்து உழைக்க வேண்டியது அவசியமாகின்றது. இந்திய விவசாயம் என்ற இந்நூல் அரசியல் வாதிகளுக்கும் விவசாயிகளுக்கும் பயன்படும் வகையில் எழுதப்பட்டுள்ளது. அமெரிக்கா, ருஷியா போன்ற நாடுகளில் விவசாயம் எவ்வாறு முன்னேற்றமடைந்து வருகின்றதென்பதை ஆசிரியர் விளக்குவதுடன், இந்தியா இத்துறையில் வளங்குன்றியமைக்குக் காரணங்களைக் காட்டுகின்றார். அமெரிக்க விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் இதர தேசங்களிலுள்ள விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை விட மிகவும் உயர்ந்த நிலையில் இருக்கின்றது. 'சோஷலிஸ்ட்' முறைப்படி விவசாயம் நடைபெறுவதாகச் சொல்லப்படும் ருஷியாவிலுள்ள விவசாயிகளை விட அமெரிக்க விவசாயிகள் சுபிட்ச வாழ்வு நடத்துகின்றனர். இந்தியாவில் ஒரு மாகாணத்திலுள்ள நிர்வாக அதிகாரிகளின் வாழ்க்கைத் தரத்தை விட உயர்ந்த வாழ்க்கைத் தரம் அமெரிக்க விவசாயிகளுக்கு இருக்கின்றதென ஆசிரியர் இத்தகைய பல விபரங்களைக் கூறுகின்றார். இந்திய விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் படுமோசமாக இருப்பதற்குக் காரணங்களையுங் காட்டியுள்ளார்.

விவசாயச் சீர்திருத்தம் என்ற பகுதியில் விவசாயம் சம்பந்தமாகச் சென்னை மாகாணம் பற்றிய சில புள்ளி விபரங்கள் காணப்படுகின்றன.


யாழ்ப்பாண

## ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்

**The Jaffna Oriental Studies Society**

## பொதுக்கூட்டம்

**14-5-49**

கல்வி விருத்தி கருதி, 1921-ம் ஆண்டு நிறுவப்பட்ட ஷை சங்கத்துக்குப் புத்துயிர் அளித்துச் சிறந்த முறையில் நடத்துதற்கான ஆலோசனை செய்வதற்கு, 14-5-49 சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில், பொதுக்கூட்டமொன்று நடைபெறும்.

அத்தருணம் சமுகந்தந்து ஷை சங்க வளர்ச்சிக்குத் துணைபுரியுமாறு யாவரும் அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

இங்ஙனம்
அ. சரவணமுத்து
காரியதரிசி

வித்தியாகந்தோர்
யாழ்ப்பாணம்
27-4-49

[3671]


நமது வாசிகசாலையில் விமர்சனத்திற்கு நூல்கள் அனுப்புவோர் ஒவ்வொன்றிலும் இரண்டு பிரதிகள் அனுப்புதல் வேண்டும். மதிப்புரை விரும்புவோர் இதனைக் கவனிப்பாராக.

இவையனைத்தும் கட்டுரை வடிவில் ஏற்கனவே காண்டிபம் பத்திரிகையில் வெளிவந்துள்ளன.

தவறான சில பதப் பிரயோகங்களையும் அச்சுப்பிழைகளையும் நீக்கியிருக்கலாம். —இ. அ.

●

**அமுத சுரபி:** ஆண்டுமலர் 1949. ஆசிரியர்: டி. கே. சாமி, கூட்டாசிரியர்: வி. லக்ஷ்மணன். விலாசம்: 7, சுங்குராம செட்டித்தெரு சென்னை—1 தனிப்பிரதி விலை: ரூ. 1-4-0.

தமிழ் நாட்டின் சிறந்த கலைஞர்களினதும், இலக்கிய ஆசிரியர்களதும் கட்டுரைகள், கதைகள், சித்திரங்கள் என்பன தாங்கி அமுத சுரபி ஆண்டுமலர் வெளியாகியுள்ளது. இயற்கையில் ஈசனைககாணும் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள் கவியரசி சரோஜினியின் புகழையும் பாடியுள்ளார். அறிஞர்கள், எஸ். வையாபுரிப்பிள்ளை, தெ. பொ. மீனாக்ஷி சுந்தரனார், தி. சு. அவிநாசிலிங்கம் செட்டியார், சுத்தானந்த பாரதியார், பி. ஸ்ரீ பெ. தூரன், மு. வரதராசனார். பி. கோதண்டராமன் 'ஜீவா'. கா ஸ்ரீ. ஸ்ரீ; ரஞ்சன், "ஆர்வி" எம் எஸ். கமலா உட்பட வேறு பலரும் இம்மலரை அணிசெய்கின்றனர்,

பி ஸ்ரீ அவர்களின் தேசீயத் தந்தை முதல் தேசத்தந்தை வரை என்ற கட்டுரை சுதந்திரத்துக்கு வீதி அமைத்த பாரத வீரர்களின் வரலாறாக அமைந்துள்ளது.

'அமுதசுரபி' எனும் அட்சய பாத்திரம் ஆபுத்திரன் கைக்கு அணுகிய கதை சித்திரங்களுடன் விளக்கப்பட்டுள்ளது.

இலக்கியச் சுவையும், கற்பனைச் செறிவும், சித்திரப் பொலிவும் நிறைந்த இம்மலரை வரவேற்கின்றோம். நல்ல தாளில் அச்சிட்டிருந்தால் இதன் சிறப்பு மேலும் ஒருபடி உயர்ந்திருக்கும்.

●

**அரும்பு:** குழந்தைகளின் வாரப்பத்திரிகை. ஆசிரியர்கள்: நா. ஏகப்பன்; வலம்புரி—சோமநாதன். விலாசம்: காந்திபுரம், கோயமுத்தூர். ஆண்டுச்சந்தா: ரூ. 3-0-0. தனிப்பிரதி விலை: அணா 1.

குழந்தைகளுக்கான இப் புதிய பத்திரிகையில் ச. து. சுப்பிரமணிய யோகியாரின் பாடலுமொன்று வெளியாகியுள்ளது. வளரும் உள்ளங்களுக்கான எழுத்துக்கள் பூப்போல மென்மையாகவும் அப்பழுக்கற்றனவாகவும் இருத்தல் அவசியம். பணத்தைக் காட்டிக் குழந்தைகளுக்குப் பரிசுப்போட்டிகள் ஏற்படுத்துவது அவ்வளவு உசிதமல்ல.

### பின்வந்த நூல்கள்

**பெண்மனம்:** ஆசிரியர்: லக்ஷ்மி விலை: 2-4-0. தபாற் செலவு வேறு.

**செல்வம்:** ஆசிரியர்: க. சந்தானம். விலை: ரூ. 1-8-0. தபாற் செலவு வேறு.

**கோதாவரி:** பாடல்கள்—லக்ஷ்மி, விலை: அணா 6.

மேற்குறிக்கப்பட்ட மூன்று நூல்களையும் வெளியிட்டோர்: சக்திகாரியாலயம் 115-E மௌபிரேயிஸ் தெரு, இராயப்பேட்டை, சென்னை 14.

## தமிழ் வளர்ச்சிக் கழகம்

### மூன்றும் பரிசுத் திட்டம்

தமிழ் வளர்ச்சிக் கழகத்துச் செயலாளர் **ஸ்ரீ ம. ப. பெரியசாமித்தூரன்** அவர்கள் எமக்கு எழுதுவதாவது:

தமிழ் வளர்ச்சிக்கான சேவைபுரியும் நோக்கத்துடன் தமிழ்வளர்ச்சிக் கழகம் ஆண்டுதோறும் சிறந்த நூல்களுக்குப் பரிசு அளித்து வருகின்றது. அதற்கெனச் சென்ற ஆண்டு மதுரையிலும், இவ்வாண்டு திருவாரூரிலும் தமிழ்த் திருநாள் கொண்டாடியதை அனைவரும் அறிவார்கள். இப்பொழுது மூன்றாவது பரிசுத் திட்டத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. ஆதலால் 1947—48-ம் வருஷங்களில் வெளியான எல்லா நூல்களிலும் இரண்டு இரண்டு பிரதிகள் கழகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். முன்பே பல வெளியீட்டகங்களும், ஆசிரியர்களும் நூல்கள் அனுப்பியுள்ளார்கள். இதுவரை அனுப்பாதவர்கள் ஜூன் மாதம் 15-ந்தேதிக்குள் **காரியதரிசி தமிழ் வளர்ச்சிக் கழகம்,** சர்வகலாசாலைக் கட்டிடம், **சென்னை 5.** என்ற விலாசத்திற்கு அனுப்ப வேண்டும். இரண்டுபிரதிகள் அவர்கள் அனுப்பினால் அதற்குமேல் வேண்டிய இரண்டு பிரதிகளைக் கழகமே விலைக்கு வாங்கிக்கொள்ளும். அனைவரும் நூல்கள் அனுப்பி எங்களுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

●

## தமிழ் கலைக் களஞ்சியம்

### விஞ்ஞானப் பகுதி

**தமிழ் வளர்ச்சிக் கழகத்** தார்மேற் கொண்டிருக்கும் **கலைக் களஞ்சியப்** பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. பௌதீகம், ரசாயனம் அடங்கிய ஒரு தொகுதியும், தத்துவஞானம், மனத் தத்துவம், சமயம், தர்க்கம அடங்கிய மற்யுறு தொகுதியும் முதலில் வெளியிடுவதற்காக அவற்றில் எழுதப்பட வேண்டிய பொருள்களின் அட்டவணை தயாராகிவிட்டது.

சென்ற சனிக்கிழமை (23-4-49) மாலை நடந்த பௌதீக ரசாயனப் பதிப்பாசிரியர் உபசபைக் கூட்டத்திற்கு அதில் அங்கத்தினராகவுள்ள டொக்டர் கே. எஸ். கிருஷ்ணன் பிரசன்னமாயிருந்தார். பிரபல விஞ்ஞானிகளையெல்லாம் எழுதுமாறு கேட்டுக் கொள்ளலாம் என அக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. எழுதும் வேலையை உடனே தொடங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பெற்றன. காரியாலயத்தைச் சேர்ந்த உதவி ஆசிரியர்கள் சிறு சிறு பொருள்கள் பற்றி ஏற்கனவே எழுத ஆரம்பித்துவிட்டனர்.

கட்டுரைகள் எல்லாம் அடுத்த மூன்று மாதங்களுக்குள் தயாராகி விடுமென எதிர்பார்க்கிறார்கள். அவை தயாரானதும் அச்சுக்குக் கொடுத்து இவ்வாண்டு முடிவிற்குள் தொகுதிகள் வெளியாகிவிடும்.


## Order Nisi

IN THE DISTRICT COURT OF JAFFNA

*Testamentary Jurisdiction* } **No. 943**

In the matter of the intestate estate and effect of the late Ratnam wife of Samuel Chellappah Sinnathurai of Urumpiray Jaffna

*Deceased.*

Samuel Chellappah Sinnathurai of Urumpiray presently of Kuala-Lumpur in Malaya by his attorney Samuel Chellappah Karalapillai of Urumpiray.

*Petitioner*

*Vs.*

1. Augusta Sironmany daughter of Sinnathurai of Urumpiray
2. Sinnathurai Jeyasingam of Urumpiray presently of Colombo
3. Ponmani daughter of Sinnathurai of Urumpiray
4. Sinnathurai Karalasingam of Urumpiray presently of Colombo
5. Grace Mahulmani daughter of Sinnathurai of Urumpiray presently of Kuala Lumpur
6. Karalar Isac Namasivayam of Thirunelvely

*Respondents*

This matter coming on for disposal before L. W. De Silva Esquire District Judge, Jaffna on the 24th day of September 1948 in the presence of Mr. A. Subramaniam, Proctor on the part of the Petitioner and the petition and affidavit of the Petitioner having been read:

It is ordered that the 6th respondent be appointed Guardian ad Litem over the minors the 1st to 5th respondents above-named and the Petitioner be appointed as administrator and Letters of Administration be issued to him accordingly as the lawful husband of the deceased, unless the respondents or any other persons shall appear before this Court on the 22nd day of October 1948 and show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

This 24th day of September 1948
(Sgd.) **R. R. Selvadurai**
District Judge

22-10-48
Time to show cause extended to 26-11-48
Itd. R. R. S.
D. J.

26-11-48
Time to show cause extended to 9th May 1949
Itd. R. R. S.
D. J.

[3669—ii]


## மட்டுவில் வடக்கு முத்துமாரி அம்மன் கோயில்

மட்டுவில் வடக்கில் எழுந்தருளிருக்கும் முத்துமாரியம்மன் கோயிலைச் சீர் திருத்தி நன்னிலையில் நடத்தும் நோக்கத்துடன் 22-4-49 வெள்ளிக்கிழமை சாயந்தரம் மேற்படி கோயில் வளவில் ஒரு பொதுக் கூட்டம், இறை வணக்கத்துடன், ஆசிரியர் வ. நமசிவாயம் அவர்கள் தலைமையில் ஆரம்பமாயிற்று.

தலைவர் அவர்கள் கூட்டம் கூடியதன் நோக்கத்தையும், மேற்படி ஆலயத்திற்காக என்ன வேலைகள் செய்யவேண்டுமென்பதையும் எடுத்துக் கூறினர்.

திரு. க. இராமலிங்கம் அவர்கள் கோயிலின் தற்போதைய நிலைமையையும் இனிச் செய்ய வேண்டிய கடமையையும் சுருக்கமாகக் கூறினர். மூன்றாவதாக மேற்படி ஆலயத்தைத் திறம்பட நடாத்துவதற்கு ஒரு நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது. திரு. வ. நமசிவாயம தலைவராகவும் திரு. வி. குமாரசாமி உபதலைவராகவும் தெரிவு செய்யப்பட்டனர். காரியதரிசி திரு. சி. விசுவர், உபகாரியதரிசி திரு. க. இராமலிங்கம்; தனாதிகாரி: திரு. இ. அருணாசலம், உப தனாதிகாரி: திரு. சு. கணபதிப்பிள்ளை.

—கடிதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸ்தமன வேளை

பரணி

## தொடர் கதை

### 3. சாம்பசிவனின் ஏமாற்றம்

**அங்கே விழுந்து கிடப்பது** பொலீஸ் சேவகர்களின் தலைவன் சாம்பசிவன்தான் என்பதை உணர்ந்த உதவிப் பரிசோதகர் சீதாபதியின் மனதை இன்னுமிரண்டு விஷயங்களும் கவர்ந்தன. அவை தரையிலே பதிந்திருந்த ஒரு பெரிய மோட்டார் வண்டிச் சக்கரங்களின் சுவடுகளும், அதிலே சொட்டுச் சொட்டாக இரத்தத் துளிகள் தேங்கி நின்றதும்தான்.

இரத்தத்துளிகளைக் கண்டதும் சீதாபதி பதைத்துப் போய் சாம்பசிவத்தருகில் ஓடிச் சென்று கவனித்தார். அவர் எதிர் பார்த்தது போலவே அவனது தலையில் ஒரு சிறிய காயமும் அதிற் சொட்டுச் சொட்டாகக் கசிந்த இரத்தமும் காட்சிதந்தன. ஒரு கணம் செய்வதென்னவென்று தெரியாமல் திகைத்து நின்ற பிறகு சட்டென்று 'சாம்பசிவனுடன் துணையாக வேறு யாராவது பொலீஸ்காரர்கள் வந்திருப்பார்கள்' என்ற எண்ணம் உதிக்கவே, தன்னிடமிருந்த 'பொலீஸ் விசிலை' எடுத்து ஊதினார்.

அவர் ஊதி முடிப்பதற்குள் குன்றுக்கு அந்தப் பக்கத்திலிருந்தும் 'விசில்' கேட்டது. மறுகணம் இரண்டு பொலீஸ் சேவகர்கள் தட தடவென்று ஓடிவந்தார்கள். சேவகர்கள் தலைவன் விழுந்து கிடப்பதையும், அவன் தலையிலிருந்து இரத்தம் கசிவதையும், அருகில் உதவிப்பரிசோதகர் நிற்பதையும் கண்டபோது அவர்களது முகத்திலே முதலில் அச்சமும் திகைப்பும் தான் தோன்றின.

"இவர் ஏன் இப்படி விழுந்து கிடக்கின்றார்?" என்று அதட்டினார் சீதாபதி.

ஒரு சேவகனின் முகத்திற் பயத்துடன், "தெரியவில்லையே எசமான்!" என்றபோது அவனது வார்த்தையிலும் அச்சம் தொனித்தது.

"ஏன் தெரியாமற் போயிற்று?" என்று உதவிப்பரிசோதகர் மறுபடியும் அதட்டினார்.

"இல்லை எசமான்! நாங்கள் இருவரும் கட்டளைப்படி மலைக்கு அந்தப் பக்கம் நின்றோம்"

"என்ன முட்டாள்கள்... மோட்டார் வண்டிச் சத்தமித்தம் கூட உங்கள் காதில் விழவில்லையா?"

"விழுந்தது!"

"அப்படியானால் மோட்டார் எங்கே போகிறதென்பதைக் கூடக் கவனிக்கவில்லையா?"

"இல்லை"

"ஏன் என்பதையும் சொல்லித் தொலையுங்களேன்!"

"கோவிக்கவேண்டாம் எசமான். இங்கே இவர் நின்றார். எங்களை, தேவையானால் 'விசில்' ஊதுவார் என்று எதிர்பார்த்திருந்தோம்!"

"நல்ல கொண்டிச் சாக்கு!" என்றார் உதவிப்பரிசோதகர். பிறகு, "அதெல்லாம் பிறகு பார்த்துக்கொள்ளலாம். இப்போது இவரைத் தூக்கிக் கொண்டு வாருங்கள்!" என்றார்.

சரியான நடுநிசியில் கடிகாரம் பன்னிரண்டுமணி அடிக்கும் தருணத்தில் நாம் மாலையிற் கண்ட காட்சி மறுபடியும் தென்படுகின்றது. மூர்த்தி, உதவிப்பரிசோதகர் சீதாபதி, மற்றும் பொலீஸ்காரர்கள் யாவரும் நிற்கிறார்கள். பொலீஸ் சேவகத் தலைவன் சாம்பசிவனும் தலைக் காயத்துக்கு ஏதோ கட்டிக் கொண்டு அங்கே நிற்கின்றான்.

"சாம்பசிவம்! இன்றைக்கு முன்னிரவில் அந்தக் குன்றினடிவாரத்தில் நடந்த விஷயத்தை அறிய நம் தலைவர் மிகவும் ஆவலாயிருக்கின்றார்!" என்கிறார் உதவிப்பரிசோதகர்.

சாம்பசிவன் சொல்லிக்கொண்டிருக்கும் போதே அந்தச் சம்பவங்கள் அவன் மனதில் அப்படியே சினிமாப்படம் போலத் தோன்றுகிறது.

சாமபசிவனும் இரண்டு பொலீஸ்காரர்களும், உதவிப் பரிசோதகர் கட்டளையிட்ட உடனேயே அக்கட்டளையை நிறைவேற்றப் புறப்பட்டு விட்டார்கள். அப்போது சூரியாஸ்தமனவேளை அவர்கள் இரண்டு மைல் தூரம் நடந்து வந்து புகையிரதவீதியை அடைந்து, அங்கிருந்து 'ரயில்' பாதை வழியாக ஒரு மைல் தூரத்தைக் கடந்து மலையை நெருங்குவதற்குள் சூரியன் அஸ்தமித்துச் சொற்ப நேரமும் கழிந்து விட்டது. சாம்பசிவனும், மற்ற இருவரும் அந்த மலையை ஒரு தடவைக்கு இரு தடவையாகச் சுற்றிப் பார்த்தார்கள். மலையின் மேலும் ஏறிப் பார்த்துவிட்டார்கள். சந்தேகம் தரும் விஷயமொன்றும் அகப்படவில்லை. அவர்கள் மலையில் ஏறும்போது வானிலே நட்சத்திரங்கள் சிதறிக் கிடந்ததால் அவற்றின் வெளிச்சமாவது இருந்தது. இறங்கும் போதோ கரிய இருட்டாயிருந்தது. நட்சத்திரம் ஒன்றையும் காணோம்! கரிய மழை மேகங்கள் அவற்றை மறைத்திருந்தன.

சாம்பசிவனும், பொலிஸ் சேவகர்களும் குன்றினடிவாரத்தில் யோசித்துக்கொண்டு நிற்கும்போதே 'ரயில்' வண்டி ஊதும் சத்தம் கேட்டது. பொலிஸ்காரர் இருவரையும் மலைக்கு மறுபக்கத்தைக் கவனித்துக்கொள்ளும்படி அனுப்பிவிட்டு இந்தப்பக்கத்தில் நின்றான் சாம்பசிவன்.

அவன் தனித்து நின்றபோதிலும் காரியத்திலேயே கண்ணாயிருந்ததால், தனது 'லைட்' வெளிச்சத்தில் ஒரு பெரிய மோட்டோர்வண்டி போன அடையாளத்தைக் கண்டான். அந்த மோட்டோர் எப்போது அந்தக் குன்றைத் தாண்டிப் போயிற்று? ஒரு வேளை அவர்கள் மலை உச்சியில் நின்றபோது போயிருக்கலாம். இருட்டில் அது அவர்களுக்குத் தெரிவதற்கும், 'ஓ!' வென்று இரைந்த காற்றில், வண்டிபோன ஓசையைக் கேட்பதற்கும் நியாயமில்லை. 'ரயில்' பாதையை நோக்கியே அது போயிருப்பதாக அவன் மனதிற் பட்டது. அதைப்பின் பற்றிப் போகலாமோ, கூடாதோ என்று யோசித்து முடிப்பதற்குள்ளாகவே 'ரயில்' வண்டி நிலயத்தை விட்டுப் புறப்பட்டது. 'லைட்'டை அணைத்து விட்டு அங்கேயே நின்றான். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் ஓடிவரும் 'ரயில், வண்டி கரிய மரங்களுக்கூடே அவனுக்குத் தெரிந்தது. மூன்று விநாடி நேரத்துக்கு மட்டும்தான் தெரிந்தது.

வண்டி மறைந்த பிறகு மூன்றுநாலுநிமிடங்கள் கூடக் கழியவில்லை. அவனுக்கு மிக அருகே ஒரு மோட்டார் வண்டி வரும் சத்தம் கேட்டது. அந்தக் காரிருளில் அவ்வளவு வேகமாகச் சாரதி அந்தக் காரை எப்படித்தான் ஓட்டினானோ? ஒருவினாடிக்குள் அது சாம்பசிவனுக்கு அருகே வந்து விட்டது. 'விசில்' ஊதக்கூட அவன் நினைக்கவில்லை. அவசர அவசரமாக 'லைட்'டை எடுத்து அழுத்தினான். ஒரு மோட்டார் வண்டி தெரிந்தது சுழல்துப்பாக்கியை எடுத்தான். அதே கணத்திலே அந்த வண்டிக்குள்ளிருந்தும் ஒரு வெளிச்சம் 'பளீ'ரென்று அவன் முகத்திலேயே பாய்ந்தது! கண்கள் கூசின. ஒன்றுமே தெரியவில்லை. ஆயினும் சுழல் துப்பாக்கியைப் பக்கத்துக்கு நீட்டி ஒரு தடவை சுட்டுப்பார்த்தான். மோட்டார் வண்டியிலிருந்து ஒரு மீசைக்காரன் இறங்குவதைக் கூட அவனாற் பார்க்க முடியவில்லை. சேவகர் தலைவன் ஒரு தடவை சுட்டு முடிப்பதற்குள், அந்த மீசைக்காரன் அவன் பின்பக்கத்துக்கு வந்து சேர்ந்தான். அடுத்த நிமிஷத்தில் சாம்பசிவன் தலையில் ஒரு அடி விழுந்தது. அவ்வளவுதான்! அவன் தரையில் சாய்ந்து விழுந்தான்.

சாம்பசிவன் இவற்றை விஸ்தாரமாகக் கூறிவந்தபோது, பொலீஸ் தலைவர் மூர்த்தி மிகவும் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தார். அவன் சொல்லி நிறுத்தியதும், "என்ன முட்டாள்தனம்! உனக்கும் பொலீஸ் வேலைக்கும் வெகு தூரம். உடனே 'விஸில்' ஊதியிருந்தாற் காரியம் எவ்வளவு சுலபமாயிருக்கும்?" என்று வெறுப்புடன் சொன்னார். சேவகர்கள் தலைவன் வெட்கித் தலை குனிந்தான். பிறகு சீதாபதியைப் பார்த்து, "சரியான தகவல் கிடைத்து விட்டதே! நாளைக்கே அவர்களைக் கைது செய்து விடலாம்." என்றார். சீதாபதியும் ஒரு புன்னகை வாயிலாகத் தன் சம்மதத்தைத் தெரிவித்தார்.

மறுநாள் இரவில் அந்த மலையடிவாரத்தில் விசித்திர நாடகமொன்று நடந்தது. மாலைநேரம் மங்கிக்கொண்டிருக்கும்போதே மூன்று டசின் பொலீஸ்காரர் அங்கு வந்து சேர்ந்து விட்டார்கள். உதவிப்பரிசோதகர் சீதாபதி, அவர்களை இருவர் இருவராகப் பிரித்து மரங்களின் பின்னாலும், கற்பாறைகளின் ஓரத்திலுமாக ஆங்காங்கு பரவி நிற்கச் செய்தார். பிறகு சேவகர்கள் தலைவனிடம் தமக்கு ஒரு அவசரவேலையிருக்கிறது. அதை முடித்துக்கொண்டு சீக்கிரமே வந்து விடுகிறேன்" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து மறைந்தார். சாம்பசிவனோ நேற்றுத் தன்னை அடித்து வீழ்த்திய எதிரிகளைக் கைது செய்யப்போவதாக கனவு கண்டுகொண்டிருந்தான்.

விநாடிகளும், நிமிஷங்கள்—மணித்தியாலங்களும் வெகு வேகமாகக் கழிந்து மறைந்து போயின.

குபீரென்று 'ரயில்' வண்டியின் ஊதல் கேட்டது. இன்னும் சீதாபதி வரவில்லை. நெருக்கடியான தருணம் மட்டும் வந்து விட்டது. சில நிமிஷங்களுக்குப் பிறகு, 'ரயில்' வண்டியின் முகப்பு வெளிச்சம் அவர்களுக்குக் காட்சிதந்துவிட்டு ஒரே விநாடியில் மறைந்தது. பொலீஸ்காரர்கள் எதிரிகளை எதிர்பார்த்துக்கொண்டு தயாராய் நின்றார்கள்.

நின்று நின்று அவர்களது கால்கள் அலுத்தன. சாம்பசிவனும், அவன் ஆட்களும் பெரும் ஏமாற்றத்திலாழ்ந்தார்கள். ஏனெனில் அவர்கள் எதிர்பார்த்தபடி அங்கே ஒருவரும் வரவில்லை.

உதவிப்பரிசோதகர் சீதாபதியும் வராததுதான் எல்லாருக்கும் ஆச்சரியமாயிருந்ததுடன், கவலையாகவும் பீதியாகவுமிருந்தது.

### 4. தந்திரம் பலித்தது..?

**உதவிப் பரிசோதகர்** சீதாபதி சேவகர்கள் தலைவனிடம் விடைபெற்றுக்கொண்டு வேறொரு இடமும் போகவில்லை. நகரத்திலுள்ள தன் வீட்டுக்கே போனார்.

அவர் அன்று பகல் முழுவதும் போசனமருந்தவில்லை. இந்த 'ரயில்' களவைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் அவர் சாப்பாட்டை லக்ஷியம் செய்யவில்லை. கடைசியாகக் காட்டுப் பிரதேசத்திலுள்ள அந்த மலையடிவாரத்திற் பொலீஸ்காரர்களுக்குக் கட்டளையிட்டுக் கொண்டிருந்தபோதுதான் வயிற்றுப்பசி அவனைப்போட்டுப் பிடுங்க ஆரம்பித்தது. இன்னும் சாப்பிடாமலிருந்தால் தைரியமாக ஒரு வேலையும் செய்யமுடியாதென்பதை உணர்ந்தார். சீக்கிரமாகவே போசனத்தை முடித்துக் கொண்டு வந்துவிடுவோம் என்று எண்ணிக்கொண்டே அவர்வீட்டுக்குப்போகலானார்.

வீட்டின் கூடத்திலுட்கார்ந்து அவர் சாப்பிட்டுக்கொண்டிருந்தார். தாயார் மங்கையர்க்கரசி பரிமாறிக்கொண்டிருந்தாள். தகப்பனார் சங்கரலிங்கம்பிள்ளை ஒரு சாய்மனைக் கதிரையில் உட்கார்ந்தபடி 'ரயில்' பகுதிக் களவைப்பற்றி விசாரித்துக் கொண்டிருந்தார். அடடா! எட்டுமணிக்கு ரயில் வந்துவிடுமே! மணி எட்டரையாகிவிட்டதே! என்று சீதாபதி பதைபதைப்பாகத் துள்ளி எழுந்தார். கையை அலம்பிக்கொண்டு, சுழல் துப்பாக்கியையும் பத்திரமாயிருக்கிறதா என்று கவனித்துக் கொண்டு "போய்வருகிறேன்!" என்று சொல்லிவிட்டு மோட்டார் சைகிளில் ஏறி உட்கார்ந்தார். மறுகணத்தில் மாய வேகமாக அது அந்தஇடத்தைவிட்டு மறைந்துவிட்டது.

'மோட்டார்சைக்கிள்' சீதாபதியின் மனத்துடிப்பை அறிந்துகொண்டதுபோல மிகவும் வேகமாகப்போயிற்று! சைக்கிளின் பெரிய வெளிச்சம் அந்தக் காட்டுப் பிரதேசத்தை ஒரே ஜோதிப் பிரவாகமாக்கியது.

திடீரென்று 'மோட்டார் சைக்கிள்' தடைப்பட்டு நின்றது. அதிலிருந்தும் இறங்கிய உதவிப் பரிசோதகர் ஆச்சரியத்துடன் தரையை உற்று உற்றுப் பார்த்தார். அவரது கண்கள் அகல விரிந்து பெரிதாயின. ஆம், அங்கே ஒரு மோட்டார் வண்டியின் சுவடுகள்தானிருந்தன!

'சைக்கிள்' வெளிச்சத்தை அமுக்கிவிட்டுக்கொஞ்சநேரம் யோசித்தார். பிறகு சைக்கிளை ஒரு பெரிய காட்டு மரத்தின் பின்னால் மறைவாக நிறுத்தினார். 'லைட்'டின் துணையுடன் மோட்டார்வண்டி போன பாதையைத் தொடர்ந்து கொஞ்சத்தூரம் போனார். அடர்த்தியாக வளர்ந்திருந்த பெரிதும், சிறிதுமான மரங்களும் அந்த மரங்களுக்குச் சமீபமாகக் கரும் பாம்பைப் போல் வளைந்துகிடந்த 'ரயில்' தண்டவாளமும் அவருக்குத் தென்பட்டன.

அவர் பிறகும் 'லைட்'டை எரியச் செய்யவில்லை. இங்கே நின்றபடியே கரிய இருட்டையும் தாண்டி உற்றுப் பார்த்தார்.—அதோ! அந்த மரத்துக்குச் சமீபத்தில் இருளோடு இருளாகத் தோன்றுவது அந்த மோட்டார்வண்டியாய்த்தானிருக்க வேண்டும்.

புகையிரத நிலயத்துக்குப் பக்கத்திலிருந்து நீண்ட ஊதல் கேட்டது. 'ரயில்' வண்டியின் வெளிச்சத்தில் மோட்டார் வண்டியிலிருக்கும் 'சதிக் கூட்டத்தாருக்கு'த் தான் அங்கே நிற்பது தெரிந்துவிடுமென்பதைச் சீதாபதி நன்குணர்ந்தார். ஆகவே பழையபடி தான் மோட்டார் சைக்கிளை நிறுத்தியிருந்த மரத்தடிக்கே திரும்பிப் போனார். குன்றினருகில் விட்டுவந்த சேவகர்களைக் கூட்டி வரலாமா என்று ஒரு கணம் சிந்தித்தார். ஆனால் அதற்காகப் போனால் இந்த அருந் தருணத்தை இழந்து விட நேரிட்டாலும் நேரிடலாம்.

வண்டி புறப்படும் சத்தம் கேட்டது. அதே சமயத்தில் அவர் மூளையிலும் ஒரு புதிய யோசனை உதித்தது. மோட்டார்சைகிளின் பின்னாற்கட்டுப் பட்டிருந்த சிறிய தோற் பெட்டியைத் திறந்து ஒரு 'கருகரு' வென்ற மீசையை எடுத்தார். அதை முகத்திலணிந்துகொண்டு பொலீஸ் உடைகளைக் கழற்றி சைகிள் மேலேயே போட்டார். அவருடைய நெஞ்சம் ஏனோ 'பக் பக்' கென்று அடித்துக்கொண்டது!

இரண்டொரு நிமிஷங்களுக்கெல்லாம் மோட்டார் வண்டி உறுமும் சத்தம் உதவிப் பரிசோதகரின் காதிலே விழுந்தது. மறுகணமே

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The EELAKESARI

NATIONALIST TAMIL WEEKLY
LARGEST CIRCULATION IN CEYLON, INDIA & MALAYAN UNION

Vol. 19 | Chunnakam, Sunday, May 1, 1949 | No. 38

# அஸ்தமன வேளை

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

மோட்டார் அங்கு வந்துவிட்டது. வெளிச்சம் ஒன்றுமே அதில் எரியவில்லை. ஆனாலும் சாம்பசிவன் சொல்லி அதிசயித்தபடி மிக விரைவாகத்தான் அது வந்தது. சீதாபதி ஒரே பாய்ச்சலிற் பாதையின் மத்திக்கு வந்தார். அவரது கையிலிருந்த 'லைட்' எரிய ஆரம்பித்தது. அந்த 'லைட்'டின் பிரதிபிம்பம்போல் வண்டிக்குள்ளேயும் ஒரு 'லைட்' மின்னியது. அந்த 'லைட்' வெளிச்சத்திலே தன் கண் பார்வை மங்கத் தொடங்கிய பிறகுதான் அவரது மனசிலே திகில் தோன்ற ஆரம்பித்தது. சாம்பசிவனுக்குப் போல், தமது மண்டையிலும் அடிவிழுந்துவிடுமோ என்ற எண்ணத்தால் அவர் நெஞ்சம் பதறியது.

.......ஆனால் என்ன ஆச்சரியம்? மோட்டார் நின்றது! அதிசயத்திலும் அபூர்வ அதிசயமாக வண்டியின் சாரதி வெளியே தலையை நீட்டி, "யாரப்பா நீ? எதற்காக இங்கே நிற்கிறாய்?" என்று ஒரு கேள்வியையும் போட்டுவிட்டான்.

"இது என்ன கேள்வி? என்னைத் தெரியவில்லையா?— நான்தான் துரைசாமி......" என்று தயங்காமற் சொன்னார் சீதாபதி.

"துரைசாமியா! புதிய பேர்வழியாயிருக்கிறீரே...... எனக்குத் தெரியவில்லையே?"

"சரியாய்ப்போச்சு! இப்படித்தான் சொல்வீர்களென்று எதிர்பார்த்தேன்......"

"கிடக்கும்!...... நீர் இப்போது போவது எங்கே?"

"வேறெங்கே போவேன்? தலைவரிடம்தான்! இந்த வண்டியிலேறிக்கொண்டாற் சௌகரியம் என்று நினைத்துவிட்டேன்."

பின் ஆசனத்திலிருந்த இரண்டு மீசைக்காரர்களிலொருவன், "ஏன் 'டிரைவர்! அவர் ஏறிக்கொள்ளட்டும். நம் முதலாளியிடம் விசாரித்துக்கொண்டாற் சரியாய்ப் போய்விடும!" என்றான். "துரைசாமி! அப்படியானால் ஏறிக்கொள்ளும்" என்றான் 'டிரைவர்.'

தனது தந்திரம் இவ்வளவு சீக்கிரமாக—சுலபமாகப் பலித்துவிட்டதென்பதை நம்புவதே கஷ்டமாக இருந்தது, சீதாபதிக்கு. ஆயினும் மோட்டார்வண்டி வெகு வேகமாக ஓடிக்கொண்டிருப்பதையும், தனக்குப் பக்கத்தில் இராக்ஷதர்களைப் போன்ற இரு மீசைக்காரர்கள் உட்கார்ந்திருப்பதையும் கண்டபிறகுதான் இதெல்லாம் உண்மையென்பது நிச்சயமாயிற்று. வண்டிக்குள்ளே கவனித்தார். இரண்டு மூடைகள்—ஒரு சர்க்கரை மூட்டையும், ஒரு உழுந்து மூட்டையும் கிடந்தன. பதினெட்டுப் பட்டுப் புடவைகளைக்கொண்ட ஒரு சிப்பமுங்கூட.

சீதாபதி சிந்தனையிலாழ்ந்தார்.

வண்டியின் வேகம் குறைந்தது! கடைசியாக நின்றும் விட்டது. பாதைக்குக் கொஞ்சம் அப்பால் இருண்ட மரக்கிளை, குழைகளுக்கு மத்தியில் ஒரு வீட்டின் ஓட்டுக் கூரை தெரிந்தது. அந்த வீடு வெகுகாலமாய்க் குடியிருப்பாரில்லாமல் பூட்டியிருக்கிறதென்றும், அங்கே பேயோ, பிசாசோ, ஆவியோ உலாவுகிறதென்றும் முன்பே கேள்விப்பட்டிருந்தது உதவிப் பரிசோதகருக்குஞாபகம்வந்தது.

இத்தனை நாளாய் நாம் இந்த வீட்டைக் கவனிக்கவில்லையே என்று அவர் வெட்கினர். "......ஓஹோ! இங்கேயா இவர்கள் சாமான்களைப் பதுக்கி வைக்கிறார்கள்? நல்ல பந்தோபஸ்தான இடம்தான்! இனி நமதுபாடு தேவையில்லை."

இந்த எண்ணத்துக்கிடையில் அவரை இன்னொரு பெரும் கவலை பிடித்தது!

"......இந்த வீட்டுக்குள் இவர்களது முதலாளியிருப்பானே? அவனெதிரில் நான் போனால் என் குட்டு வெளிப்பட்டுவிடுமே! பிறகு நான் தப்ப வழியில்லை. துணைக்கும் யாருமில்லை. 'விஸி'லை ஊதுவோமா? ஊதினாலும் அது எந்தப் பொலீஸ்காரர் காதில் கேட்கப்போகிறது? அவனெதிரில் போகாமலிருந்தால் தப்பிவிடலாம்......ஆனால் அவனெதிரிற் போகாமலிருப்பதெப்படி?......" என்றெல்லாம் அவர் ஒரு நிமிஷத்துக்குள்ளாகவே எண்ணமிட்டார்.

—தொடரும்

## யாழ்ப்பாணம் ஐக்கிய லாபநிதி
1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங் கட்டுமுறை:**
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்

**தினசரிப் பற்று வரவு:**
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:**
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்:**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்:**
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்

[3658]

# டொக்டர் பட்டாபி பேட்டி

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நிருபருக்கே அவர்கள் கூறியிருக்கின்றனர். ஆகவே, அப்பத்திரிகைகளின் நடுக்கம் இனித் தணிந்திருக்குமென நம்பலாமல்லவா?

இலங்கைமக்கள், தாமேவிரும்பி இந்தியாவைக் கேட்டுக்கொண்டாலன்றி இந்தியாஒருபோதும் இலங்கையை ஒரு மாகாணமாக ஏற்றுக்கொள்ள விரும்பமாட்டாது? இந்தியா தனது காரியங்களைப் பார்ப்பதற்கே கஷ்டமுறுகையில், இலங்கையின் நிர்வாகப் பொறுப்பையும் தன் தலையிலே தூக்கிப்போட விரும்பமாட்டாது. அதுவும் விரும்பாத ஒரு பெண்ணை இந்தியா கட்டிக்கொள்ளவும் ஒருப்படாது.

## பிரிவினை மோசம்

நிற்க, இலங்கை—இந்தியச் சிக்கல் மகா மோசமாகிற்கும் இந்நாட்களில், டொக்டர் பட்டாபி போன்றவர்கள் பரபரப்பையும் பீதியையும் உண்டாக்கக்கூடிய கருத்துக்களை வெளியிடாதிருப்பது நன்று. இலங்கை பற்றி டொக்டர் தெரிவித்த கருத்து இந்திய அரசாங்கத்தின் ஆதரவைப் பெற்றிருக்கமாட்டாதென்பது திண்ணம். பட்டாபி அவர்களின் அபிப்பிராயத்தை அறிந்து, தென்னிந்தியத் தமிழர்களும், இலங்கையைப் பிரிக்கவேண்டுமென நிற்கும் ஒவ்வொரு யாழ்ப்பாணத்து அரசியல் வாதிகளும் ஒரு வேளை மகிழ்ச்சியடையக்கூடும். பிரிவினையின் விளைவாக இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள புண்கள் இன்றுந்தான் ஆறவில்லை. ஆகவே, இந்தியா பிரிவினையை ஆதரித்து நிற்கப் போவதுமில்லை. இலங்கையுடன் அவசியமில்லாமல் மீண்டப்போவதுமில்லை.

## தலைவர்கள் கூற்று

இது சம்பந்தமாக இலங்கைக்கு விஜயம்செய்த சென்னைத் தினசரி ஆசிரியர், டி. எஸ். சொக்கலிங்கம் அவர்கள் பத்திரிகை நிருபருக்குக் கூறியதாவது: "ஆச்சாரிய கிருபளானி இவ் விஷயத்தை ஏற்கனவே தெளிவுபடுத்தியுள்ளார். அவர் தெரிவித்தது போலவே, இந்தியா தனக்குள்ள பல்வேறு பிரச்சினைகளுடன் இலங்கைச் சிக்கலையும் சேர்த்துக் கட்டிக்கொள்ளத் தயாராயில்லை. இலங்கையை இணைத்துக்கொள்ளும் யோசனை இந்தியாவுக்கு இப்பொழுதுமில்லை; எப்பொழுதாவது இருந்ததுமில்லை. இதைப்பற்றிப் பிரமாதப்படுத்தவேண்டிய அவசியமே கிடையாது. டொக்டர் பட்டாபியின் யோசனைக்கு இந்தியாவில் அணுவளவு ஆதரவுதானும் இருக்கமாட்டாது."

சென்னை சட்டசபை அங்கத்தவர் ஆர். வி. சுவாமிநாதன் கூறியதாவது: "டொக்டர் பட்டாபி அவர்களின் யோசனைக்கு இந்தியக் காங்கிரஸ் அதிகார பீடத்திலோ, இந்தியப் பொதுமக்களிடையோ சிறிதளவான ஆதரவும் கிடைக்கமாட்டாது............ இந்திய காங்கிரஸ் தலைவர் என்ற முறையில்குறித்தயோசனையை அவர் தெரிவிக்கவில்லை."

சென்ற 26-ந் திகதி சென்னை சென்றடைந்த தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ காமராஜ் நாடார் இது சம்பந்தமாகத் தாம் டொக்டர் பட்டாபியுடன் கலந்தாலோசிக்கக்கூடுமெனச் சென்னையிலுள்ள பத்திரிகை நிருபர்களுக்குத் தெரிவித்தார்.

## பதில்

1. இருமுறை.
2. ஆரும்சாள்ஸ் என்னும் பிரான்சிய அரசன் மனக்கவலையைப் போக்க, 1340ல்
3. திருத்தக்க தேவர்.
4. மகாமேக மென்னும் பூஞ்சோலையில்
5. ஒரு முகிலிலிருந்து இன்னொரு முகிலுக்கு மின்சாரம்பாயும்போது பூமியிற்பாயும் மின்சார சக்தி.
6. அற்பமான பஞ்சு உடை.
7. சத்தத்தைக் கொண்டு செல்லும் காற்று தடைப்படுவதால்.

# கண்டி உபதேர்தல்

## ஸ்ரீமதி இலங்கரத்தினவுக்கு எதிர்க்கட்சியினர் ஆதரவு

கண்டித்தொகுதி உபதேர்தல் அபேட்சகராக முன்வந்திருக்கும் ஸ்ரீமதி இலங்கரத்தினவுக்கு பிரதிநிதிகள் சபை எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் ஆதரவளித்து உதவி செய்வதாக சில நாளின் முன்னதாக நடைபெற்ற அவர்களது கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

# சுய பாஷா விருத்திக் கழகம்

## வண்ணார்பண்ணை

சென்ற ஞாயிறு பிற்பகல் ஆறுமுக நாவலர் பாடசாலை மண்டபத்தில் திருவாளர் க. முருகேசு ஆசிரியர் தலைமையில் மேற்படி கழகம் ஆரம்பிக்கப்பட்டது. பின்வரும் உத்தியோகத்தினர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: க. முருகேசு, காரியதரிசி: வ. கந்தசாமி, உபகாரியதரிசி: சி. நடராசா, தனாதிகாரி: அ. கணபதிப்பிள்ளை, போஷகர்: வித்துவான் ந. சுப்பையாபிள்ளை. மேற்படி சங்கத்தாரால் வைகாசி மாதம் 2-ம் திகதி பிற்பகல் 4 மணியளவில் பாலபண்டித வகுப்பு ஆரம்பிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

# பகற் கொள்ளை வழக்கு

## விசாரணை பின்போடப்பட்டது

குதிரைச் சங்க கொள்ளை வழக்கு சென்ற சனிக்கிழமை (23-4-49) கொழும்பு பிரதம நீதிபதி ஸ்ரீ. பி. ஸ்ரீஸ்கந்தராசாவினால் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

கூகைக்கட்டிநோயினாற்பீடிக்கப்பட்டிருப்பதால்எதிரிகளில் ஒருவரான வில்ஸன் கோர்ட்டிற் பிரசன்னமாயிருக்கவில்லை. ஆகவே விசாரணை மே 10-ந் திகதிக்குப் பின்போடப்பட்டது.

— ஈழகேசரி —

ஆண்டுச் சந்தா ரூ. 6-00
தனிப்பிரதி விலை சதம் 10

சந்தா அதிபர்:
ஈழகேசரி
சுன்னாகம் :: இலங்கை

# இதுசுவர்க்க பூமி!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லுறவையும் பண்பாட்டையும் எடுத்துரைத்தனர். அத்துடன் அனைவரும் இந்திய—பாக்கிஸ்தான் பிரஜா உரிமைச் சட்டத்தின் ஒவ்வாத அம்சங்களையும் கண்டித்தனர்.

## காதுகொடுத்தார்

இந்தியத் தலைவர்கள் இலங்கை அரசாங்கத்தின் தவறான கொள்கைகளைப் பலமாக எதிர்த்தபோது, அந்தமேடையில் உதவிக் கல்வி மந்திரியான ஸ்ரீ கே. கனகரத்தினம் அவர்களும் சௌகரியமாக வீற்றிருந்து அனைத்தையுங் கேட்டு அனுபவித்துக்கொண்டிருந்தார். அரசாங்கத்தைக் கண்டித்துப் பேசியபோது குறித்த உதவி மந்திரியார் எழுந்து ஒன்றுமே பேசவில்லை. இது சம்பந்தமாக உத்தியோகப்பொறுப்பற்ற மந்திரியார் குணசிங்கா ஏதாவது நடவடிக்கை எடுப்பாரோ எனப் பலரும் அக்கூட்டத்திற் பேசிக்கொண்டனர்.

## பிரதிநிதிகளுக்கு

வியாழக்கிழமை இரவு ஸ்ரீ கிருபளானி அவர்கள் சபை முதல்வரும், மந்திரியுமான ஸ்ரீ பண்டாரநாயகா அவர்களின் அழைப்பை யேற்றுப் பிரதிநிதிகள்சபை மண்டபத்திற் சில வார்த்தைகள் பேசினார். இலங்கையிலுள்ள இந்தியர்கள் இலங்கை மக்களுடன் சேர்ந்து தங்கள் குறைகளைச் சண்டை போடாமல் தீர்த்துக்கொள்ள வேண்டுமென ஸ்ரீகிருபளானி குறிப்பிட்டார்.

இலங்கையின் சொந்தக் காரியங்களில் இந்தியத் தலைவர்கள் குறுக்கிடுவது முறையாகுமா என்று கற்குடாப் பிரதிநிதி ஸ்ரீ நல்லையா கேட்டபோது, 'இலங்கையின் உள்நாட்டு விஷயங்களிலே தலையிடும் எண்ணம் எமக்கில்லை. ஆனால் யாரேனும் யோசனை கேட்டால் நல்லதெனத் தெரிந்ததைக் கூறுவதில் தவறு ஒன்றும் இல்லையே" என ஸ்ரீ கிருபளானி பதில் கொடுத்தார்.

## ஜனநாயகம்

கொழும்பு கிறிஸ்த வாலிபர் சங்கத்தில் ஸ்ரீ கிருபளானி பேசும்போது சகல மக்களும் சுதந்திரத்தை உணரும்படி செய்து வைப்பதே ஜனநாயகமெனக் குறிப்பிட்டு அவர் தொடர்ந்து பேசியதாவது: பிரித்தானியர் இந்தியாவையும் இலங்கையையும் விட்டகன்ற போதிலும் நாட்டின் சிக்கல்கள் தீர்ந்துபோகவில்லை. காந்திஜியின் போதனைப்படி சமூகத்தில் மாறுதல்கள் ஏற்படவேண்டும். குடிசைக் கைத்தொழிலை நன்கு ஆதரித்து ஊக்கப்படுத்த வேண்டும். அப்போதுதான் நாட்டு மக்களிடையே நிரந்தர மகிழ்ச்சி நிலவும்.

ஸ்ரீமதி கிருபளானி அவர்களும் அநேக பல கூட்டங்களிற் சிறந்த சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார். இவர்கள் இருவரும் இன்று மாலை (29-4-49) விமானமார்க்கமாக இந்தியா திரும்பினர்.

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்-மயிலிட்டிதெற்கு திருமகள் நிலையம் கா. பொன்னையா அவர்களால் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் 1949-ம் ஆ மேமீ 1ல ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org